
# கல்கி



KALKI அக்டோபர் 28, 1951

4 அண


"லக்ஸ் டாய்லட் சோப்
என் சருமத்தை மிகவும் அழகாக வைத்துக் கொள்கிறது"
என்று சொல்கிறார்
லலிதா
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 290-X30 TM

# பொருள் அடக்கம்

கல்கி

மலர் 11
இதழ் 13


1951 அக்டோபர் 28

கர ஆ
ஐப்பசி 11உ


| | | | |
|---|---|---|---|
| நூற்றில் ஒன்றுதான்! | (தலையங்கம்) | ... | 3 |
| தேர்தல் திருவிளையாடல்! | ... | ... | 4 |
| உயிர் பெற்றாள் (கார்ட்டூன்) | சாஸ்திரி | ... | 5 |
| பகை தீர வகை | ... | ... | 6 |
| மனிதர்கள்தான்! | ... | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 8 |
| அட்டைப்பட விளக்கம் | ... | ... | 14 |
| இலங்கையில் மதுவிலக்கு | ரஜனி | ... | 15 |
| அபூர்வ மிருகம்! | ... | ... | 16 |
| வாழ்க குடியாட்சி! | ஸ்ரீ குனிலால் மதியா—பி. எஸ். மணி | ... | 18 |
| ஜாலபுரி இளவரசன் (பாப்பா மலர்) | கமலா | ... | 24 |
| சினிமா வேண்டாம்! | விஜயம் | ... | 26 |
| அழகுக்கு அழகு! | வி. எஸ். ஆர். | ... | 27 |
| நடன அரங்கேற்றம் | ... | ... | 31 |
| மத்திய கேந்திரம் | ஜெயமணி | ... | 33 |
| கர்நாடக சங்கீதக் கல்லூரி | ... | ... | 35 |
| உயிர் கொடுத்த தெய்வம் | கே. ஏ. எஸ். | ... | 36 |
| துர்க்கையின் சாபம் | துரோணன் | ... | 42 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... | 45 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

## போட்டி!






குடும்ப ஆரோக்கியத்தைப் பாதுகாக்க சாதாரண உணவு போதாது என்று டாக்டர்களுக்குத் தெரியும். குறைபாடுகளை நிவர்த்தி செய்து குடும்பத்தில் ஆரோக்கியமும் சந்துஷ்டியும் நிலவ ஓவல்டின் அதிகப்படியான போஷாக்கு அளிக்கிறது. இந்த ருசியான உணவு பானத்தில் சேர்த்தியான இயற்கை உணவுகளும் சுத்தமான பசுவின் ஏட்டுப்பால், பழுத்த பார்லிமால்ட், சிறந்த கோக்கோ, இயற்கை பாஸ்படேட்ஸ் பி & டி விடமின்களும் இருக்கின்றன. ஓவல்டினில் இருக்கும் போஷாக்கு மற்றும் விடமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினைப் போல் சிறந்தது வேறு கிடையாது. பெரியவர்கள் திடசாலிகளாக இருக்க ஓவல்டின் பருகவேண்டும். இது குழந்தைகளுக்கு வளர்ச்சியைத் தூண்ட உதவுகிறது. இரவில் நித்திரைக்குமுன் சாப்பிட்டால் ஆழ்ந்த சுகமான நித்திரையைத் தருகிறது. போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள் : கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லி-ட்.




# ஓ வ ல் டி ன்

குடும்ப ஆரோக்கிய பானம்.

OV. 326

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற<br>தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 12

# நூற்றில் ஒன்றுதான்!

பாரத மக்களின் க்ஷேமத்தில், சுபிட்சத்தில், முன்னேற்றத்தில் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. ஜவாஹர்லால்ஜியின் தலைமையில், திறமையில் ஜனப்பிரதிநிதிகளுக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது.

இந்த உண்மை டில்லியில் சென்ற வாரம் நடந்த ஐம்பத்தேழாவது காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஐயம் திரிபுக்கு இடமின்றி வெளியாயிற்று.

விஷயாலோசனைக் கமிட்டியிலோ, மகாசபைக் கூட்டத்திலோ நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்றைக்கூட யாரும் கண்டித்துப் பேசவில்லை. தீர்மானங்களுக்கு விரோதமாக ஒருவர்கூடக் கையைத் தூக்கவில்லை.

நம்பிக்கையினால் கொடிய நோய்களைக்கூடத் தீர்க்க முடியும் என்று மனோ தத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

முப்பத்தைந்து கோடி ஜனங்களின் ஏகோபித்த நம்பிக்கைக்குப் பாத்திரரான ஒரு மாபெரும் தலைவரைப் பாரத தேசம் அடைந்திருக்கிறது. அந்த நம்பிக்கையினால், நமது நாட்டைப் பிடித்துள்ள எந்தக் கொடிய நோயும் பறந்தோடி விடும். ஜனங்களின் ஏகோபித்த நம்பிக்கைக்கு அவ்வளவு சக்தி உண்டு அல்லவா?

*　　　*　　　*　　　*

பண்டித ஜவாஹர்லால் நேரு தமது தலைமை உரையில், காங்கிரஸ்வாதிகளிடையே ஒற்றுமை நிலவ வேண்டிய அவசியத்திலிருந்து உலக சமாதானம் வரையில் பல விஷயங்களைக் குறிப்பிட்டார்.

பாரத நாடும், பாரத நாட்டு மக்களும் மேலும் மேலும் முன்னேறிச் செல்ல வேண்டுமாயின், சுதந்திர தீபம் என்றென்றும் சுடர்விட்டு எரியும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

அதற்கு அடுத்தபடியாக இந்தியக் குடியரசு சர்க்காரின் வெற்றி, தற்போது வறுமையால் வாடும் கோடிக்கணக்கான மக்கள் சுபிட்ச வாழ்வு பெறும்படி செய்வதையே பொறுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்.

"இந்த லட்சியம் பூர்த்தியடையும் வரையில் காங்கிரஸின் கடமை முற்றுப் பெறாது. காங்கிரஸ் வாதிகளிடையே ஒற்றுமை நிலவ வேண்டும். தேச மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்பட வேண்டும். இதுதான் மிகவும் முக்கியம். இந்தியர்களுக்குள்ளே ஒற்றுமை குன்றியதால்தான் அன்னியர்கள் இந்த நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டார்கள் என்பதை நமது பண்டைய சரித்திரம் விளக்குகிறது. எனவே இனி எக்காலத்திலும் அவ்வித நிலைமை ஏற்படுவதற்கு இடம் கொடுக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்பதை ஜவாஹர்லால்ஜி தேச மக்களுக்கு மறுபடியும் ஞாபகமூட்டினார்.

வரப்போகும் தேர்தல்கள் விஷயமாகக் காங்கிரஸ் அக்கிராசனர் நேரு குறிப்பிட்டிருப்பதையும் முக்கியமாக மாகாண காங்கிரஸ் தலைவர்கள் கவனிக்க வேண்டியது அவசியம்.

தேர்தல்களைக் காட்டிலும் காங்கிரஸ் கொள்கைகள்தான் முக்கியமானவை என்று ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருக்கிறார். தேர்தல் விஷயம் காங்கிரஸின் அலுவல்களில் நூற்றில் ஒரு அம்சமேயாகும் என்று அவர் கூறியிருப்பதைக் காங்கிரஸ்வாதிகள் கவனிக்க வேண்டும்.

அதாவது மற்ற காங்கிரஸ் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

அவ்வாறு செலுத்துவார்களாயின் தேர்தல்களில் வெற்றி அவர்களைத் தேடிக் கொண்டு தானாக வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

உதாரணமாக 1937-ம் ஆண்டில் நடந்த தேர்தல்களின் முடிவைப் பார்த்துக் கொள்ளுங்கள்!

அப்போது ஏழைகளான காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து மகா ராஜாக்களும் மகா பிரபுக்களும் போட்டி போட்டார்கள். ஆனால் கடைசியாகக் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றனர். அவர்களை எதிர்த்து நின்ற பிரபுக்களில் பெரும்பாலோரும் ஜாமீன் தொகைகளைக் கூட இழக்க நேர்ந்தது.

எனவே, தேர்தலில் யோக்கியப் பொறுப்பும் தேச பக்தியும்தான் முக்கியமே யன்றி, பணமோ அல்லது வேறு அம்சங்களோ முக்கியம் அல்ல என்பதை ஜவாஹர்லால்ஜி திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லி யிருக்கிறார்.

டில்லியில் நடந்த இந்த விசேஷ காங்கிரஸ் கூட்டத்திலே எதிர்பாராத ஒரு விசேஷ சம்பவம் நிகழ்ந்து விட்டது.

காங்கிரசுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பிரும்மாண்டமான பந்தல், கூட்டம் நடப்பதற்கு முதல் நாள் தீக்கு இரையானதையே குறிப்பிடுகிறோம்.

இதைச் சிலர் ஏதோ அபசகுனமாகக் கருதலாம். ஆனால் நாம் அவ்வாறு கருதவில்லை. அதை ஒரு சுப சூசகமாகவே கருதுகிறோம்!

ஏனெனில், காங்கிரசில் படிந்துள்ள மாசுகள், கறைகள், ஊழல்கள் முதலியன அந்தத் தீயில் எரிந்து காங்கிரஸ் ஸ்தாபனம் தூய்மை பெற்று மீண்டும் மகோன்னதமாக விளங்கப் போகிறது என்பதை அச் சம்பவம் குறிக்கலாம் அல்லவா!

# தேர்தல் திருவிளையாடல்!

தர்மம் குன்றி அதர்மம் ஓங்கும்போதெல்லாம் பகவான் புதிய புதிய அவதாரம் எடுக்கிறார் அல்லவா! அது போலவே இந்தக் கலியுகத்திலே சட்ட சபைகளின் ஆயுள் முடிந்து புதிய தேர்தல் வரும்போது எல்லாம் வல்ல அரசியல் வாதிகள் புதிய புதிய அவதாரம் எடுக்கிறார்கள். அவர்களில் சிலருக்குத் திடீரென்று குறிப்பிட்ட சமூகத்தின் மீது அன்பு சுரந்து விடும். மற்றும் சிலருக்கு ஜனங்கள் படும் கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் பெருகி ஓடும். சிலர் புதிய கட்சிகளைத் தோற்றுவிப்பார்கள். சிலர் செத்துப்போன பழைய கட்சிகளுக்கு உயிர் கொடுக்க ஒற்றைக் காலால் நிற்பார்கள். சிலருக்குச் சர்க்கரை கசக்கும்; வேப்பங்காய் இனிக்கும். தேர்தல்கள் நெருங்க நெருங்க இப்படியெல்லாம் பலவித விநோதங்களைக் காணலாம்.

சென்ற நாலு வருஷங்களுக்கு மேலாக இந்திய சர்க்கார் சட்ட மந்திரி பதவியை வகித்து வந்த டாக்டர் அம்பேத்காருக்குத் திடீரென்று அந்தப் பதவி கசந்து விட்டது. அதை அவர் ராஜிநாமா செய்து விட்டு வெளியேறி விட்டார். ராஜிநாமா செய்தவர் மௌனமாக இருக்கவில்லை. நேருஜி மந்திரிசபை மீது ஓர் அத்தியாயம் குற்றச்சாட்டுகளை அடுக்கி யிருக்கிறார்.

இந்தியா பார்லிமெண்டில் அன்றிருந்து இன்று வரையில் காங்கிரசுக்குப் பரிபூரண 'மெஜாரிட்டி' பலம் இருக்கிறது. எனவே காங்கிரஸ் தலைவர்கள் கூட்டு மந்திரி சபையை அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. முற்றிலும் ஜனநாயக முறையைப் பின்பற்றும் நாடுகளில் கூட மெஜாரிட்டி பலம் உள்ள கட்சியினர் சாதாரண காலங்களில் கூட்டு மந்திரி சபையை அமைக்க உடன்பட மாட்டார்கள்.

அப்படியிருந்தும் காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரசில் எக்காலத்திலும் சேராத, காங்கிரசின் எதிரியான டாக்டர் அம்பேத்காரை மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டார்கள். மிகவும் பொறுப்பும் கௌரவமும் வாய்ந்த சட்ட மந்திரி பதவியையும் அவருக்கு அளித்தார்கள். ஏன், முப்பத்தைந்து கோடி மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியல் சாசனத்தைத் தயாரிக்கும் மகத்தான பொறுப்பையும் அவரிடம் ஒப்புவித்தார்கள். அப்படியிருந்தும் இன்று, அதாவது பார்லிமெண்டின் ஆயுள் முடியும் இந்தச் சமயத்தில், தேர்தல்கள் நடக்கப் போகும் இந்தச் சந்தர்ப்பத்தில், அவர் பதவியை ராஜிநாமா செய்தார் என்றால், அதற்கு உண்மையான காரணம் என்ன என்பதை விளக்கவும் வேண்டுமா!

* * *

டாக்டர் அம்பேத்கார் இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையைக் கூடக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். இந்தியா சுதந்திரம் பெற்ற போது உலகில் எல்லா நாடுகளும் இந்தியாவிடம் சிநேகமாக இருந்தனவாம். இப்போதோ இந்தியாவிடம் ஒரு நாடுகூட சிநேகமாக இல்லை என்கிறார் டாக்டர் அம்பேத்கார்.


இந்தியா வல்லரசுகளின் போட்டிச் சுழலில் சிக்கிக் கொள்ள விரும்பாமல், தர்ம வழியை, காந்திய வழியைப் பின் பற்றி வருகிறது. உலகத்தில் போரைத் தவிர்த்து, சமாதானத்தை நிலைநிறுத்த இந்தியா அனுஷ்டித்து வரும் வெளி நாட்டுக் கொள்கைதான் சிறந்தது என்பதை வெளிநாடுகளில் உள்ள பல பிரமுகர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். சில வெளிநாடுகளின் தாற்காலிகமான நட்பைப் பெறுவதற்காக இந்தியா நடுநிலைமையையும் தர்ம நெறியையும் கைவிட வேண்டுமென்பது டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களின் கருத்து. அப்படிக் கைவிடுவதன் பலனாகச் சில நாடுகளின் சிநேகம் ஏற்படலாம்; அதே சமயத்தில் வேறு சில நாடுகளின் பகைமையும் ஏற்படும் என்பதை மறந்துவிடக் கூடாது.

• • •

ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதாவை இந்தப் பார்லிமெண்டில் நிறைவேற்றாமல் கைவிட்டு விட்டார்கள் என்பது அம்பேத்காரின் மற்றொரு குற்றச்சாட்டு.

ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா அடியோடு கைவிடப்பட்டு விடவில்லை. புதிய பார்லிமெண்டில் அது நிச்சயமாக விவாதத்துக்கு வரும். மேற்படி சட்டத்தின் அவசியத்தை ஜவாஹர்லால்ஜி காங்கிரஸ் கூட்டத்திலும் வற்புறுத்தி யிருக்கிறார். ஹிந்து மதச் சீர்திருத்த விஷயமாக பண்டித நேருவைக் காட்டிலும் தமக்குத்தான் அதிக அக்கறை என்று டாக்டர் அம்பேத்கார் சொல்லுவதாயின், அது நகைக்கத் தக்க விஷயம். எனவே, டாக்டர் அம்பேத்கார் தாம் ராஜிநாமா செய்ததற்குக் கூறும் காரணங்கள் வாக்காளர்களை மயக்கும் தேர்தல் திருவிளையாடல்களில் ஒன்றே யொழிய வேறெதுவும் இல்லை.

[illegible]...




" திருச்சிராப்பள்ளி ஜில்லா, அரியலூர் தாலுகாவைச் சேர்ந்த கள்ளமேட்டில் ஆறு கோடி ஆண்டுகளுக்கு

# பகை தீர வகை

பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் லியாகத் அலிகானின் கோர மரணம் உலகம் முழுவதையும் திடுக்கிடச் செய்துவிட்டது. அதிலும் சமீப காலமாக ஆசியா நாடுகளில் இத்தகைய அரசியல் கொலைகள் அதிகமாகி வருவது உலக ராஜதந்திரிகளைச் சிந்தனையில் ஆழ்த்தி யிருக்கிறது.

ஜனாப் லியாகத் அலிகான் ஸ்தானத்தில், பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலாக இருந்த காஜா நாஜிமுதீன் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பாகிஸ்தான் சர்க்கார் நிதி மந்திரியாக இருந்த ஜனாப் குலாம் முகமது புதிய கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றுக் கொண்டிருக்கிறார். பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி சர் ஜபருல்லா கான் அமெரிக்காவிலிருந்து திரும்பி வருவதற்கு முன் இந்த நியமனங்கள் எல்லாம் அவசரம் அவசரமாகப் பூர்த்தியாகி விட்டது ஆச்சரியமாகவும் மர்மமாகவும் இருக்கிறது.

ஜபருல்லா கான் ராஜதந்திரத்தில் கைதேர்ந்தவர்; சர்வதேச மேடைகளில் செல்வாக்கு பெற்றவர். பாகிஸ்தானில் ஜனாப் லியாகத் அலிகானுக்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கும் ஜபருல்லா கான்தான் புதிய பிரதம மந்திரியாக வந்திருக்க வேண்டும். ஆனால் அவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படவில்லை. அவர் கராச்சிக்குத் திரும்பி வருவதற்கு முன், அவருடன் கலந்து ஆலோசிப்பதற்கு முன், பாகிஸ்தானில் புதிய நியமனங்கள் பூர்த்தியாகிவிட்டதிலிருந்து பாகிஸ்தான் தலைவர்களுக்குள் புகைச்சலும் போட்டா போட்டியும் இருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து வேறெந்த விபரீதமும் விளையாமலிருக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

* * *

லியாகத் அலிகானைச் சுட்டவன் ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்தவன் என்று வெளியாகியுள்ள பாகிஸ்தான் செய்தியை டில்லியில் உள்ள ஆப்கன் ஸ்தானிகர் மறுத்திருக்கிறார். இதைத் தவிர, லியாகத் அலிகானின் மரணத்தைக் குறித்து ஆப்கன் மன்னர், பிரதம மந்திரி, வெளிநாட்டு மந்திரி முதலியோர் அனுப்பிய அனுதாபச் செய்திகள் பாகிஸ்தானில் இருட்டடிப்புக்கு இலக்காகி விட்டதாக மேற்படி ஸ்தானிகர் வருந்துகிறார். லியாகத் அலிகானின் கோர மரணத்தைக் காரணமாகக் கொண்டு ஆப்கானியருடன் பகைமையை வளர்ப்பதற்குப் பாகிஸ்தானில் முயற்சி செய்யப்பட்டால் அது பெருந் தவறாக முடியும்.

லியாகத் அலிகான் கொலையுண்டதைக் குறித்துச் சென்ற வார இதழில் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டோம். அவ்விஷயமாக நமது மாபெரும் தலைவர்கள் அனுப்பியுள்ள அனுதாபச் செய்திகளும் நிகழ்த்தியுள்ள பிரசங்கங்களும் பாகிஸ்தான் தலைவர்கள் பலரின் மனதை உருக்கி யிருக்கின்றன. லியாகத் அலிகானின் மரணத்தால் பாகிஸ்தானுக்கு நேர்ந்த நஷ்டத்தை இந்தியா தன்னுடைய சொந்த நஷ்டமாகவே கருதி யிருப்பதி லிருந்து பாகிஸ்தான் விஷயத்தில் இந்தியாவுக்கு உள்ள நல்லெண்ணத்தைப் பாகிஸ்தான் தலைவர்களும் மக்களும் அறிந்து கொண்டிருக்கலாம்.

அதே சமயத்தில் ஸர் பிரோஸ்கான் நூன் போன்ற கொடூர வகுப்புவாதிகள் "அனுதாபத்தைக் கண்டு மயங்கி விடவேண்டாம். எதற்கும் தயாரா யிருங்கள்!" என்று எச்சரிக்கை செய்யவும் தொடங்கி யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துக்கமான சந்தர்ப்பத்திலும் இத்தகைய எச்சரிக்கை எதற்காக!

பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள துரதிர்ஷ்டத்தைக் குறித்து இந்தியத் தலைவர்களும் இந்திய மக்களும் உள்ளம் கசிந்து அனுதாபப்படுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பாகிஸ்தான் தலைவர்கள் நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்க வேண்டும். 'ஜிஹாத்' கோஷத்தையும் பகைமைப் பிரசாரத்தையும் அடியோடு விட்டொழிக்க வேண்டும். இந்தியாவுடன் நட்புரிமையை வளர்த்துக் கொள்ளவும் எல்லாத் தகராறுகளையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளவும் தீர்மானிக்க வேண்டும். பாகிஸ்தான் தலைவர்கள் இத்தகைய மனமாறுதல் அடைந்தால் இந்தியத் தலைவர்கள் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளத் தவற மாட்டார்கள் என்பது நிச்சயம்.

வட்ட மேஜை

# மனிதர்கள்தான்!

சென்ற வார "கல்கி"யில் "சுட்டுத் தள்ள வேண்டும்!" என்ற தலைப்பின் கீழ் தாங்கள் எழுதியிருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்தது.

"அந்த மனிதர்" சொன்ன வார்த்தைகள் அவ்வளவும் நூற்றுக்கு நூறு உண்மையே. வருமான வரி, விற்பனை வரி காரியாலயங்களில் இருந்து திரும்பும் எல்லா வியாபாரிகளின் மனதில் தோன்றுவதை அவர் அப்படியே படம் பிடித்தது போல் சொல்லி யிருக்கிறார். "அந்த மனிதர்" தம் எண்ணங்களை வெளியிட்டார். ஆனால், அர்த்தமற்ற கேள்விகளுக்கும் புரியாத சட்ட விமரிசனங்களுக்கும் பதில் கொடுத்து விட்டு மூளைக் குழப்பத்துடன் திரும்பும் மற்ற வியாபாரிகள், தங்கள் எண்ணங்களை வெளியிட முடியாமல் தவிக்கிறார்கள். இவ்வளவுதான் வித்தியாசம்.

நீங்கள் எழுதி இருப்பதுபோல, வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்கள், தங்கள் கடமையைச் சரிவரச் செய்தால், வியாபாரிகள்—முக்கியமாக தென்னிந்திய வியாபாரிகள்—மிக்க சந்தோஷத்துடன் கொடுக்கவேண்டிய வரிகளை, மேள தாளத்துடன், வெற்றிலைப் பாக்குடனே வைத்து, நமஸ்காரம் செய்து கொடுக்கத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது சர்வ நிச்சயம்.

அரசாங்கத்துக்குக் "காமதேனுவை" கொடுத்து உதவும் வியாபாரிகளும் மனிதர்கள்தான் என்று உணர்ந்து, உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகளை மரியாதையாக நடத்தினால், "அந்த மனிதர்" கூறியதுபோன்ற புரட்சிகரமான யோசனைகளுக்கு இடமே இல்லை.

வியாபாரிகள் அரசாங்கத்திற்குப் பணம் சம்பாதித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் உத்தியோகஸ்தர்கள் அரசாங்கப் பணத்தின் செலவுக்குக் காரணமாகிறார்கள். ஆகையால் வியாபாரிகளை உதவி செய்வோராக நினைக்க வேண்டுமே தவிரக் கப்பம் செலுத்துபவர்களாக மதிக்கக் கூடாது.

கோயமுத்தூர்
19—10—51

ஏ. ராஜகோபாலன்

# Fordson

## *Major* TRACTOR

### விவசாயிகளுக்கு இன்றியமையாதது இதே!

வேலையில்
**வேகம்**

கையாளுவதில்
**வேகம்**

கொண்டு செல்வதில்
**வேகம்**

கப்லிங்கிலும்
அட்ஜஸ்ட்மெண்டிலும்
**வேகம்**



## போர்ட்ஸன்

### மேஜர் டிராக்டர்

போர்ட்ஸனில் ஏற்றி அமைக்கப்பட்டிருக்கும்
கருவிகள் ஹைடராலிக் பவரில் இயங்குகின்றன.

THE SYMBOL OF SERVICE

போர்டு மோட்டார் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்
பம்பாய்.

•

*விற்பனையாளர்கள் :*

**ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்**

202/203, மவுண்ட் ரோடு :: மதராஸ் - 2

கிளைகள் : பெங்களூர், செகந்தராபாத் (தக்காணம்)
உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி




## அத்தியாயம் 41

## "அதோ பாருங்கள்!"

சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி கூறிய செய்தியைக் கேட்டதும் இளவரசரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"கடைசியாக என் உள்ளத்தின் போராட்டத்துக்கு ஒரு முடிவு வந்து விட்டதுபோல் காண்கிறது" என்று மெல்லிய குரலில் தமக்குத்தாமே பேசிக் கொள்கிறவர் போலச் சொல்லிக் கொண்டார்.

பார்த்திபேந்திரன் கொதித்தெழுந்தான். "சேனாதிபதி! என்ன சொன்னீர்? இது உண்மைதானா? என்னிடம் ஏன் இதுவரையில் சொல்லவில்லை? இந்தப் பித்துக்குளிப் பெண்ணை நீர் நம்முடன் கட்டி இழுத்து வந்ததற்குக் காரணம் இப்போதல்லவா தெரிகிறது. மறுபடியும் கேட்கிறேன்; பழுவேட்டரையர்கள் இளவரசரைச் சிறைப்படுத்தி வரக் கப்பல்களை அனுப்பியிருப்பது உண்மையா?" என்று கேட்டான்.

"ஆம், ஐயா! இந்தப் பெண் கண்ணால் பார்த்ததாகவும் காதால் கேட்டதாகவும் கூறுவதை நம்புவதாயிருந்தால் அது உண்மைதான்!"

"ஆகா! அந்தக் கிழவர், திருக்கோவலூர் மிலாடுடையார், கூறியது உண்மையாயிற்று. பழுவேட்டரையர்களை உள்ளபடி உணர்ந்தவர் அவர்தான்! சேனாதிபதி! இத்தகைய செய்தியை அறிந்த பிறகும் ஏன் சும்மா இருக்கிறீர்? பராந்தக சக்கரவர்த்தியின் குலத்தோன்றலை, சுந்தர சோழரின் செல்வப் புதல்வரை, நாடு நகரமெல்லாம் போற்றும் இளவரசரை, தமிழகத்து மக்களெல்லாம் தங்கள் கண்ணினுள் மணியாகக் கருதும் செல்வரை, ஆதித்த கரிகாலருடன் பிறந்த அருள்மொழி வர்மரை,— இந்த அற்பர்களாகிய பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்திவர ஆட்களை அனுப்பும்படி ஆகிவிட்டதா? இனியும் என்ன யோசனை? உடனே படைகளுடன் புறப்பட்டுச் சென்று இளவரசரைச் சிறைப்படுத்த வந்தவர்களை அழித்து இந்த இலங்கைத் தீவிலேயே அவர்களுக்குச் சமாதியை எழுப்புவோம்!... பிறகு நாம் போட்ட திட்டத்தின்படி காரியத்தை நடத்துவோம்! கிளம்புங்கள்! இன்னும் ஏன் தயக்கம்?" என்று பார்த்திபேந்திரன் பொரிபொரித்துக் கொட்டினான்.

சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி அவனைப் பார்த்து, "பார்த்திபேந்திரா! நீ இப்படித் துடிதுடிப்பாய் என்று எண்ணித்தான் நான் முன்னமே இந்தப் பெண் கொண்டு வந்த செய்தியை உன்னிடம் சொல்லவில்லை. நன்றாக யோசித்துச் செய்ய வேண்டிய காரியம். அவசரப்படுவதில் பயனில்லை!" என்றார்.

"யோசனை செய்ய வேண்டுமா? என்ன யோசனை? எதற்காக யோசனை? இளவரசே! நீங்கள் சொல்லுங்கள். இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இதற்கு முன் ஏதேனும் தங்களுக்குத் தயக்கமிருந்தாலும் இனித் தயங்குவதற்கு இடமில்லையே? பழுவேட்டரையர்களைப் பூண்டோடு அழித்து விட வேண்டியதுதானே?"

அப்போது இளவரசர், "சேனாதிபதியின் மனதில் உள்ளதையும் தெரிந்து

கொள்ளலாமே? ஐயா! தாங்கள் எதைப் பற்றி யோசிக்க வேண்டும் என்கிறீர்கள்?" என்று எவ்விதப் படபடப்புமின்றி நிதானமாய்க் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்துவதற்கு... இந்த வார்த்தைகளைச் சொல்லவும் என் வாய் கூசுகிறது......ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. தங்களைச் சிறைப் படுத்த வந்திருப்பவர்கள் சக்கரவர்த்தியின் கட்டளையோடு வந்திருந்தால் நாம் என்ன செய்வது? அப்போதும் அவர்களை எதிர்த்துப் போரிடுவதா?"

இதைக் கேட்ட பார்த்திபேந்திரன் கடகடவென்று சிரித்து விட்டு, "அழகாயிருக்கிறது, தங்கள் வார்த்தை! சக்கரவர்த்தி சொந்தமாகக் கட்டளை போடும் நிலையில் இருக்கிறாரா? அவரையே தான் பழுவேட்டரையர்கள் சிறையில் வைத்திருக்கிறார்களே!" என்றான்.

இச் சமயத்தில் வந்தியத் தேவன், குறுக்கிட்டு, "பல்லவ தளபதி கூறுவது நூற்றும் உண்மை. நானே என் கண்களால் பார்த்தேன். சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்திருப்பது போலத்தான் பழுவேட்டரையர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பமின்றி யாரும் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது; பேச முடியாது. நான் ஒரு வார்த்தை சொல்லத் துணிந்ததற்காக என்னை அவர்கள் படுத்திய பாட்டை நினைத்தால்,...அப்பா! சின்னப் பழுவேட்டரையரின் இரும்புக் கை பற்றிய இடத்தில் இன்னும் எனக்கு வலிக்கிறது!" என்று கூறி, தன் மணிக்கட்டைத் தடவிக் கொண்டான்.

"அப்படிச் சொல், வல்லவரையா! உன்னை என்னமோ என்று நினைத்தேன். இளவரசருக்கும் சேனாதிபதிக்கும் இன்னொரு முறை நன்றாக எடுத்துச் சொல்!" என்றான் பார்த்திபேந்திரன்.

இளவரசர், "வேண்டாம்; அவர் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லி விட்டார்!" என்று கூறி, வந்தியத்தேவனைப் பார்த்து, "ஐயா! நீர் அந்தப் பெண்ணைப் போய் அழைத்து வருவதாகச் சொன்னீரே! ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்? அவள் கொண்டுவந்த செய்தியை அவள் வாய்மொழியாகவே விவரமாகக் கேட்கலாம்! கொஞ்சம் கிறுக்குப் பிடித்த பெண் போலத் தோன்றுகிறது. எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லி அவளை இங்கே அழைத்து வாருங்கள்!" என்றார்.

"போகிறேன், இளவரசே! போய் அழைத்து வருகிறேன். ஆனால், பழுவேட்டரையர்களிடம் தாங்கள் சிறைப் படுவது என்பதை மட்டும் என்னால் சகிக்க முடியாது. என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் அது நடவாத காரியம்!" என்று சொல்லிக் கொண்டே வந்தியத் தேவன் சென்றான்.

"சேனாதிபதி! தங்களுடைய கருத்து என்னவென்று சொல்லவில்லையே?" என்று அருள்மொழிவர்மர் கேட்டார்.

"என்னுடைய கருத்து இதுதான். பழுவேட்டரையர்கள் அனுப்பியிருக்கும் ஆட்களைத் தாங்கள் சந்திக்கக் கூடாது. பார்த்திபேந்திரர் கொண்டு வந்திருக்கும் கப்பலில் ஏறித் தாங்கள் உடனே காஞ்சிக்குப் போய் விடுங்கள். நான் தஞ்சாவூருக்குப் போகிறேன். அங்கே சக்கரவர்த்தியை நேரில் பார்த்து உண்மை நிலைமையைத் தெரிந்துகொள்கிறேன்..."

"தஞ்சாவூருக்குத் தாங்கள் போவது சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பதுபோலத்தான். போனால் திரும்பிவர மாட்டீர்கள். அப்படியே அங்குள்ள பாதாளச் சிறையில் போய் விடுவீர்கள். சக்கரவர்த்தியைப் பார்க்கவும் தங்களால் முடியாது......"

"என்ன வார்த்தை சொல்கிறாய்? என்னைச் சிறையில் அடைக்கக் கூடிய வல்லமையுள்ளவன் சோழ நாட்டில் எவன் இருக்கிறான்? சக்கரவர்த்தியை நான் சந்திக்கக்கூடாது என்று தடுக்கக் கூடிய ஆண்மை உள்ளவன் எவன் இருக்கிறான்? மேலும், அங்கே முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயர் இருக்கிறார்......"

"பிரம்மராயர் இருக்கிறார். இருந்து என்ன பயன்? அவருக்கே சக்கரவர்த்தியைப் பார்க்க முடிவதில்லை. இதோ அவருடைய சிஷ்யன் நிற்கிறானே, அவன் என்ன சொல்கிறான் என்று கேட்டுப் பார்க்கலாமே?"

சேனாதிபதி ஆழ்வார்க்கடியான் பக்கம் திரும்பி, "ஆம்; இந்த வைஷ்ணவன் இங்கு நிற்பதையே மறந்து விட்டேன். திருமலை! ஏன் இப்படி மௌனமாக நிற்கிறாய்? சற்றுமுன் இளவரசர் சொன்னதுபோல் நீயும் ஊமையாகி விட்டாயா?" என்றார்.

"சேனாதிபதி! கடவுள் நமக்கு இரண்டு காதுகளைக் கொடுத்திருக்கிறார்; வாய் ஒன்றைத் தான் கொடுத்திருக்கிறார். 'ஆகையால் செவிகளை நன்றாக உபயோகப்படுத்து; பேசுவதைக் கொஞ்சமாக வைத்துக்கொள்' என்று என் குருநாதர்

எனக்குச் சொல்லியிருக்கிறார். முக்கியமாக, பெரிய ராஜாங்க விஷயங்களைப் பற்றிப் பேச்சுகள் நடக்கும் இடத்தில் அந்த விரதத்தைக் கண்டிப்பாகக் கடைப் பிடித்துவரச் சொல்லி யிருக்கிறார்...''

"குருவின் வாக்கை நன்றாக நிறைவேற்றுகிறாய். நாங்களே இப்போது கேட்பதனால் சொல். உன்னுடைய யோசனை என்ன?''

"எதைப் பற்றி என் யோசனையைக் கேட்கிறீர்கள், சேநாதிபதி!''

"இத்தனை நேரம் பேசிக்கொண் டிருந்த விஷயமாகத்தான். இளவரசர் இப்போது என்ன செய்வது உசிதம்? இலங்கையிலேயே இருக்கலாமா? அல்லது காஞ்சிக்குப் போகலாமா?''

"என்னுடைய உண்மையான கருத்தைச் சொல்லட்டுமா? இளவரசர் அநுமதித்தால் சொல்லுகிறேன்.''



ஏதோ யோசனையில் ஆழ்ந் திருந்த அருள்மொழி வர்மர் ஆழ்வார்க்கடியானை ஏறிட்டுப் பார்த்து, "சொல் திருமலை! தாராளமாய் மனதை விட்டுச் சொல்!'' என்று தைரியப்படுத்தினார்.

"இந்த இலங்கைத் தீவிலேயே மிகக் கடுமையான கட்டுக்காவல் உள்ள சிறைச்சாலை எது உண்டோ, அதைக் கண்டு பிடித்து, அதற்குள்ளே இளவரசரை அடைத்துப் போடவேண்டும்! வெளியில் பலமான காவலும் போட வேண்டும்!''

"இது என்ன உளறல்?'' என்றார் சேநாதிபதி.

"விளையாட இதுதானா சமயம்?'' என்றான் பார்த்திபேந்திரன்.

"நான் உளறவும் இல்லை; விளையாடவும் இல்லை. மனதில் உள்ளதைச் சொன்னேன். நேற்று இரவு இளவரசர் அநுராதபுரத்து வீதிகளின் வழியாக வந்து கொண்டிருந்தார். அவர் தலை மீது ஒரு வீட்டின் முன் முகப்பு இடிந்து விழுந்தது. பிறகு ஒரு வீட்டில் நாங்கள் படுத்திருந்தோம். நல்ல வேளையாக ஒரு காரியத்தின் பொருட்டு எழுந்து போய் விட்டோம். சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வீடு தீப்பற்றி எரிந்தது. இவையெல்லாம் உண்மையா, இல்லையா என்று இளவரசரையே கேளுங்கள்!''

இருவரும் இளவரசரை நோக்கினார்கள். அவருடைய முகபாவம் ஆழ்வார்க்கடியானுடைய கூற்றை உறுதிப்படுத்தியது.

"இந்த அபாயங்கள் எல்லாம் யாருக்காக நேர்ந்தவை என்று கேளுங்கள். என்னையோ அல்லது வந்தியத் தேவனையோ கொல்லுவதற்காக யாராவது வீட்டைக் கொளுத்துவார்களா?''





பார்த்திபேந்திரன் உடனே துள்ளிக் குதித்து, "இளவரசரைக் கொல்லுவதற்குத் தான் யாரோ முயற்சி செய்கிறார்கள். இதனால் இளவரசர் என்னுடன் காஞ்சிக்கு வரவேண்டிய அவசியம் உறுதிப்படுகிறது!" என்றான்.

"கூடவே கூடாது! தங்களுடன் இளவரசரை அனுப்புவதைக் காட்டிலும் பழுவேட்டரையர்களிடமே பிடித்துக் கொடுத்து விடலாம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"வைஷ்ணவனே! என்ன சொன்னாய்!" என்று பார்த்திபேந்திரன் கத்தியை உருவினான்.

சேநாதிபதி அவனைக் கையமர்த்தி, "திருமலை! ஏன் அவ்விதம் சொல்லுகிறாய்? பார்த்திபேந்திர பல்லவர் சோழ குலத்தின் அருந் துணைவர் என்று உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"தெரியும், சேநாதிபதி, தெரியும்! சிநேகம் இருந்துவிட்டால் மட்டும் போதுமா?"

"பார்த்திபேந்திரர் சிநேகத்துக்காகவே உயிரையும் கொடுக்கக் கூடியவர் என்பதை அறிவேன், திருமலை!"

"அதுவும் இருக்கலாம். ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு மறுமொழி கூறச் சொல்லுங்கள். நாங்கள் முந்தாநாள் மாலை தம்பள்ளைக்கு அருகில் போய்க் கொண்டிருந்த போது இவருடன் இரண்டு பேர் வருவதைப் பார்த்தோம்! அந்த மனிதர்கள் யார், இப்பொழுது அவர்கள் எங்கே. என்று இவரைக் கேட்டுச் சொல்லுங்கள்"

பார்த்திபேந்திரப் பல்லவன் சிறிது திடுக்கிட்டுப் போனான். கொஞ்சம் தயக்கத்துடனே கூறினான்:—"திரிகோணமலையில் அவர்களை நான் சந்தித்தேன். இளவரசர் இருக்குமிடத்தை எனக்குக்காட்டுவதாக



அவர்கள் அழைத்து வந்தார்கள். அநுராத புரத்தில் திடீரென்று மறைந்து விட்டார்கள். எதற்காகக் கேட்கிறாய், வைஷ்ணவனே! அவர்களைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''

''தெரியும்! சோழகுலத்தை அடியோடு ஒழித்துவிடச் சபதம் செய்திருப்பவர்களில் அவர்கள் இருவர் என்று எனக்குத் தெரியும். நேற்று அநுராத புரத்தில் அவர்கள்தான் இளவரசரைக் கொல்லப் பார்த்தார்கள் என்று ஊகிக்கிறேன்...... ஆகா! அதோ பாருங்கள்!'' என்று ஆழ்வார்க்கடியான் சுட்டிக்காட்டினான்.

அவன் சுட்டிக் காட்டிய இடம் அம் மண்டபத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்தது. நெருங்கி படர்ந்திருந்த மரங்களுக்கு இடையில் ஒரு அழகிய யுவதியும் யௌவன வாலிபனும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்தியத் தேவனும் பூங்குழலியுந்தான் என்பதும் ஊகிக்கக் கூடியதாயிருந்தது. பேசிக் கொண்டே யிருந்த வந்தியத் தேவன் சட்டென்று ஒரு சிறிய கத்தியைச் சுழற்றி வீசி எறிந்தான். கத்தி ஒரு புதரில் போய் விழுந்தது. 'வீல்' என்று ஒரு குரல் கேட்டது.

## அத்தியாயம் 42

# பூங்குழலியின் கத்தி

பாழடைந்த மண்டபத்திலிருந்து பூங்குழலியைத் தேடிக் கொண்டு சென்ற வந்தியத்தேவன் அவள் ஒரு மரத்தின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இலேசான விம்மல் அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது.

குரலை மிகவும் நயப்படுத்திக் கொண்டு ''பூங்குழலி!'' என்றான்.

சத்தம் கேட்ட பூங்குழலி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''நீதானா?'' என்று சொல்லி மறுபடியும் திரும்பிக் கொண்டாள்.

''நான்தான்! என் பேரில் உனக்கு என்ன கோபம்?''

''உன் பேரில் எனக்கு எந்த வித கோபமும் இல்லை.''

''பின்னே ஏன் உனக்கு இவ்வளவு சிடுசிடுப்பு?''

''எனக்கு ஆண் பிள்ளைகளைக் கண்டாலே பிடிக்கவில்லை.''

''இளவரசரைக் கூடவா?''

பூங்குழலி திரும்பிக் கண்களில் கனல் எழும்படி வந்தியத்தேவனைப் பார்த்தாள்.

''ஆமாம்; அவரைத்தான் முக்கியமாகப் பிடிக்கவில்லை!'' என்றாள்.

''அப்படி அவர் என்ன குற்றத்தைச் செய்து விட்டார்?''

''என்னை அவருக்கு ஞாபகமேயில்லை. என்னை அவர் முகமெடுத்துக் கூடப் பார்க்கவில்லை.''

''உன்னை அவருக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது. நான் உன்னைப் பற்றிக் கூறியதும், 'ஓ! சமுத்திர குமாரியை எனக்குத் தெரியாதா?' என்றார்.''

''பொய் சொல்லுகிறாய்.''

''நீயே நேரில் வந்து கேட்டுக்கொள்.''

''என்னை நினைவிருந்தால், ஏன் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை?''

''அவர் பேசினார்; நீதான் மறுமொழி சொல்லாமல் ஓடிவந்து விட்டாய்.''

''அந்தமாதிரி பேச்சை நான் சொல்லவில்லை. தெரிந்தவர்களைப் பார்த்தால் 'என்ன? ஏது?' என்று விசாரிப்பது கிடையாதா? — நீ சொல்லுவது பொய்! அவர் என்னை முகமெடுத்தே பார்க்கவில்லை.''

''பூங்குழலி! அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.''

''என்ன காரணம்?''

''இளவரசருக்கு இப்போது ரொம்பக் கஷ்ட காலம்.''

''யார் சொன்னது?''

''எல்லா ஜோசியர்களும் சொல்லியிருக்கிறார்கள். குடந்தை சோதிடர் என்னிடமே சொன்னார்.''

''உன்னிடம் என்ன சொன்னார்?''

''இளவரசருக்குக் கொஞ்ச நாள் வரையில் கஷ்டத்துக்கு மேல் கஷ்டமாக வந்து கொண்டிருக்கும் என்று சொன்னார். அவரைச் சேர்ந்தவர்களுக்கும் கஷ்டங்கள் வரும் என்று சொன்னார். இது இளவரசருக்கும் தெரியும். ஆகையினால் அவர் யாரும் தன்னோடு சிநேகிதமாக இருப்பதை விரும்பவில்லை. தனக்கு வரும் கஷ்டம் தன்னோடு போகட்டும் என்று நினைக்கிறார்.''

''நீ மட்டும் ஏன் அவரோடு சிநேகமாயிருக்கிறாய்?''

''நீ சற்று முன் பார்க்கவில்லையா? என்னையும் சண்டை பிடித்துத் துரத்த அவர் பிரயத்தனப்படுகிறார். நடுச் சாலையில் ஒரு காரணமும் இல்லாமல் அவர்

என்னோடு கத்திச் சண்டை போட்டார். நீங்கள் வந்ததினால் சண்டை நின்றது."

"அவர் துரத்தினாலும் நீ அவரை விட்டுப் போக மாட்டாயா?"

"மாட்டவே மாட்டேன். அவருக்கு வரும் கஷ்டங்களை யெல்லாம் நானும் பகிர்ந்து அநுபவிப்பேன்."

"அவரை உனக்கு அவ்வளவு பிடித்திருக்கிறதா?"

"ஆமாம்; ரொம்ப ரொம்பப் பிடித்திருக்கிறது."

"எதனால் பிடித்திருக்கிறது?"

"காரணம் சொல்லத் தெரியாது. அவரைப் பார்த்தவுடனே அவர் பேரில் பிரியம் ஏற்பட்டு விட்டது."

"எனக்கும் அப்படித்தான்!" என்றான் பூங்குழலி. உடனே தான் அவ்விதம் திறந்து சொல்லிவிட்டதைப்பற்றி வருந்தி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"உனக்கு இளவரசரிடம் பிரியம் என்று எனக்குத் தெரியும். ஆகையினால் உன்னை அழைத்துப் போக வந்தேன். என்னுடன் வா!"

"வரமாட்டேன்!" என்று பூங்குழலி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

"வராவிட்டால் பலவந்தமாக உன்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போவேன்."

"அருகில் நெருங்கினால் இதோ கத்தி இருக்கிறது; ஜாக்கிரதை!" என்று பூங்குழலி தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்துக் காட்டினாள்.

"பாவிப் பெண்ணே! எதற்காக என்னைக் குத்திக் கொல்ல வருகிறாய்? இளவரசரிடம் உன்னைப்பற்றி ஞாபகப்படுத்தினேனே, அதற்காகவா?"

"நீ பொய் சொல்லுகிறாய்; அவரிடம் என்னைப்பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லை!"

"போனால் போகட்டும்; இளவரசரைப் பிடித்துக் கொண்டு போக இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகச் சொன்னாய் அல்லவா? அதை அவரிடம் வந்து சொல்லிவிட்டு அப்புறம் எப்படியாவது தொலைந்து போ!"

"எல்லா விவரங்களும் சேநாதிபதியிடம் சொல்லி விட்டேன்."

"இளவரசர் உன்னிடம் நேரில் கேட்டு அறிய விரும்புகிறார்."

"அவர் முன்னால் வந்தால் நான் ஊமையாகிவிடுவேன்."

"ஊமைச்சிகளிடத்தில் இளவரசருக்கு ரொம்பப் பிரியம்!"

"சீச்சீ! நீ பரிகாசம் செய்கிறாய்!" என்று சொல்லிப் பூங்குழலி கத்தியை ஓங்கினாள்.

"அப்படியானால் நீ என்னுடன் வரப் போவதில்லையா?"

"இல்லை!"

"சரி; நான் போகிறேன்!" என்று கூறி விட்டு வந்தியத்தேவன் இரண்டு அடி எடுத்து வைத்தான். மறுபடியும் சட்டென்று திரும்பிப் பூங்குழலியின் கையிலிருந்து அவளுடைய கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தான்!

**வீ**சி எறிந்த கத்தி வெகு தூரம் சுழன்று சுழன்று சென்று ஓர் அடர்ந்த புதரில் விழுந்தது.

கத்தி விழுந்த இடத்திலிருந்து 'வீல்' என்று ஒரு குரல் கேட்டது.

அது மனிதக் குரலா, ஏதேனும் ஒரு விலங்கு அல்லது பட்சியின் குரலா என்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

கத்தியைப் பிடுங்கியதும் வந்தியத்தேவனைக் கடுங்கோபத்துடன் பார்த்த பூங்குழலி மேற்கூறிய சத்தத்தைக் கேட்டதும் கத்தி விழுந்த இடத்தை ஆர்வத்துடன் நோக்கினாள். பிறகு, இருவரும் வியப்புடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மெள்ள மெள்ள நடந்து கத்தி விழுந்த இடத்துக்கருகிலிருந்த புதரை நெருங்கிப் பார்த்தார்கள்.

செடிகளிலும் தரையிலும் புது இரத்தம் சிந்தி யிருந்தது.

மற்றப்படி அங்கு மனிதரும் இல்லை; விலங்கும் இல்லை. பூங்குழலியின் கத்தியையும் காணவில்லை!

"பார்த்தாயா? பூங்குழலி! நான் கூறியதன் உண்மை இப்போதாவது தெரிகிறதா? இளவரசரை நாலா பக்கமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. எந்த நேரத்தில் எந்த இடத்திலிருந்து எப்படிப்பட்ட அபாயம் வருமென்று சொல்ல முடியாது. தற்செயலாக உன்னுடைய கத்தியைப் பிடுங்கி நான் விட்டெறிந்தேன். அதிலிருந்து இங்கே யாரோ பதுங்கிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. எதற்காகப் பதுங்கியிருக்க வேண்டும் என்று நீயே யோசித்துப் பார்! இளவரசரைச் சமயம் பார்த்துத் தீர்த்துக் கட்டுவதற்காகத்தான்! கோடிக்கரைக்கு நான் வந்ததற்கு முதல் நாள் இரண்டு பேரை உன் அண்ணன் படகேற்றி அழைத்துப் போனதாகவும் அவர்களைப்பற்றி உனக்குச் சந்தேகம்

தோன்றியதாகவும் சொல்லவில்லையா? அதை ஞாபகப்படுத்திக் கொள்! இப்படிப்பட்ட சமயத்தில் இளவரசரிடம் பிரியம் உள்ளவர்கள் அவரை விட்டுப் போகலாமா?" என்று வந்தியத்தேவன் மூச்சு விடாமல் பேசி நிறுத்தினான்.

"அவர் என்னைப் போகச் சொன்னால் என்ன செய்வது?" என்று பூங்குழலி கேட்டாள்.

"அவர் போகச் சொன்னாலும் நாம் போகக் கூடாது!"

பூங்குழலி சற்று யோசித்துவிட்டு, "இங்கே பதுங்கியிருந்தது யார் என்று கண்டு பிடிக்க வேண்டாமா?" என்றாள்.

"அது நம்மால் முடியாத காரியம். இந்த அடர்ந்த காட்டில் எங்கேயென்று தேடிக் கண்டு பிடிப்பது? அதிக நேரம் தாமதித்தால் இளவரசருக்கு உண்மையாகக் கோபம் வந்து விடும். நம்மை விட்டு விட்டு எல்லாரும் போய் விடுவார்கள்! பேசாமல் என்னுடன் வா!"

"சரி, வருகிறேன்!" என்று பூங்குழலி கூறினாள்.

இருவரும் மற்றவர்கள் இருந்த மண்டபத்தை நோக்கி நடந்தார்கள்.

• • •

மண்டபத்திலிருந்தவர்கள் வந்தியத்தேவனும் பூங்குழலியும் அருகில் வந்ததும் முதலில் மேற்படி சம்பவத்தைப் பற்றியே கேட்டார்கள். "எதற்காகக் கத்தியை எறிந்தாய்? 'வீல்' என்ற சத்தம் கேட்டதே. அது என்ன சத்தம்?" என்று வினவினார்கள்.

"புதரில் ஏதோ ஒரு மிருகம், சிறுத்தையோ அல்லது நரியோ, பதுங்கியிருந்தது போல் தோன்றியது. அதனால் இவளுடைய கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தேன். கிட்டப்போய்ப் பார்த்தோம். ஒன்றும் இல்லை" என்றான் வந்தியத்தேவன்.

"அதுபோனால் போகட்டும்; இந்தப் பெண்ணிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள்!" என்றார் சேநாதிபதி.

பூங்குழலி வந்ததிலிருந்து இளவரசரையே பார்த்துக் கொண்டிருந்தாள். இளவரசர் அப்போது அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

ச்சீ! இந்த நெஞ்சு எதற்காக இப்படி அடித்துக் கொள்கிறது? தொண்டையில் வந்து ஏதோ அடைக்கிறதே, அது என்ன? கண்ணில் எதற்காகக் கண்ணீர் ததும்புகிறது! அசட்டுப் பெண்ணே! உன் தைரியம் எல்லாம் எங்கே போயிற்று? அலை கடலையும் பெரும் புயலையும் கண்டு கலங்காத உன் உள்ளம் ஏன் இப்போது இப்படித் தத்தளிக்கிறது? கொடிய பயங்கர வேங்கைப் புலியின் கொள்ளிக் கண்களை ஏறிட்டுப் பார்க்கும் துணிவு படைத்த உன் கண்கள் ஏன் இப்போது மங்கல் அடைகிறது! பெண்ணே! மறுபடியும் பைத்தியக்காரி என்ற பட்டம் சூட்டிக் கொள்ளாதே! இளவரசரை நிமிர்ந்து பார்! அவர் கேட்கும் கேள்விகளுக்குக் கணீர் என்று மறுமொழி சொல்லு! உன்னை என்ன செய்து விடுவார்? அவர் கருணை மிகுந்தவர், தயாளு என்று உலகமெல்லாம் சொல்கிறதே! பேதைப் பெண்ணாகிய உன்னை இளவரசர் என்ன செய்து விடுவார்!......

'சமுத்திர குமாரி! என்னை உனக்கு நினைவிருக்கிறதா?" என்று அவர் கேட்டது ஆழ்கடலின் அடியிலிருந்து வரும் குரல்போல் அவள் காதில் தொனித்தது.




தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கு இந்த வருஷத்துத் தீபாவளித் திருநாளில் நமது அன்பார்ந்த ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

தீபாவளி முக்கியமாகக் குழந்தைகளின் திருநாள். புது உடை உடுத்திக் கொள்வதிலும் மத்தாப்புக் கொளுத்துவதிலும் அவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சி பெரியவர்களுக்கு ஏற்படுவதில்லை. ஆனால் குழந்தைகளின் மகிழ்ச்சியைக் காண நமக்கு ஏற்படும் ஆனந்தம் வேறு எதிலும் ஏற்படுவதில்லை.

ஆகவே, பெறற்கரிய இந்த ஆனந்தத்தை நம் குழந்தைகளுக்குப் புதிய உடைகள் வாங்கிக் கொடுத்தும் மத்தாப்பு வகைகள் பலவும் வாங்கிக் கொடுத்தும் அநுபவிப்போம். இன்றைக்கு ஒரு நாள் குழந்தைகள் இஷ்டம் போல் ஓடியாடி விளையாடிக் களிக்க இடங் கொடுத்து மகிழ்வோம்.

சின்னஞ் சிறுவர் சிறுமியரை — இன்று
சிங்காரஞ் செய்து பார்ப்போமடா!
கன்னத்(து) அவிழும் முத்த மொன்றுக்(கு) — இந்தக்
காசினி முற்றும் ஈடாகுமோடா!

(போட்டோ : மணியம்) — கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை


# இலங்கையில் மதுவிலக்கு

ரஜனி

கொழும்பு, அக். பீ 12உ

இலங்கையில் மதுவிலக்கு இயக்கம் படிப்படியாக வலுவடைந்து வருகிறது. இந்த இயக்கத்தின் முன்னணியி லிருப்பவரான ஸ்ரீ பிரேமதாஸ் அடுத்த மாதம் சென்னை, பம்பாய், கல்கத்தா, புதுடில்லி முதலான இடங்களுக்குச் சென்று இந்தியாவில் மதுவிலக்கு இயக்கம் எவ்வாறு வேலை செய்கிற தென்பதை ஆராய்ந்து வர உத்தேசித்திருக்கிறார். இதற்கிடையில் பூரண மதுவிலக்கைப் படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வர ஒரு திட்டத்தையும் அரசாங்கத்தினிடம் அவர் சமர்ப்பித்திருக்கிறார். நாட்டிலுள்ள எல்லா மதுபானக் கடைகளையும் மூட வேண்டும்; வைத்திய அதிகாரிகளினால் குடிகாரர்களென்று சர்டிபி கேட்டு கொடுப்பவர்களுக்கு மட்டுமே மதுபானம் செய்ய அரசாங்கம் பர்மிட் வழங்க வேண்டும். இதுதான் ஸ்ரீ பிரேமதாஸாவின் திட்டம். இந்தத் திட்டத்தை அரசாங்கம் ஒப்புக் கொள்ளப் போவதில்லையென்பது தெரிந்த விஷயமென்றாலும் படிப் படியாகப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டுவதற்குத் தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்.

இலங்கை மக்களிடையே எல்லா தேசங்களையும் போல நாமும் சுதந்திர மக்களாயிருக்க வேண்டுமென்ற ஆவலைக் கிளப்பி விட்டதே மதுவிலக்கு இயக்கம்தானென்பதை டாக்டர் (ஸ்ரீமதி) மேரி ரத்னம் இவ்வாரம் விடுவித்திருக்கும் ஒரு அறிக்கையில் வெகு அழகாகக் கட்டிக் காட்டியிருக்கிறார். அவர் கூறினார்:—" 1915-ம் வருடப் புரட்சியின் பொழுது நமது பிரதம மந்திரி சேனநாயகா கைதுசெய்து சிறையில் தள்ளப்பட்டதாக சமீபத்தில் கண்டியில் நடந்த ஒரு மகா நாட்டிலே அவருடைய புதல்வர் டட்லி சேனநாயகா குறிப்பிட்டபொழுதே முன்வரிசையில் உட்கார்ந்திருந்த பெண்கள் கண்ணீர் வடித்தார்களாம். அப்பொழுது சேனநாயகா உண்மையில் எதற்காகக் கைது செய்யப்பட்டாரென்பதை அறிந்திருந்தால் யாரும் கண்ணீர்விட மாட்டார்கள். 1915-ம் ஆண்டிலே பிரிட்டிஷார் இலங்கையில் ஓராயிரம் கள்ளுக்கடைகளைத் திறக்கத் தீர்மானித்தனர். அதை எதிர்த்துப் பௌத்தர்களும், இந்துக்களும் தீவிரமாகப் பிரசாரம் செய்தனர். அரசாங்கமோ மதுவிலக்குப் பிரசாரப் போர்வையுடன் சதியாலோசனை நடப்பதாகச் சந்தேகித்து மதுவிலக்குப் பிரசாரகர்களை யெல்லாம் சிறையில் தள்ளியது. மதுவிலக்குப் பிரசாரத்தின் முன்னணியிலே நின்ற சேனநாயகாவும் கைது செய்யப் பட்டார். குடியை ஒழிப்பதற்காக அன்று சிறை சென்ற நமது பிரதமர் இன்று கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி மனச்சாட்சிக்கு விரோதமாக மதுவிலக்கை அமுல் நடத்த மறுத்து வருகிறார். இதை நினைத்தால் நாம் கண்ணீர் ஆறாக வடிக்க வேண்டி யிருக்கிறது."



இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ கணேஷ்

டாக்டர் (ஸ்ரீமதி) மேரி ரத்னம் இவ்வாறு தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டிய இலங்கை பத்திரிகையாளர் சங்கம் இவ்வாரம் திறந்துள்ள புதிய கிளப்பில் மதுவுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. தமிழ்ப் பத்திரிகையைச் சேர்ந்த ஒருவர் சங்கத்தில் மதுபானத்தை ஆட்சேபித்ததற்கு, குடிக்காதவர்கள் பத்திரிகையாளர்களா யிருக்க முடியுமா என்று பொருள் படும்படியாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை பிதற்றித் தள்ளி யிருந்தது.

## மற்றொரு தமிழ் மந்திரி

இவ்வாரம் மற்றொரு தமிழர் மந்திரியாகி யிருக்கிறார். நியாயமாகப் பார்க்கப் போனால் மந்திரி பதவியிலிருந்து ஸ்ரீ பண்டார நாயகா ராஜினாமாச் செய்த பொழுதே பழைய சம்பிரதாயங்களின்படி அவருடைய பார்லிமெண்டரிக் காரியதரிசியாயிருந்த ஸ்ரீ வி. நெல்லையா ஸ்தல ஸ்தாபன சுகாதார மந்திரியாக நியமிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் ஒரு தமிழர் என்பதற்காகத்தானோ என்னவோ அவரை மந்திரியாக்காமல் அந்தப் பதவியையும் பிரதம மந்திரி தாமே எடுத்துக் கொண்டார். இப்பொழுது பிரதமர் ஆஸ்திரேலியாவிற்குச் சென்றுள்ளபடியினால் திரும்பி வரும் மூன்று வார காலம் வரையில் ஸ்ரீ நெல்லையாவை மந்திரியாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இதைப் பிரதமர் முன்பே செய்திருந்தால் எவ்வளவோ கௌரவமாயும் தமிழ் மக்களை ஓரளவு திருப்திப் படுத்தியதாயும் இருந்திருக்கும் அல்லவா!

## சென்னையில் சேனநாயகா

இலங்கைப் பிரதம மந்திரி சேனநாயகா சென்னைப் பத்திரிகைக்காரர்களுக்கு அளித்த பேட்டி யொன்றில் இலங்கை இந்தியர்களுக்கு இலங்கைப் பிரஜைகளாக 1931-ம் வருடம் முதல் சந்தர்ப்பம் அளிக்கப் பட்டிருந்ததாயும் ஒரு மனு எழுதிப் போட்டு இலங்கைப் பிரஜைகளாகி விடுவதற்கு 20 வருட காலமாக அளித்திருந்த தருணத்தை இந்தியர்கள் பயன்படுத்திக் கொள்ளாம லிருந்து விட்டு இப்பொழுது லட்சக் கணக்கிலே மனுப் போட்டால் அவர்களுடைய உத்தேசத்தைச் சந்தேகிக்காமல் என்ன செய்வதென்றும் கேட்டார். இதைக் கேட்டுக் கொண்டு சென்னைப் பத்திரிகைக்காரர்கள் சும்மா யிருந்து விட்டது இங்கு ஆச்சரியமாக இருக்கிறது.

1931-ம் ஆண்டில் பிரஜா உரிமைப் பிரச்னை எழவே யில்லை. பிரஜாவுரிமைச் சட்டம் ஏற்பட்டதே 1949-ல்தான். 1931-ல் எல்லோரும் பிரிட்டிஷ் பிரஜைகளா யிருந்தனர். அப்பொழுது இலங்

கைப் பிரஜைகளென்ற பேச்சுக்கே இடமில்லை. சிங்களவர் ஐரோப்பியர் உள்பட இலங்கையில் வசித்த அவ்வளவு பேர்களும் ஒரே மாதிரியாக பிரிட்டிஷ் பிரஜைகளா யிருந்தனர்.

இலங்கையில் இந்திய 'மக்கள் குடியேறி வசித்ததைச் சந்தேகமாகக் கருதுகின்றவர்கள் இங்கு ஐந்து வருட காலமாக வசித்ததை ருசுப்படுத்தி இந்நாட்டில் நிரந்தரமாகக் குடியேறியிருப்பதாக சர்டிபிகேட் பெறலாமென்று 1931-ம் ஆண்டில் ஒரு விதி ஏற்பட்டது. இதையே பிரஜாவுரிமை பெறும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகப் பிரதம மந்திரி சொல்லிக் குழப்ப முயல்கிறார். இலங்கை இந்தியத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் இந்நாட்டிலேயே தலைமுறை தலைமுறையாக வசிப்பவர்களாகையினால் இந்நாட்டில் நிரந்தரமாகக் குடியேறி யிருப்பதாக சர்டிபிகேட்டுகள் பெற வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. 1939-ம் ஆண்டுக்குப் பிறகு புதிய தொழிலாளர் இலங்கையில் குடியேறுவதை இந்திய அரசாங்கம் தடுத்து விட்டபடியினால் தற்சமயம் இலங்கையில் வசிக்கும் இந்தியத் தொழிலாளர் அனைவருமே ஐந்து வருடங்களுக்கு அதிகமாக இந்நாட்டில் வசித்தவர்கள்.


ஆகையால் பிரதம மந்திரி சேனநாயகா கூற்றின்படி அவ்வளவு பேர்களும் எவ்விதமான நிபந்தனையு மில்லாமல் இலங்கைப் பிரஜைகளாகும் யோக்கியதாம்சம் உடையவர்கள். பெரும்பாலான இந்தியர்களுக்கு இலங்கைப் பிரஜைகளாக விருப்பமில்லை யென்று சேனநாயகா கூறுவது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முயற்சிப்பதைப் போலிருக்கிறது.

## திருவள்ளுவர் மகாசபை

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் மகாசபை ஆதரவில் ஆலயப் பிரவேச சட்டத்தை ஆதரிப்பதற்காக இவ்வாரம் ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடந்தது. சகோதரர்களான நகர மேயர் ஸ்ரீ ஸி. பொன்னம்பலமும் தபால் இலாகா மந்திரி ஸ்ரீ சிற்றம்பலமும் ஸ்ரீ கனகரத்தினம் தலைமையில் விசாரணை நடத்திய ஆலயச் சீர்திருத்தக் கமிட்டியின் சிபார்சுகளை ஆதரித்து உணர்ச்சியோடு பேசினர்கள். ஸ்ரீ சிற்றம்பலம் பிற்போக்குவாதிகளை வெகு காருக்காகக் கண்டித்தார். பெரும்பான்மையோர்களான உயர்ந்த ஜாதி இந்துக்கள் சிறுபான்மையோர்களான தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கியாள முயற்சித்தால் சிங்களவர்களும் தமிழர்களை அடக்கியாள ஏன் முயற்சிக்க மாட்டார்கள் என்று அவர் கேட்டார். இந்து மதத்தின் ஜன்ம ஸ்தாபனமாகிய இந்தியாவிலேயே ஆலயங்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கையில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கு எதிர்ப்பிருப்பது முற்போக்கின் அறிகுறியல்ல என்றார். குடியரசில் மனிதனுக்கு மனிதன் வேற்றுமை காட்டுவதைப் பகுத்தறிவுள்ள ஜன சமுதாயம் ஒப்பவே ஒப்பாதென்று அவர் முழங்கினர்.

இந்த ஆலய விசாரணைக் கமிட்டியின் சிபார்சுகளை ஏற்று அவைகளைத் தழுவிய முறையில் சட்டம் இயற்றுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானமொன்று கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## அபூர்வ மிருகம்!




"பல சுயநலவாதிகள் வகுப்புவாத வேஷம் தரித்துக்கொண்டு வோட்டுக் கேட்க வருகிறார்கள்!" என்று பண்டித நேருஜி எச்சரித்திருக்கிறார்.

# விளையாட்டு நேரம்...



......முழு ஆரோக்கியத்தின்
அறிகுறியாக இருக்கிருன்!





நாள் முழுவதும், கடும் வெய்யல் நேரத்திலும் கூட, ஓடியாடி விளையாடினாலும் சிறிதும் களைப்புறுமலிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

ஒருவேளை அதன் தாய் வழக்கமாக அனுசரித்து வரும். ஓய்வு கொள்ளும் நேரங்களைத் தவிர இதர நேரங்களில் இளைப்பாறுவதை அது விரும்பாமல் இருக்கலாம். ஆனால் அது அல்ல. எல்லாம் "நேன் பேபி புட்" அளிக்கும் பூரண பலம்தான் காரணம்!

நேன் பேபி புட் மிக சுகாதார முறைகளை அனுசரித்து ஸ்விட்ஸரில் தயார்செய்து (இந்தியாவில் ஃபீடிங் மில்க் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்டின் சோல் ஏஜெண்டுகளின் உபயோகத்திற்காக விசேஷமாக பாக் செய்து) அனுப்பப்படுகிறது.

நல்ல போஷாக்களிக்கும் ஆகாரம்
திடகாத்திரமான
குழந்தைகளாகத் திகழச் செய்கின்றன




சோல் ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
மதராஸிற்கு விநியோகஸ்தர்கள்:
ராகா கார்ப்பொரேஷன் லிமிடெட்
39, செகண்டு லேன் பீச், மதராஸ்
விநியோகஸ்தர்கள்: கூரையா பிரதர்ஸ், கல்கத்தா

# வாழ்க குடியாட்சி!

எழுதியவர் : ஸ்ரீ சூனிலால் மதியா

மொழி பெயர்ப்பு : பி. எஸ். மணி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தலைவர் பத்ரஸ்வாவின் மயில் பல்லக்கு தவன கிரி விஹாரத்திலிருந்து குடியரசு சபை மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டது.

புருஷிராம் நகரத்திலுள்ள குடியரசு சபை ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. நகரத்திலுள்ள பிரதிநிதிகள் குறிப்பிட்ட நேரத்தில் சபாமண்டபத்தில் பிரசன்னமாயிருந்தனர். பத்ரா, அக்ரதோகா முதலிய நகரங்களின் பிரதிநிதிகளும் ஒட்டக தூதர்களின் மூலம் செய்தி யறிந்து புருஷிராம் நகரத்துக்குச் சரியான நேரத்தில் வந்தடைந்து சபையில் குழுமியிருந்தனர்.

தலைவர் பத்ரஸ்வாவின் மயில் பல்லக்கு சபை மண்டபத்தை வந்தடைந்ததும் சேவகர்கள் கூட்டத்தை விலக்கி அவருக்கு வழியேற்படுத்தினர்கள்.

ஒரு சிறிய சொற்பொழிவுக்குப் பிறகு தலைவர் பத்ரஸ்வா குப்த ஸ்தானிகரிடமிருந்து வந்திருந்த நிருபத்தை அவர்களுக்கு வாசித்தார்.

அந் நிருபத்திலுள்ள வாசகங்களைக் கேட்டுச் சில பிரதிநிதிகள் ஆத்திரம் தாங்க முடியாமல் கொதித்தெழுந்தார்கள். வாலிபர்கள் பலர் குப்தர்களுக்கெதிராக கோஷத்தை எழுப்பினர்கள்.

தலைவர் பத்ரஸ்வா அடிக்கடி எழுந்திருந்து ஆவேசப்பட்ட அங்கத்தினர்களைச் சமாதானப் படுத்தினர். குப்தர்களுக்கும் யாதேயர்களுக்கும் நெடுங்காலமாக இருந்துவரும் அரசியல் தொடர்புகளைப் பற்றி அவர் எவ்வித படபடப்புமின்றிக் கூறினர். பிறகு தவனகிரியில் தாம் பௌத்த சந்நியாசி மேக புத்தரோடு நடத்திய விவாதத்தையும் விவரமாக விவரித்தார்.

பௌத்த சந்நியாசி மேக புத்தர் உலக ஆசைகளை அறவே வெறுத்து, உலகப்பற்றை முற்றும் துறந்தவராயினும் யாதேய சுதந்திரக் குடியரசுக்கு அவரே மதத் தலைவராக விளங்கினர். முற்றும் துறந்த அந்த வயது முதிர்ந்தவரை அக்காட்டிலுள்ள மக்கள் அனைவரும் மிகுந்த மரியாதையுடன் போற்றி வந்தனர். சபா மண்டபத்தில் அமர்ந்திருந்த அங்கத்தினர்கள் அனைவரும் மதிப்புக்குரிய அப் பௌத்த சந்நியாசியின் கட்டளையை எதிர் பார்த்த ஆவலுடன் இருந்தார்கள்.

தலைவர் பத்ரஸ்வா தமது ஆசனத்திலிருந்து எழுந்திருந்து, ''மதிப்புக்குரிய மேக புத்தர் தமது ஆலோசனையைத்தான் கூறலாமே யொழியக் கட்டளையிட முடியாது. ஏன், என்னிடமிருந்துகூடக் கண்டிப்பான கட்டளை எழ முடியாது. நம் சுதந்திரக் குடியரசு சபைக்குத்தான் கட்டளை பிறப்பிக்க உரிமையுண்டு. ஆகையால் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் அந்தப் பிரச்னை சம்பந்தமாகத் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை அறிவித்து ஒரு முடிவுக்கு வரும்படி வேண்டிக் கொள்கிறேன்'' என்று அறிவித்தார்.

சபையில் கூடியிருந்த அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துக் கூறினர்கள். ஜனபதி மறுபடியும் எழுந்திருந்து சமாதானத்துக்குச் சிறிதும் இடம் கொடுக்காத எதிர்ப்புக்குச் சாதகமாக ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். பிறகு வணங்கத் தக்க மேகபுத்தரின் ஆலோசனையையும் விவரமாகக் கூறினர்.

''போற்றுதற்குரிய அப்பௌத்த சந்நியாசி அஹிம்சையின் அவதாரமாகிய புத்தபகவானை வழிபடுபவர். அஹிம்சா தர்மத்தைப் போற்றிச் சமாதானத்தையே மேகபுத்தர் விரும்புவாராலும், பேராபாயங்கள் சூழ்ந்த இவ்வேளையில் அவர் சமாதானத்தைக் கைக்கொள்ளச் சொல்லவில்லை. பகைவர்கள் நம் நாட்டின் மீது படையெடுத்து விடுவார்களோ என்ற தற்போதைய பயங்கரச் சூழ்நிலைக்குக் காரணம், அன்று நாம் சமாதானத்துக்காக குப்தப் பேரரசன் சமுத்திர குப்தருக்குத் தலைவணங்கி அவருடைய வேண்டுகோளை யெல்லாம் ஏற்றுக் கொண்டதுதான். சமுத்திர குப்தருக்கு அன்று அடி பணிந்ததினாலேயே இன்று நம் சுதந்திரக் குடியரசு ஆட்டம் கண்டிருக்கிறது. நமது மூதாதையர்கள் கைக்கொண்ட சமாதான முறை உன்னதமான சுதந்திரக் குடியரசு இலட்சியத்துக்கே களங்கம் விளைக்கக் கூடியது. நாம் மறுபடியும் அத்தகைய களங்கத்தை விளைவித்து நம் பிற்கால சந்ததிகள் நம்மைத் தூஷிக்கும்படி விட்டு விடக் கூடாது...''

இளம் வாலிபப் பிரதிநிதிகள் தலைவர் பத்ரஸ்வாவின் ஒவ்வொரு வார்த்தைக்கும் கைதட்டி ஆரவாரித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பத்ரஸ்வாவின் வீரமுள்ள பேச்சு சகலவிதமான எதிர்ப்பையும் தகர்த்தெறிந்து விட்டது.

மறுநாள் காலை பொழுது விடிந்த பொழுது ஜனபதியின் நீண்ட பிரசங்கம் முடிந்து வோட்டெடுப்பு ஆரம்பமாகி விட்டது. சபாமண்டபப் பணியாளர்கள் 'சலகா'க் (வோட்டெடுப்புக் குச்சி)களைச் சபைப் பிரதிநிதிகளிடம் பகிர்ந்து கொடுத்தார்கள்.

கீழ்வானத்தில் உதயசூரியன் தன் செங்கிரணங்களைப் பரப்பிக் கொண்டு வந்த பொழுது சபை அங்கத்தினர்கள் அனைவரும் சமாதானத்துக்குச் சிறிதும் இடங் கொடுக்காத எதிர்ப்பு முறையை ஒப்புக் கொண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

* * *

ஜயலக்தாவின் கண்கள் அன்று உறக்கம் கொள்ள மறுத்தன. குடியரசு சபையின் கூட்டமும், அதன் முடிவும் வெளியான தினத்திலிருந்து அந்தப் பெண் அடைந்த வேதனை கொஞ்சநஞ்சமல்ல. ஏதோ விவரந் தெரியாத பயங்கரக் கனவுகள் தோன்றி அவள் தூக்கத்தை விழுங்கி விட்டன. அன்றைய தினம் அவளுடைய மனம் பட படவென்று அடித்துக் கொண்டது. ஏனென்றும் மறு நாள் காலை பொழுது விடிந்ததும் அவளுடைய உள்ளத்தரசன் சுபாஹு யாதேயப் படைகளுக்குத் தலைமை வகித்துப் பகைவர்களின் படை

களைச் சின்ன பின்னமாக்கச் செல்கிறான். ஜயனந்தாவும் மற்ற யாதேய வீர மங்கைகளுடன் போர்க்களத்தில் காயம்பட்ட படை வீரர்களுக்குப் பணிவிடை புரியப் போகப் போகிறாள்.

அருமைக் குமாரனும், மருமகளும் பிரிந்து போவதைக் கண்டு ஜனபதி பத்ரஸ்வாவின் இருதயம் மட்டும் இரகசியமாக அழுதது. புத்திர வாஞ்சையினால் எந்தவித தடுமாற்றத்தையும் அடைந்து மனம் பதறும் இளகிய குணம் படைத்தவரல்ல அவர். அவருடைய மந்தஹாஸ முகம் எந்தவிதப் பிரிவு வருத்தக் குறியுமின்றி யிருந்து அவருடைய திடச் சித்தத்தைப் புலப்படுத்தியது. அவருடைய இதழ்களோ எந்தவித உள்ளக் கிளர்ச்சியையும் வெளிப்படுத்தாது, 'வெற்றியுடன் திரும்பி வா. இல்லையேல் வீர மரணம் அடை' என்று அறிவுறுத்தியது.

யாதேயக் குடியரசு நாட்டில் மற்ற மாபெரும் சாம்ராஜ்யங்களைப்போல் நிரந்தரப்படை கிடையாது. நாட்டின் மக்களே போர்க் காலத்தில் போர்ப்படை வீரர்களாகத் திகழ்வார்கள். ஆனால் ஒவ்வொரு வருஷமும் வீரர்களின் ஆயுதப் பயிற்சியின் திறமையை வெளிப்படுத்தும் போட்டிப் பந்தயங்கள் திருவிழாக் கோலாகலமாக நடக்கும். அந்தப் போட்டிப் பந்தயத் திருவிழாக்களில் யார் மிகுந்த திறமைசாலியாக, தலை சிறந்த வீரனாகத் திகழ்கிறானோ அவ்வீரனுக்குக் குடியரசுப்படையின் தலைமைப் பதவி அளிக்கப்படும். போன தடவை நடந்த அந்தக் கோலாகலத் திருவிழாவில் சுபாஹுவே தலைசிறந்த வீரனாகத் திகழ்ந்து வெற்றி வாகை சூடினான். அதோடு மட்டுமல்ல; பேரழகு படைத்த ஜயனந்தாவின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டான்.

சுபாஹுவின் மனம் அந்தச் சமயத்தில் எந்த வித உள்ளக் கிளர்ச்சிக்கும் உள்ளாகவில்லை. ஆனால் ஜயனந்தாவின் மனம் மட்டும் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது. தன்னுடைய நாயகன் தன்னை விட்டுப் பிரிந்து வீரப்போர் புரியச் செல்கிறானே என்பதற்காக அவள் உள்ளம் துடிக்கவில்லை. ஏன், சுபாஹுவின் பேரழகை விட அவனுடைய வீர தீர பராக்கிரமங்கள் தானே போட்டிப் பந்தயத் திருவிழாவன்று அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு தன் இருதயத்தையே பறி கொடுக்கும்படி செய்து விட்டது! வீரத்தையே விரும்பிக் காதலித்த வீரமங்கையல்லவா அவள்! அப்படியிருக்க போர்க்களத்துக்குச் சென்று விரோதிகளை வீழ்த்தி வீராதி வீரனாகத் திகழப் போகும் தன் நாயகனைப் பிரிவதில் சிறிதளவும் துக்கமோ, கவலையோ ஏற்படுமா, என்ன! ஆனால் அவளுடைய மனப் போராட்டத்துக்குக் காரணம் மிகவும் விசித்திரமானது. அவள் கர்ப்பம் தரித்திருந்தாள். நாணத்தினால் அதை இன்னும் அவள் சுபாஹுவிடம் அறிவிக்கவில்லை. அப்பொழுதைய மனக் குழப்பத்தில் அந்த நல்ல செய்தியைச் சுபாஹுவுக்கு அறிவிக்கலாமா, வேண்டாமா என்பதை அவளால் தீர்மானிக்க முடியவில்லை. கடைசிவரை ஜயனந்தா திடமற்ற மன நிலையிலே இருந்து வந்தாள்.

சுபாஹு பொற் கிரீடமணிந்து, போர்க்கோலம் பூண்டு, ஆயுதங்களெல்லாம் இடுப்பில் மாட்டிக் கொண்டு வீர புருஷனாகத் தன் தந்தையின் ஆசியைப் பெற அன்று காலையில் வந்து சேர்ந்தான். பத்ரஸ்வா அவனை முதலில் அன்புடன் தடவி, ''செல்வக் குமரனே! நானும் உன்னுடன் போர்க்களத்துக்கு வர வேண்டியதாயிருக்கலாம். யார் யாரை ஆசீர்வதிப்பது?'' என்று கேட்டார்.

ஜயனந்தா சுபாஹுவின் நெற்றியில் வீரத் திலகமிட்டு மலர்ந்த முகத்துடன் அவனை வழியனுப்பினாள். வீர யாதேய வாலிபர்களுடன் சுபாஹு ரதத்திலேறிப் போர்க் களத்துக்குப் புறப்பட்டு விட்டான்.

யமுனை நதிக் கரையில் குப்தர்களின் கடலைப் போன்ற சேனைகள் வரிசை வரிசையாக அணி



வகுத்து நின்றன. ஐந்நூறு மதம் பொருந்திய மத்தகஜங்கள் அப்படைகளுக்கு முன்னால் ஆரோ கணித்து நின்றன. குப்தர்களின் குதிரைப்படை பத்தாயிரத்துக்கு மேல் இருந்ததாகப் பேச்சுக்கள் எழுந்தன. அது தவிரத் தேர்ப்படை அவர்க ளிடம் எண்ணிக்கையற்று இருந்தது. காலாட் படை கணக்கற்று இருந்தது.

யாதேயர்களுக்குத் தங்கள் படைகளை அணி வகுத்து வைப்பதில் மிகுந்த சிரமமா யிருந் தது. யமுனை நதிக்கும் சாப்பல் நதிக்குமிடையே புள்ள விஸ்தாரமான பிரதேசத்தைப் பகைவரின் படை யெடுப்பிலிருந்து அவர்கள் பாதுகாக்க வேண்டியிருந்தது. அது தவிர அவர்களுக்கு நிரந்தரப் படை இல்லாமலிருந்தது மாபெரும் குறையாகத் [illegible]து. அப்படியிருந்த போதி லும் வயது [illegible]யிபர்களில் ஒருவராவது போருக்கன்றி வீட்டினில் பதுங்கியிருக்க வில்லை. ஏன், சில பெண்கள் கூட ஆண் உடை தரித்துக் கத்தி ஏந்தி ரத சாரதிகளாகச் சேவை செய் தார்கள். வில் வித்தையில் தேர்ந்த மல்லவாசி களும் யாதேயப் படையில் சேர்ந்து போர் புரி வதற்காக வந்திருந்தார்கள்.

இந்த விற்படை வீரர்கள் தங்கள் முழுத் திறமையும் காட்டி யாதேயக் குடியரசு நாட்டுக்கு மாபெரும் சேவை செய்தார்கள்.

படகுகளில் குப்தர்களின் படைகள் அமர்ந்து அக்கரையை அடைய வந்த பொழுது மல்லவாசி வீரர்கள் தங்கள் வில்லை நாணேற்றி அம்பு மழை பொழிந்து படகுகளைத் திருப்பும்படி செய் தார்கள். இந்தத் திறமை மிகுந்த வில் வீரர்கள் யமுனை நதியின் அடர்ந்த காடுகளில் ஒளிந்து கொண்டு வில் அம்பு தொடுத்துக் குப்தர்களுக்கு மிகுந்த சேதத்தை விளைவித்தார்கள்.

யமுனை நதியைக் கடப்பது மிகுந்த சிரமமாகப் போய் விடவே குப்தர்கள் தங்கள் யுத்த தந்தி ரத்தை மாற்றிக்கொண்டார்கள். அந்த நாட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டு எந்த விதப் பொருளும் உள்ளே நுழைய முடியாதபடி தடை செய்வதில் மும்முரமாக முனைந்தார்கள். பணத்திலும் மற் றப் பொருள்களிலும் குப்தர்களை விடத் தாழ்ந்த யாதேயர்கள் பஞ்சத்தினாலும் பட்டினியினாலும் பலவித கஷ்டங்களை யடைந்து தஞ்சமடைந்து விடுவார்கள் என்ற எண்ணத்திலேயே அத்தகைய முறையைக் கைக்கொண்டார்கள். அந்த யுத்த தந்திரமும் யாதேயர்களிடம் பலிக்கவில்லை.

* * *

ஒரு நாள் நடு இரவு சட்லெஜ் நதிக்கரை ஓர மாகக் சுபாஹுவின் குதிரை சென்று கொண் டிருந்தது. திடீரென்று அருகிலிருந்த கூடாரத்தி லிருந்து ஒரு பெண் ஓடி வந்து குதிரையின் கடி வாளத்தைப் பிடித்து நிறுத்தினாள். சுபாஹு முதலில் அப்படியே திடுக்கிட்டுப் போய்விட்டான். மேகம் சூழ்ந்த கரிய இருளில் ஒரு மின்னல் வெட்டி மறைந்தாற்போல அப் பெண்ணின் முழு மதியை யொத்த முகத்தின் பிரகாசம் யார் என்று அறைந்து விட்டது. உடனே சுபாஹு அவளை



[illegible]மாகத் தூக்கித் தன் குதிரையின்மீது அமர்த்திக் கொண்டான்.

"என்ன, நந்தா! உன்னைப் பிரிவு என்னும் துயர் வாட்டி வதைக்கிறதா!" என்று கேட்டான் யாதேய நாட்டின் தளபதி சுபாஹூ.

"யார் அவ்வாறு சொன்னாலும் சரி, அவர்கள் நாக்கைத் துண்டித்து விடுவேன்."

"அப்படியானால் என்னுடைய குதிரை மருட்டை ஏன் பிடித்து நிறுத்தினாய்!"

"தங்களுடைய ரதசாரதியாக ஆக வேண்டும் என்பது எனது விருப்பம். என்னுடைய அருமைத் தோழிகளான நவனாவும் சுமத்ராவும் ஆண் உடை தரித்து ரத சாரதிகளாகப் பணியாற்றுகிறார்கள். தங்களுடைய ரதத்திலமர்ந்து குதிரையின் கடிவாளத்தைப் பிடிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கக் கூடாதா!"

"கூடார மருத்துவ சாலையில் பணியாற்றுவது அதைவிடத் தாழ்ந்தது என்று நினைக்கிறாயா!" என்று கேட்டான் சுபாஹூ. பிறகு தனது இருதயத்தைத் தன் உள்ளங் கையால் அழுக்கிக் கொண்டு, "என் இருதயத்தின் கடிவாளத்தை நீ என்றுமே பிடித்துக் கொண்டிருக்கிறாயே! அப்படி யிருக்கும் பொழுது என் ரதத்தில் அமர்ந்து குதிரையின் கடிவாளத்தைப் பிடிக்க வேண்டும் என்று எதற்காக எண்ணுகிறாய்!" என்று கேட்டான் அவன்.


அவ்வாறு பேசும் பொழுது அவனுடைய குரல் கம்பியது. ஆனால் ஜயனந்தாவின் கன்னங்கரிய கருவிழிகளி லிருந்தோ கண்ணீர் ஊற்றுப் பெருக்கெடுத்தோடியது.

"இது என்ன! நீ ஏன் அழுகிறாய்!" என்று கூறிச் சுபாஹூ அவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தான். "நீ தளபதியின் வாழ்க்கைத் துணைவி மட்டுமல்ல; குடியரசுத் தலைவரின் மருமகளும் நீதான் என்பதை மறந்து விடக் கூடாது. நீதான் என்னுடைய வயது முதிர்ந்த அருமைத் தந்தைக்கு எந்தவித அபகீர்த்தியும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்."

இந்த வார்த்தைகளைக் கூறி விட்டு சுபாஹூ மிகுந்த மன வேதனையுடன் ஜயனந்தாவைத் தரையில் இறக்கி விட்டான்.

குதிரை வாயுவேக மனோ வேகமாகக் கரிய இருளில் பாய்ந்து சென்றது. ஜயனந்தா குதிரை போன திக்கையே திகைத்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கருப்பப் பையிலிருந்து ஒரு இன்பத் துடிதுடிப்பு கிளம்பி உடம்பு முழுதும் பரவி மெய்சிலிர்க்கச் செய்தது.

சாம்பல் நதிக்கரைக்கு எதிரில் உக்கிரமான பயங்கரப் போர் நடந்துகொண்டிருந்தது. படை



பலத்திலும் திறமையிலும் சிறந்த குப்தர்கள் வீறு கொண்டு யாதேயர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். யாதேயர்களின் படை பகைவர்களின் சேனைகளை விடக் குறைந்திருந்த போதிலும் ஆக்ரோஷமாகப் போர்புரிந்து முன்னேறினார்கள்.

எட்டு நாள் இரவும் பகலும் தொடர்ந்து நடந்த போரில் குப்தர்களுக்குத் தொடக்கத்தில் வெற்றியும், பிறகு யாதேயர்களுக்கு ஜெயமுமாக இருந்தது. ஆனால் எட்டாவது நாள் இரவு குப்தர்கள் நடத்திய பயங்கரத் தாக்குதல் யுத்த முடிவாக இருந்தது. அந்தப் பலமான எதிர்ப்பு யாதேயப் படைகளை வீழ்ச்சி யடையச் செய்தது. தளபதி சுபாஹூ அப்போரில் படுகாய மடைந்தான். மற்ற காயம்பட்ட வீரர்களோடு அவனும் மருத்துவக் கூடாரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

தலைவர் பத்ரஸ்வா சுபாஹூவின் மரணத்தைக் கேட்டுச் சிறிது கலக்க மடைந்திருந்தார். ஆனால் அக்கலக்கம் அவருடைய பணிக்கு எந்தவித குந்தகத்தையும் விளைவிக்கவில்லை. அவர் அடிக்கடி பாதுகாப்புப் படைகளை யெல்லாம் கண்காணித்து விட்டு மருத்துவக் கூடாரங்களுக்கும் சென்று காயம்பட்ட வீரர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தார். ஜயனந்தாவைப் பார்க்கும்போதெல்லாம் பல வழிகளில் அவளுக்கு ஆறுதல் மொழிகள் கூறித் தேற்றுவதற்கு முயன்றார். ஆனால் ஜயனந்தா "சுபாஹூ மறைய வில்லை. இன்னும் வாழ்கிறார்! யார் சுபாஹூ வீரமரண மடைந்து விட்டார் என்று சொன்னது! அவருடைய உயிர் இங்கே இன்னும் எந்தவித தடங்கலு மில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறதே!" என்றாள். இந்த வார்த்தைகளைக் கூறிய பிறகு ஜயனந்தா பெருமையுடன் நாணத்தினால் முன்பு வெளி யிடாத அந்த நல்ல செய்தியை,—ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள் என்ற நற் செய்தியை,— அவருக்கு வெளியிட்டாள்.

அந்த நற்செய்தி தலைவர் பத்ரஸ்வாவுக்குப் புத்துயிர் அளித்த மாதிரி யிருந்தது. அவர் புருகிராம நகரத்துக்கு, மகிழ்ச்சியுடன் திரும்பினார்.

யாதேயர்கள் குப்தர்களின் இருபுறத் தாக்குதல்களைத் தாங்க முடியாமல் பின் வாங்கிக் கொண்டே சென்றார்கள். குப்தர்களுடைய சேனை ஒவ்வொரு நகரத்தையும் கைப்பற்றிக் கொண்டு புருகிராம நகரை நோக்கி முன் சென்றது.

ரோக்தகிக் கருகில் பகைவர்களைப் பலமாக எதிர்த்துப் போர் புரியத் திட்ட மிட்டார்கள் யாதேயர்கள். இதுதான் அவர்களுடைய கடைசிப் போரும், வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சண்டையுமாகும். குப்தர்கள் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் ரோக்தகியை நோக்கி முன்னேறி வந்து விடுவார்கள் என்று தெரிந்தது. பூகோள ரீதியாக ரோக்தகிப் போரில் பகைவர்களிடம் தோல்வி யடைந்தால் புருகிராம் தலை நகரமே வீழ்ந்தது போலத்தான்.

ஒருநாள் அதிகாலை. யாதேயர்களின் யுத்த கோஷமும், முரசொலியும் எழுந்து அப்படைகள் குப்தர்களின் சேனையை ரோக்தகிக் கருகில் எதிர்க்கப் போகின்றன என்பதை அறிவுறுத்தியது.

அழகாக அலங்கரித்த கரிய பெரிய மத்தகஜத்தின் மீது ஆஜானுபாகுவான முதியவர் ஒருவர் பொற்கிரீட மணிந்து வீற்றிருந்தார். அந்த முதியவர் வேறு யாருமல்ல; யாதேயக் குடியரசின் ஜனாதிபதியான பத்ரஸ்வாதான். அவர்தான் அன்றையப் போருக்குத் தலைமை வகித்தார்.

அந்தப் போரே அவர்களுடைய நிலைநிலையை நிர்ணயிக்கும் போராகத் திகழ்ந்த படியால், அநேக வயது முதிர்ந்த பெரியவர்களும், தள்ளாடும் பிராயத்தை யடைந்த கிழவர்களும் யாதேயப் படையில் சேர்ந்து போர் புரிய வந்திருந்தார்கள். நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக யாதேயர்கள் வெறியுடன் பகைவர்களை உக்கிரமாக எதிர்க்கத் தொடங்கினர்கள். முதலில் யாதேயர்கள் ஆவேசமும், ஆக்ரோஷமும் பொங்க விரோதிகளை வீழ்த்தித் தள்ளினர்கள். ஆனால் கடலைப் போன்ற சேனையை அவர்கள் எவ்வளவு நேரந்தான் எதிர்த்துப் போரிட முடியும்! கடைசியில் யாதேயர்களின் கைதளர்ந்துவிட்டது.

குப்தர்களின் படைத் தலைவனுடைய விஜய சென் எறிந்த வேல் ஒன்று தலைவர் பத்ரஸ்வாவின் மார்பில் வந்து பாய்ந்தது. ஜனபதி பத்ரஸ்வா அப்படியே மூர்ச்சையாகித் தாம் அமர்ந்திருந்த யானை அம்பாரியிலேயே சாய்ந்து விட்டார்.

விவேகமும் புத்தி கூர்மையும் மிகுந்த அந்த யானை தனது தலைவனோடு அப்படியே புருகிராம் நகரை நோக்கித் திரும்பி ஓடத் தொடங்கி...

தவளகிரியிலுள்ள புத்த விஹாரத்தில் தலைவர் பத்ரஸ்வா மரணப் படுக்கையில் படுத்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் பௌத்த சந்நியாசி மேக புத்தரும், அவருடைய சீடர்களும் அமர்ந்து பணி விடை புரிவதில் மூழ்கியிருந்தார்கள்.

அதற்குப் பக்கத்திலிருந்த தேரி விஹாரத்தில் (கன்னி மடம்) ஜயனந்தா பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். ஜயனந்தா தனது அருமைக் கணவரின் தந்தைக்குக் கடைசி வேளையில் பணிவிடை புரிவதற்காக அங்கு வந்திருந்தாள். ஆனால் பௌத்த குரு மேக புத்தரும் அவருடைய சீடர்களும் அவளைச் சிறிது களைப் பாறும்படி வேண்டிக் கொண்டார்கள்.

மூங்கில் நந்தவனத்திலுள்ள அத்தனை மருந்துப் பச்சிலைகளையும், வேர்களையும் கொண்டு வந்து மேகபுத்தர் அவருடைய காயத்தில் வைத்துக் கட்டினர். ஆனால் ஜீவனுள்ள இடத்தில் ஆழமாக வேல் பாய்ந்து பலத்த காயத்தை ஏற்படுத்தி விட்டதால், காயம் ஆறி உயிர் மீண்டுவிடும் என்னும் நம்பிக்கை யிருக்கவில்லை.

குப்தர்கள் யாதேயக் குடியரசு முழுவதும் கைப்பற்றிப் பரிபூரண வெற்றி யடைந்தார்கள். வெற்றி யடைந்த குப்தப் படைவீரர்கள் புருகிராம் நகரத் தெருக்களின் வழியாக ஜெய கோஷத்துடன் சென்றர்கள். புருகிராம் நகரமே பயங்கரப் பாலைவனமாகக் காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் ஆயிரக் கணக்கான உயிரற்ற சடலங்கள் கிடந்து போரின் கொடுங்கோன்மையைப் பறைசாற்றின. கண்ணினும் இனிய சுதந்திரத்துக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் துறந்து அமரத்துவம் அடைந்த யாதேயர்களின் நாட்டின் மீது குப்தர்கள் தங்கள் ஜெயக் கொடியை நாட்டினர்கள்.

ஒரு நாள் இரவும் பகலும் கண் கொட்டாமல் தலைவர் பத்ரஸ்வாவின் அருகில் மேக புத்தர் விழித்திருந்து அவருக்கு வேண்டிய சிச்ருஷைகள் செய்து கொண்டிருந்தார். ஒரு இலட்சியத்துக்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்த அந்த முதியவரிடமிருந்து சிறிது சிறிதாக உயிர் பிரிவதை மேகபுத்தர் அறிந்தார். பல மணி நேரங்கள் பத்ரஸ்வாவின் உயிர் ஊசலாடிக் கொண்டும், ஜயனந்தாவின் பிரசவ வேதனையைக் கண்காணிப் பதிலும் கழிந்தது. பத்ரஸ்வாவின் நாடி தளர்ந்து



சாப்பிடுபவர் :—ஐயா, இதோ பாரும்! காப்பியில் ஒரு பொத்தான் கிடக்கிறது!
சர்வர் :—நல்ல வேளை! இவ்வளவு நேரமாக அதைத்தான் தேடிக் கொண்டு இருந்தேன்!

போவதையும், இருதயத் துடிப்பு நிற்பதையும் மேகபுத்தர் தெரிந்து கொண்டார். பத்ரஸ்வாவின் உயிர் இவ்வுலக வாழ்விலிருந்து விடை பெற்றுக் கொண்டது.

மேகபுத்தர் சகலவிதமான உலகப் பற்றுகளையும் துறந்தவர்; பலவிதமான சஞ்சலங்களையும் அடக்கி ஆள்பவர். அப்படிப்பட்ட மேக புத்தரையே பத்ரஸ்வாவின் வீரமரணம் சிறிது நேரம் கலக்கி விட்டது. சில வினாடிகளுக்குள் தேரி விஹாரத்திலிருந்து பெண் ஒருத்தி வந்து ஜயனந்தாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கும் நற்செய்தியை அறிவித்தாள்.

மேக புத்தரின் முகத்தில் தோன்றிய துக்கச் சாயை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. அந்த நற்செய்தியைக் கேட்டதும் மலர்ந்த முகத்துடன் "பத்ரஸ்வா இன்னும் வாழ்கிறார். அவருடைய உடல் மட்டுந்தான் மாறி விட்டது" என்று கூறினார். பிறகு சிறிது நேரம் ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கி விட்டுப் பின் நம்பிக்கை மிகுந்த குரலில், "குடியரசு இலட்சியமும் இனி மேல் நிலைத்து நிற்கும்" என்றார்.

அடுத்த நாள் மேக புத்தர் தவளகிரியிலிருந்து புருகிராம் நகரத்தை நோக்கிச் செல்லும் சந்நியாசியிடம், "நகரத்திலிருந்து யாதேயப் பொன் நாணயங்கள் சிலவற்றைக் கொண்டு வாருங்கள்!" என்ற விநோத உத்தரவைப் பிறப்பித்தார்.

அப் பௌத்த சந்நியாசி அதற்குரிய காரணத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே மேகபுத்தரின் கட்டளையை நிறைவேற்றினர்.

ஸ்ரீபுத்த விஹாரத்தின் வாசலுக்கு வெளியில் போட்டிருந்த பலகையில் மேக புத்தர் அமர்ந்திருந்தார். அவருக்கு முன்னால் ஜயனந்தா வந்து நின்று தன் அருமைப் புதல்வனை அவருடைய தாமரைப் பாதங்களுக்கருகில் கிடத்தி, ஆசிர்வாதம் செய்யும்படி வேண்டினாள். மேகபுத்தர் அப் பச்சிளங் குழந்தையின் தளிர்க் கரங்களைப் பற்றி விரல்களைத் திறந்து அதனுடைய உள்ளங் கையில் ஒரு பொன் நாணயத்தை வைத்தார்.

அந்தப் பொன் நாணயத்தில் 'யாதேயக் குடியாட்சிக்கு ஜே!' 'யாதேயக் குடியரசுக்கு வெற்றி' என்ற பொன் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன.

# தீபாவளி விசேஷ விற்பனை!

**R. S. E.**

வழக்கம்போல் இதுவரை தங்களுக்குத் திருப்திகரமாக தீபாவளிப் பட்டுச் சேலைகள் தயார் செய்து அளித்ததுபோல் இந்த தீபாவளிக்கும் மிகவும் உயர்ந்த வேலைப்பாடுகள் கூடிய அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள், பல நூதன டிஸைன்களில் தயார் செய்து தருவித்துள்ளோம். இன்றே விஜயம் செய்து தங்களுக்குத் தேவையானதை பொறுக்கி எடுத்துச் செல்லக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**விலை சகாயத்திற்கும் நம்பிக்கைக்கும் உகந்த ஜவுளி வியாபாரிகள்**

## ராதா ஸில்க் எம்போரியம்

14, சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை - போன். 84188

○●○

## ருக்மணி ஸில்க் எம்போரியம்

போன்: 58 - 48-49, பெரிய தெரு, கும்பகோணம்






1806-ம் வருஷத்திலிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்கு பெயர்போனது.

CB/9




# ஜாலபுரி இளவரசன்

கமலா

## 4. மகாராஜா நம்பினார்!

ஒருநாள் பூபதி அரண்மனைக்குச் சென்றிருந்த சமயம் அரச குமாரி அநுராதா தோழிகளுடன் பந்தாடிக் கொண்டிருப்பதைக் கண்டு சிறிது பார்த்துக்கொண்டு நின்றான். அப்பொழுது அவனுக்குத் தன் அருமைத் தங்கை புவனாவின் நினைவு வந்தது. 'ஐயோ, புவனா! நீ எங்கு போனாயோ? உன்னை யார் எடுத்துச் சென்றார்களோ! என்ன கஷ்டப்படுகிறாயோ? என்னை விட்டு இருந்தறியாத நீ எங்கு என்னை நினைத்து அழுகிறாயோ? நீயும் இப்பொழுது என்னுடனிருந்தால் இவர்கள் விளையாடுவதைக் கண்டு எவ்வளவு சந்தோஷப்படுவாய்!' என்றெல்லாம் நினைத்து அவன் கண்ணீர் விட்டான்.

பூபதி அழுது கொண்டிருப்பதை அவனருகில் வந்த அரச குமாரி அநுராதா பார்த்து விட்டாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் பூபதி அழுகிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

பூபதி பதில் சொல்லாமல் விசித்துக் கொண்டிருந்தான்.

பூபதியின் களை சொட்டும் முகமும் இனிய பேச்சும் அரச குமாரியையும் பெரிய ராணியையும்கூட அவனிடம் பிரியம் கொள்ளும்படி செய்திருந்தது.

"பூபதி, அழாதே! மனதைத் தேற்றிக் கொண்டு உனக்கு என்ன நேர்ந்துவிட்டது என்பதை என்னிடம் சொல்லு" என்று பரிவுடன் கேட்டாள் அநுராதா.

பூபதி, "என்னிடம் ஒரு ஸீல் வைத்த கடிதம் இருக்கிறது. அதை எனது பதினாறுவது வயது பூர்த்தியாகும் வரையில் ஒருவரும் பிரித்துப் பார்க்காமல் பத்திரப்படுத்தி வைத்திருந்து, பதினாறும் வயது முடிவடைந்த தினம் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்க்கும்படி எனக்குக் கட்டளை இடப்பட்டிருக்கிறது. கொஞ்ச நாள் முன்பு வரையில் நான் வேறு ஊரில் வசித்து வந்தேன். அந்த வீட்டு அம்மாள் அந்தக் கடிதத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து நான் அந்த ஊரை விட்டுப் புறப்படும்பொழுது என்னிடம் ஒப்படைத்தாள். ஆனால் நான் சிறுவனாக இருப்பதால் அந்தக் கடிதத்தைப் பத்திரமாக வைத்திருக்க முடியவில்லை. இரண்டு நாள் முன்பு அது கெட்டுப்போக இருந்தது. அந்தக் கடிதத்தை இன்னும் அதிகமாகப் போனால் ஒரு மாதத்திற்குமேல் பத்திரப்படுத்த வேண்டாம். அதுவரையில் என்னால் அதைப் பத்திரமாகக் காப்பாற்ற முடியாது போலிருக்கிறது!" என்றான் ஜாலமாக.

"ஆமாம், இன்னும் ஒருமாதம் அதைப் பத்திரப் படுத்தினால் போதுமா? அப்படியானால் அந்தக் கடிதத்தை என்னிடம் கொடு. நான் அதைப் பத்திரமாக வைத்திருந்து தருகிறேன்" என்றாள் அநுராதா.

பூபதி "உங்களிடம் கொடுத்து வைப்பதில் எனக்கும் ரொம்ப சந்தோஷம்தான். ஆனால் நீங்களும் என்னைப்போல் சின்ன வயதுள்ளவராக இருப்பதால் நான் அதை உங்களிடம் கொடுத்து வைப்பது தப்பான காரியமாகும். இந்தமாதிரி பத்திரமாக வைத்திருக்க வேண்டிய பெரிய விஷயங்களைத் தங்கள் தாயாரைப் போன்றவர்களிடம் தான் ஒப்படைக்க வேண்டும்!" என்றான்.



அந்தச் சமயம் அரச குமாரி பூபதியுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தபடியே பெரிய ராணி வந்து சேர்ந்தார்.

அரச குமாரி அநுராதா உடனே தாயாரிடம் பூபதி சொன்ன விஷயங்களை எல்லாம் ஒன்று விடாமல் சொன்னாள்.

அதற்கு ராணி, "பூபதி, நீ அதற்காகப் பெற்றோரை நினைத்து வருத்தப்பட வேண்டாம். அந்தக் கடிதத்தை என்னிடம் கொடு. நான் பத்திரமாக வைத்திருந்து நீ கேட்கும் போது தருகிறேன்!" என்றாள்.

பூபதி சந்தோஷத்துடன் தனது இடுப்பில் பத்திரமாக வைத்துக் கட்டிக் கொண்டிருந்த மெல்லிய துணியை அவிழ்த்து அதிலிருந்து ஒரு சீல் வைத்த கவரை எடுத்து ராணியிடம் கொடுத்து "மகாராணி, இந்த விஷயம் நம் மூவரைத் தவிர மற்றப்படி யாருக்குமே தெரியக்கூடாது. மந்திரியாரிடம் கூட மூச்சு விடக்கூடாது. கடவுளிடம் ஒப்படைப்பது போல் தங்களிடம் கொடுத்து விட்டேன். நான் ஏதாவது தப்பிதமாகப் பேசி இருந்தால் தயவு செய்து மன்னித்து விடுங்கள்" என்று பணிவுடன் கூறினான்.

இராணி "பூபதி, நீ துளிக்கூட விசாரப்படாதே. இக் கடிதத்தைப் பற்றி யாரிடமும் சொல்லமாட்டேன். இது இரகசியமாக இருக்கும். நீ என்றைக்கு வந்து கேட்டாலும் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னாள். பிறகு, பூபதி மந்திரி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

பூபதிக்கு அன்று இருப்பாகவே இல்லை. ஏனெனில் முதல் நாள் மாலையில் வீரபத்திரனிடமிருந்து மந்திரி விஷ மருந்து வாங்கிக் கொண்டு வந்து விட்டதை முன்போலவே மேலப்பாலம் சென்று முன்னெச்சரிக்கையாக மரத்தின் மேலேறி, மந்திரி மருந்து பெற்றுக் கொண்டதையும் பார்த்து விட்டு வீடு வந்து சேர்ந்தான்.

கடைசியாக பூபதிதான் இனி மந்திரியுடனேயே சதா சுற்றியபடி அவனைக் கவனித்துக் கொண்டிருந்து சமயம்போல் நடந்துக் கொள்ள வேண்டியதே தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

மூன்று நாட்கள் சென்றன. மூன்றாவது நாள் அன்று அமாவாசை தினம். அன்று மாலை இருட்டும் சமயத்தில் மந்திரி வெளியில் புறப்படுவதைக் கண்ட பூபதி அவன் பின்னாலேயே மெல்லப் புறப்பட்டான்.

மந்திரி நேரே அரண்மனைக்குச் சென்று அரசனின் அறையில் அரசனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான்.

அதை அறையின் ஜன்னலின் வெளிப்புறம் செடிகளின் மறைவில் மறைந்து நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான் பூபதி.

அப்பொழுது பணியாள் அரசனுக்கும் மந்திரிக்கும் பழரஸம் கொண்டுவந்து வைத்துச் சென்றான்.

மந்திரி அரசனது அறையில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைச் சுட்டி ஏதோ சொல்லவும் அரசன் அந்தப் படத்தைத் திருப்பிப் பார்த்தபடி பதில் சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் மந்திரி தன் கையில் வைத்துக் கொண்டிருந்த ஒரு பொட்டலத்தைப் பிரித்து அரசனது பழரஸத்தில் கொட்டி விட்டுக் கையிலிருந்த மருந்து மடித்திருந்த காகிதத்தைக் கசக்கிக் கீழே போட்டு விட்டான்.

அதை எல்லாம் ஜன்னலுக் கப்பாலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பூபதி திகைத்தான். அப்பொழுது அதை அரசன் குடிக்காமல் தடுப்பதெப்படி என்ற திகைப்புத்தான் அவனுக்கு ஏற்பட்டது.

படத்தைப் பற்றிய பேச்சு முடிந்ததோ என்னவோ அரசன் பழ ரஸக் கிண்ணத்


## க ல் கி

( வாரப் பதிப்பு )

### சந்தா விவரம்

| | ஒரு வருஷம் | ஆறுமாதம் |
|---|---|---|
| இந்தியா, சிலோன் | ரூ. 13-0-0 | 6-8-0 |
| பர்மா, மலேயா, வெளிநாடு | ரூ. 14-10-0 | 7-6-0 |

குறிப்பு :— வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவுசெய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை

தைக் கையில் எடுத்துக் கொண்டு அதைப் பருக வாயருகில் கொண்டு போனான்.

அதே க்ஷணம் படீரென்று ஜன்னல் வழியாகப் பறந்துவந்த ஒரு பெருங்கல் அரசனது கையையும் பழக் கோப்பையையும் அடித்துச் சுவரில் மோதி விழுந்தது.

பழக் கோப்பை சுக்கு நூறாய் உடைந்து, பழரஸம் நாலாபுறமும் சிதறிற்று.

மந்திரி அசாத்தியக் கோபத்துடன் சீறி எழுந்து "யாரது?" என்று கத்தியபடி ஜன்னலருகில் ஓடிவந்து பார்த்தான்.

ஆனால் ஜன்னலுக்கு வெளியில் யாரையும் காணவில்லை.

உடனே மந்திரி சேவகர்களுக்கு அரசனைக் கல்லாலடித்த இராஜத் துரோகியைப் பிடிக்கும்படி உத்தர விட்டான்.

அரசனை அடித்தவனைக் கண்டுபிடிக்க சேவகர்கள் தபதபவென ஓடினார்கள்.

பூபதி, அக்கல் அரசன் கையைத் தாக்கினதைக் கண்டானோ இல்லையோ சுவரை ஒட்டி இருந்த செடிகளின் பின்னால் மறைந்தபடி வேகமாகத் தவழ்ந்தவாறே அந்தப்புரம் இருக்கும் திக்கைப் பார்த்து ஓடினான். அந்தப் புரத்தின் கொல்லைப்புறக் கதவு ஒருக்களித் திருந்ததைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

உள்ளே சென்றதும் அக்கதவை நன்கு உள்புறம் தாளிட்டுவிட்டுச் சற்று நின்று அந்த இடத்தைச் சுற்றிலும் கவனித்தான். ஒரு மூலையில் ஒரு பெரிய பீரோ வைக்கப் பட்டிருப்பதைக் கண்டதும் பூபதி மெதுவாகப் பீரோவின் பின் பக்கத்தில் போய் மறைந்து கொண்டான். (தொடரும்)

# சினிமா வேண்டாம்!

*விஜயம்*

கிட்டு அன்றையதினம் மிகவும் உற்சாகமாக ஆபிஸிலிருந்து வந்தான். அவன் உற்சாகத்துக்கு ஏற்றாற்போல் அவன் அக்கா, அம்மா யாரையும் வீட்டில் காணோம். அவன் மனைவி பாமா மாத்திரம் இருந்தாள். அவன் உற்சாகம் தாங்க முடியாமல் சீட்டி யடித்துக் கொண்டே உடைகளை மாற்றிக்கொண்டு உள்ளே வந்தான். பாமா அவனுக்குச் சிற்றுண்டி தயாராய் வைத்திருந்தாள்.

கிட்டு சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டே, "சினிமாவுக்குப் பாஸ் கிடைத்திருக்கிறது, பாமா!" என்றான்.


பாமா பதில் பேசவில்லை. அவள் முகம் களையிழந்து போய் விட்டது. அதைக் கண்டு கிட்டு பதறிப் போய் விட்டான்.

"பாமா, உனக்கு உடம்புக்கு என்ன?"

"ஒன்றும் இல்லை!"

"சினிமாவுக்குப் பாஸ் கொண்டு வந்திருக்கிறேன் என்றால் சந்தோஷப்பட மாட்டேன் என்கிறாயே!"

"ஆமாம் நான் எப்படிச் சந்தோஷப் பட முடியும்? உங்கள் வீட்டு மனிதர்களோடு சினிமாவுக்குப் போகிற கஷ்டம் எனக்கல்லவோ தெரியும்? உங்கள் அக்கா குழந்தைகளுக்குப் பிளாஸ்கில் காப்பி எடுத்துக் கொண்டு போக வேண்டும். சின்னக் குழந்தைக்குத் தனியாகப் பால் எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் அக்காவுக்கு ஒரு கூஜாவிலே காப்பி ஸ்பெஷலாகத் தயார் பண்ணி எடுத்துக் கொள்ள வேண்டும். சின்னக் குழந்தை இருட்டிலே இருக்காது. 'வ்ரா, வ்ரா' என்று கத்தும். படம் முடிகிறவரையிலே அதைத் தூக்கிக் கொண்டுவெளியிலே உலாத்தணும். இந்த லக்ஷணத்திலே நான் படம் பார்ப்பது எப்படி? அப்புறம் படம் முடிவதற்குள்ளே எல்லாக் குழந்தைகளும் தூங்கிப் போய் விடும். இரண்டு பெரிய குழந்தைகளையும் நான் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர வேண்டும். இந்த வேலைக்காரி உத்தியோகம்தான் சினிமாவுக்குப் போனால் எனக்குக் கிடைக்கும்!" என்று பாமா பொரிந்து தள்ளினாள்.



"பாமா, நீ தவறாக நினைத்து விட்டாய்! நீ இன்றைக்கு அவர்களோடு சினிமாவுக்குப் போக வேண்டாம். ஆறு பேருக்கு இருக்கிறது பாஸ்! அம்மா, அக்கா குழந்தைகள் எல்லோரும் போய் வரட்டும். நானே அழைத்துக் கொண்டு போய் அவர்களைத் தியேட்டரிலே விட்டு விட்டு வந்து விடுகிறேன். இன்றைக்கு ஒரு நாளாவது நாம் இரண்டு பேரும் 'ஜாலி'யாக வீட்டிலே மூன்று மணி நேரம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கலாம்! அந்த உத்தேசத்தோடு தான் நான் சினிமா பாஸுக்கு முயற்சி செய்து சம்பாதித்தேன்! என்ன? உனக்குச் சம்மதம் தானே?" என்று கேட்டான் கிட்டு.

பாமாவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

# அழகுக்கு அழகு!



வி. எஸ். ஆர்.

சென்னையிலிருந்த தன் கணவன் வீட்டுக்கு நிர்மலா குடித்தனம் செய்ய வந்து பல வாரங்கள் ஆயின. ஆயினும் அவள் மனசில் குடிகொண்டிருந்த பெருமையும் பரபரப்பும் திகைப்பும் அடங்கவில்லை. பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்து, அந்தக் கிராமத்தை விட்டு அதுவரை வெளியேறி யறியாத நிர்மலாவுக்குப் பட்டின வாசம் திகைப்பை அளித்தது. பட்டினத்தின் லட்சக் கணக்கான ஜனங்கள், விதம் விதமான கடை கண்ணிகள், அழகிய கடற்கரை, கண்ணைப் பறிக்கும் மோட்டார்கள் எல்லாம் அவள் மதிமயக்கத்தை அதிகப்படுத்தின. "பட்டினத்தின் மகிமையே மகிமை! இங்கே வசிக்கும் பாக்கியம் எல்லாருக்கும் கிடைத்து விடுமா?" என்று எண்ணி அவள் உள்ளம் குதூகலித்தது.

நிர்மலாவின் கணவன் நடராஜன் ஒரு பாங்கியில் குமாஸ்தாவாக இருந்தான். எழுபது ரூபாய் சம்பளம். புக்ககத்தில் வேறு மனிதர்கள் கிடையாது. ஆகவே எழுபது ரூபாய்க்குள் குடித்தனத்தை வெகு கச்சிதமாக நடத்திவந்தாள் நிர்மலா. கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நிர்மலாவுக்குச் சிக்கனத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? தன் மனைவியின் சாமர்த்தியத்தைக் கண்டு நடராஜன் பூரித்துப் போய் விட்டான். பல வருஷங்களாக ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு நாக்குச் செத்துப் போயிருந்த அவனுக்கு நிர்மலாவின் சமையல் அமிர்தினும் அருமையாக இருந்தது; தேனினும் இனித்தது.

சில மாதங்கள் சென்றன. பெருமையும் ஆனந்தமும் நிறைந்திருந்த நிர்மலாவின் மனசில் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மனக்குறை தோன்றியது. நடராஜன் அவளைக் கடற்கரைக்கோ சினிமாவுக்கோ அழைத்துச் சென்றபோது, அவள் கண்ட காட்சிகள் அந்த மனக்குறைக்குத் தூபம் போட்டன. விதம் விதமான பட்டுப் புடவைகளும் விலையுயர்ந்த ஆபரணங்களும் அணிந்து செல்லும் ஸ்திரீகளைப் பார்க்கும்போதெல்லாம், "நான் ஒரு ஏழை!" என்ற தாழ்வு மனப்பான்மை அவள் மனதில் தோன்றி அவளுக்கு வேதனையை உண்டாக்கியது. வெளியில் சென்ற பொழுதெல்லாம் யார் என்ன புடவை கட்டிக் கொண்டிருக்கிறாள் யார் என்ன நகை போட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதை ஆராய்வதிலேயே அவள் மனம் ஈடுபட்டிருந்தது. ஒவ்வொரு சமயமும் வீட்டை விட்டுக் கிளம்பும்போது நிர்மலா எவ்வளவு உற்சாகத்துடனும் ஆவலுடன் இருந்தாளோ, அவ்வளவு வேதனையுடன் மனக்குறையுடனும் வீட்டுக்குத் திரும்புவாள். திரும்பி வரும்போது, "ஏன் என்னமோ மாதிரி இருக்கிறாய்?" என்று பல தடவை நடராஜன் மனைவியைக் கேட்டான். ஆனால் நிர்மலா அவ்வளவு எளிதில் மனசிலிருப்பதைச் சொல்லி விடுவாளா? சொல்லித்தான் பிரயோஜனம் உண்டா?

நடராஜனின் எழுபது ரூபாய் சம்பளம் அவர்கள் குடும்பச் செலவுக்கே சரியாக இருந்தது. ரிப்பன், பவுடர், ஸ்நோ முதலிய பட்டண வாழ்க்கைக்கு இன்றியமையாத சாமான்கள் வாங்குவதுகூடச் சில சமயம் முடியவில்லை. முதல் மாதம் அவள் அசட்டுத்தனமாக ரப்பர் வளைகள் வாங்கப் போய்க் கடைசியில் பால்காரனுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியில் துண்டு விழுந்து விட்டது. அப்பொழுது அவள் எவ்வளவு தவிப்புத் தவித்தாள்! நடராஜன் முகத்தில் எவ்வளவு அலுப்பும் வேதனையும் காணப்பட்டன! சாதாரண ரப்பர் வளைக்கே இவ்வளவு பாடென்றால் மற்ற பெண்களைப் போல் அவள் புதுப்புதுப் புடவைகளையும் நகைகளையும் மனசாலும் நினைக்க முடியுமா?

சில நாட்களுக்கெல்லாம் நடராஜன் குடியிருந்த வீட்டில் எதிர் போர்ஷனுக்கு ஒரு புதுக் குடித்தனம் வந்து சேர்ந்தது. குடித்

தனம் வந்தவருக்கு சுமார் பதினைந்து வயதில் ஒரு பெண் இருந்தாள். வந்ததுமே அந்தப் பெண் சுசீலா நிர்மலாவின் சிநேகிதியாகி விட்டாள். சுசீலா நவநாகரிகம் மிகுந்தவள். அவள் செய்துகொள்ளும் அலங்காரங்களையும் உடுத்திக் கொள்ளும் புது மோஸ்தர்ப் புடவைகளையும் பார்க்கப் பார்க்க நிர்மலா மனசுக்குள் சற்றே பொருமை தலைகாட்டத் தான் செய்தது. "நானும் அவளைவிட இரண்டு வயதுதானே பெரியவள்? எனக்கு மட்டும் இப்படியெல்லாம் அலங்கரித்துக் கொள்ள ஆசை யிருக்காதா?" என்று எண்ணுவாள்.

சுசீலா மிகவும் சகஜ மனப்பான்மை கொண்ட பெண். "நிர்மலா! இந்த அலங்காரம் நீயல்லவா செய்து கொள்ள வேண்டும்? அழகுக்கு அழகு செய்தது போலிருக்கும்!" என்று கூறி அவள் தன் புடவைகளையும் நகைகளையும் கூட நிர்மலாவுக்குக் கொடுத்து அவளை சிங்காரித்து விட்டு அழகு பார்ப்பாள். தன் சிநேகிதியைப் பார்க்க, அவளது பல நகைகளைக் காணக் காண, 'எனக்கும் நல்ல காலம் வராதா?' என்று நிர்மலா அடிக்கடி எண்ணிப் பெருமூச் செறிவது வழக்கமாகி விட்டது.

ஒருநாள், சுசீலாவுக்கு அவள் தகப்பனார் ஒரு நகை வாங்கிக்கொண்டு வந்தார். அதை எடுத்துக்கொண்டு ஓட்டமாக ஓடிவந்து சுசீலா பெருமையுடன் தன் சிநேகிதியிடம் காண்பித்தாள். அதைக் கையில் வாங்கிப் பார்த்த நிர்மலா, அதன் அழகைப் பார்த்து மயங்கிவிட்டாள். அதில் சின்னஞ் சிறு நட்சத்திரங்களை மெல்லிய பூங்கொடி ஒன்று சேர்த்திருந்தது.



"இது உனக்கு எப்படி யிருக்கிறது பார்க்கலாம்?" என்று கூறி நிர்மலாவின் கழுத்தில் இட்டாள் சுசீலா.

"பேஷ்! ரொம்பப் பிரமாதம்!" என்று உற்சாகத்துடன் கூவினாள் அவள்.

இந்தச் சமயம் ஆபீசிலிருந்து நடராஜன் திரும்பி வந்துவிட்டான். சுசீலாவும் சங்கோசத்துடன் தன் அறைக்கு ஓடிவிட்டாள். நட்சத்திரமாலை நிர்மலாவின் கழுத்திலேயே சற்று நேரம் இருந்தது. நடராஜன் அதைப் பார்த்து ஏதாவது சொல்கிறானா என்று பார்க்கவே அவள் கணவனைக் கடைக் கண்ணால் பார்த்தாள். அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

"நிர்மலா! நட்சத்திரமாலை சுசீலாவினுடையது போலிருக்கிறது!" என்றான் நடராஜன். அவன்தான் பல தடவை சுசீலாவின் நகைகள் தன் மனைவியின் அழகுக்கு அழகு செய்திருப்பதைப் பார்த்திருக்கிறானே!

"ஆமாம், பிறத்தியாரின் நகைகளை இரவல் வாங்குவதைத் தவிர வேறு வழி?" என்றாள் நிர்மலா. அவளது புன்னகை மொழியில் சற்று மனத் தாங்கலும் கலந்திருந்தது. ஆனால் அவள் வார்த்தைகளை நடராஜன் கவனித்ததாகத் தெரியவில்லை.

"நிர்மலா! நீ இன்றைக்குப் போட்டுக் கொண்டிருக்கும் நீல ரவிக்கை எப்படி யிருக்கிறது? இந்த மாலையோ, நீல நிறமான ஆகாயத்தில் ஜொலிக்கும் நட்சத்திரங்களைப் போலிருக்கிறது."

"ஆமாம். நீங்கள் வர்ணித்து என்ன பிரயோஜனம்! எனக்கும் இந்தமாதிரி ஒரு மாலை வாங்கி எப்பொழுது போடப் போகிறீர்கள்?" என்று சற்று உற்சாகத்துடன் கேட்டாள் அவள்.

"நீல ஆகாயத்தில் நட்சத்திரம் ஜொலிப்பது அழகான காட்சிதான். ஆனால் பூரண சந்திரனுக்கு முன் இந்த நட்சத்திரங்கள் எம் மாத்திரம்? நிர்மலா, உன் முகம்தான் அந்தப் பூரண சந்திரன். உன் மதிவதனத்தைப் பார்த்துவிட்டு இந்த நட்சத்திர மாலையையும் பார்த்தால் இது ஒரு அவலட்சணமாகவே தோன்றுகிறது" என்றான் நடராஜன் குறும்புச் சிரிப்புடன். நிர்மலாவின் உற்சாகம் எல்லாம் அணைந்து விட்டது.

அவளுக்கு முதலில் கோபம் கோபமாக வந்தது. கணவனைக் கோபித்துக் கொண்டு தான் என்ன பிரயோஜனம்? பண மிருந்தால் செய்து போட மாட்டாரா? கையில் இல்லாத குறையை வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் சொன்னதற்காகச் சந்தோஷப் பட வேண்டியதுதான். இவ்விதம் எண்ணி மனசைத் தேற்றிக்கொள்ள முயன்றாள்

அவள். ஆனால் பாழும் மனம் அவ்வளவு எளிதில் திருப்தி யடைகிறதா? அந்த நட்சத்திர மாலை அழியாச் சித்திரமாக அவள் மனத்தே பதிந்துவிட்டது. எப்பாடு பட்டாவது அந்த மாலை ஒன்று செய்து போட்டுக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தாள். அக்கம் பக்கத்தில் விசாரித்து ஐந்து பவுனுக்குக் குறைந்து அதைச் செய்ய முடியாது என்பதைத் தெரிந்து கொண்டாள். அவள் போட்டுக்கொண்டிருந்த ஒரே ஆபரணமான தங்கச் சங்கிலி இரண்டு பவுன். அதை அழித்தால் கூட மேற்கொண்டு மூன்று பவுன் போட்டால்தான் மாலை செய்ய முடியும். இதெல்லாம் நடக்கக் கூடியதா?

ஒருநாள் நடராஜன், "எங்கே? சுசீலாவின் நட்சத்திர மாலையைக் கொஞ்சம் வாங்கிக் கொண்டு வா!" என்று உற்சாகத்துடன் கேட்டதும், நிர்மலாவின் கனவுகள் உயிர்பெற்றெழுந்தன. மானைப்போல் துள்ளி ஓடிச் சென்று மாலையை வாங்கி வந்தாள். நடராஜன் மாலையைத் திரும்பத் திரும்பப் பார்த்துவிட்டு, "நிர்மலா! நீ சொன்னது சரிதான். மாலை ரொம்ப அழகாகத்தா னிருக்கிறது!" என்றான். "அதைத்தான் சொன்னேன். நீங்கள் காதில் போட்டுக் கொள்ளவே யில்லை" என்றாள் அவன் மனைவி சட்டென்று.

"இதைச் செய்ய எத்தனை பவுனாயிற்றாம்?"

"அவர்கள் இதைக் கடையில்தான் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் இதைச் செய்யக் குறைந்தபட்சம் எவ்வளவு ஆகும் என்று பத்தரைக் கேட்டு விட்டேன். ஐந்து பவுனில் செய்து விடலாமாம்!"

"அவ்வளவுதான் ஆகுமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் நடராஜன்.

"அவ்வளவேதான்!"

நடராஜன் ஏதோ யோசிப்பதாகத் தோன்றியது. யோசித்து ஒரு முடிவுக்கு வரட்டும்; அவசரப்படுத்தக் கூடாது என்று நிர்மலா தீர்மானித்தாள். அன்று முழுதும் அவள் உள்ளத்தில் ஆனந்தம் ததும்பியது. இறக்கை முளைத்து ஆகாயத்தில் பறப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது.

இந்தச் சம்பாஷணை நடந்த ஒரு வாரத்துக் கெல்லாம் நடராஜன் கையில் பெட்டியுடன் வீட்டுக்குள் பிரவேசித்தான். "கையில் என்ன?" என்று ஆர்வத்துடன் கேட்ட வண்ணம் புன்னகை முகத்துடன் நிர்மலா ஓடோடியும் வந்து அதை வாங்கிக் கொள்ளக் கையை நீட்டினாள். ஆனால் நடராஜனோ பெட்டியை அவளிடம் கொடுக்காமல் மடியில் வைத்துக் கொண்ட வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்தான்.

"நிர்மலா! நான் சொல்லப் போவதைக் கேட்டு நீ எவ்வளவு ஏமாற்ற மடைவாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என் தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமையை நான் எப்படி மறக்க முடியும்? பம்பாயிலுள்ள என் தங்கை கமலுவுக்கு இந்த நட்சத்திர மாலையைத் தீபாவளிப் பரிசாக அனுப்பப் போகிறேன். எனக்கு வேலை கிடைத்ததும் அவளுக்கு ஒரு சங்கிலி செய்து போடுவதாக வாக்குறுதி யளித்திருந்தேன். வேலையில் சேர்ந்து இரண்டு வருஷங்கள் ஆகியும் என் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. இவ்வளவு நாள் நான் சேர்த்து வைத்திருந்த பணம் கொஞ்சம் இருந்தது. சுசீலாவின் நட்சத்திர மாலையைப் பார்த்ததும், அந்தமாதிரி ஒரு மாலை செய்து கமலுவுக்கு அனுப்பி என் வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொள்ளத் தீர்மானித்தேன். நிர்மலா!......நீ எவ்வளவு தூரம் அந்த மாலையை விரும்புகிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இனிமேல் நான் சம்பாதிப்பதெல்லாம் உனக்குத்தானே? எப்பொழுதுமே இந்தமாதிரி குறைந்த சம்பளத்திலேயே இருக்கப் போகிறேனா?" என்றான்.

நிர்மலாவுக்கு அழுகையே வந்துவிட்டது. கஷ்டப்பட்டுப் பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

"அசடு! இதற்காக யாராவது கண்கலங்குவார்களா? உனக்கு நான் செய்து போட



மாட்டேனா? என்னிடம் உனக்கு நம்பிக்கையில்லையா?"

கண்ணீர் நனைந்த அவள் கன்னத்தில் குழி விழப் புன்னகையை வருவித்துக் கொண்டாள் நிர்மலா. "நன்றாயிருக்கிறது. நம்பிக்கை இல்லாமல் என்ன?" என்று பளிச்சென்று பதில் அளித்தாள். வேதனை தோன்றிய நடராஜன் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது நிர்மலாவின் சுமுகமான பதில்.



மரியாதைக்காக நிர்மலா அப்படிப் பதில் சொன்னாளே தவிர, ஏமாற்றமும் வேதனையும் அவள் உள்ளத்தை முற்றுகையிட்டன. "மனைவியைவிடத் தங்கை முக்கியமாகி விட்டாளா? எனக்குச் செய்து போடுவதாகச் சொல்வது வெறும் பசப்பு வார்த்தை. ஏழைக் குமாஸ்தா கையில் முந்நூறு, நானூறு என்று அடிக்கடி கிடைக்குமா? இனி பெரிய தொகை இவருக்குக் கிடைப்பது எப்பொழுதோ? நடவாத காரியம்" என்று எண்ணி அவள் ஏங்கினாள்.

மறுநாள் நடராஜன் மாலையைப் பார்ஸலில் கமலுவுக்கு அனுப்பிவிட்டான். மனைவியின் ஏமாற்றத்தை நன்கு அறிந்த அவன் அடிக்கடி தேறுதல் வார்த்தைகளும் சொல்லி வந்தான். ஆனால் நிர்மலா மனம் தெளிவடையவில்லை.

'கமலிக்கு ஒரு தமையன் இருந்தால் எனக்கு இரண்டு தமையன்கள் இல்லையா? அவள் தமையன் மாலை வாங்கிக் கொடுத்தது போல் என் தமையன்மார்களில் ஒருவர் எனக்கு வாங்கிக் கொடுக்க மாட்டார்களா? கேட்டால் வாங்கிக் கொடுக்கிறார்கள். ஏன் கொடுக்க மாட்டார்கள்?' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். 'எப்படியும் ஒரு நட்சத்திர மாலை கழுத்தில் இல்லாமல் அந்த வீட்டில் இருப்பதில்லை' என்று முடிவு செய்தாள். மேற்படி முடிவுக்கு வந்த நிர்மலா, தனக்கு உடம்பு சுகமில்லை என்றும், பிறந்தகத்தில் சில நாட்கள் தங்க விரும்புவதாகவும் தன் கணவனிடம் தெரிவித்தாள். அவள் அந்தரங்க எண்ணத்தை அறியாத நடராஜனும் அவளுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பினான்.

நிர்மலா தன் பிறந்த கிராமத்துக்கு வந்து சேர்ந்தாள். புக்ககத்திலிருந்து முதன்முதலாக வந்த அவளைச் சந்தோஷத்துடன் வரவேற்று அன்பு மொழிகள் கூறினார் அவள் அண்ணா ராமசேஷன். "நிர்மலா! உன் அகமுடையான் சௌகரியமா? திடுதிப்பென்று சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டாயே! பட்டணம் எப்படியிருக்கிறது? நானே பட்டணம் வந்து உங்களைத் தீபாவளிக்குக் கூப்பிட்டு விட்டு வரலாம் என்று இருந்தேன். நீயாகவே வந்துவிட்டாய். ரொம்ப சந்தோஷம். தீபாவளிக்கு ஒரு வாரம் முன்னதாகவே வரவேண்டுமென்று மாப்பிள்ளைக்கு இன்றே கடிதம் எழுதிவிடுகிறேன்?" என்று மூச்சுவிடாமல் கூறினார் ராமசேஷன். நிர்மலாவுக்கு இதைக் கேட்க ஒரே ஆனந்தமாயிருந்தது.

மன்னியும் மேலுக்கு நிர்மலாவை உபசரித்தாளே தவிர அவளுடன் கலகலப்பாக எதுவும் பேசவில்லை. நிர்மலாவுக்குத்தான் தன் மன்னியைப் பற்றி நன்றாகத் தெரியுமே! இரண்டு வருஷமாக மன்னியுடன் பழகிய வளுக்கு அவள் குணம் தெரியாதா? தாயற்ற நிர்மலாவுக்கு அண்ணாவின் வீடே புகலிடமும் பிறந்தகமுமாக விளங்கி வந்தது. மன்னியின் குணம் முன்பின் இருந்தாலும் நிர்மலா எப்படியும் சமாளித்துக் கொண்டு போக வேண்டியவள் தானே?

இரவிலும் பகலிலும் கமலாவின் நட்சத்திர மாலை அவள் கண்முன் நின்றது. தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த மாலையைப் பற்றி எப்பொழுது அண்ணாவிடம் பிரஸ்தாபிப்பது என்று நிர்மலா காத்திருந்தாள். தன் கணவனைப் பற்றி நினைக்க நினைக்க ஏமாற்றமும் கோபமும் தோன்றி வதைத்தது. "அவர் நயவஞ்சகர். என்னை விட அவருக்குத் தங்கை உயர்ந்தவளாகப் போய் விட்டாளா? இருக்கட்டும். இருக்கட்டும். எனக்கும் அண்ணா இல்லையா? எனக்கும் ஒன்று செய்து போடச்சொல்லி அவருக்குக் காண்பிக்காவிட்டால் நானும் நிர்மலாவா?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் அவள்.

ஒருநாள் அண்ணாவின் தென்னந்தோப்பிலிருந்து தேங்காய்கள் வந்து வண்டிகளில் குவிந்தன. இன்னும் சில தினங்களில் தேங்காய்கள் விற்றுப் பணம் கைக்கு வந்துவிடும்,

நிர்மலா எதிர்பார்த்த சமயமும் இதுதானே? அருமை அண்ணாவிடம் தன் விருப்பத்தை வெளியிட அளவற்ற உற்சாகத்துடன் சென்றாள். அப்பொழுது ராமசேஷன் தம் மனைவியுடன் புழக்கடைத் தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

"நிர்மலாவின் கல்யாணத்துக்கு வாங்கின கடன் இரண்டாயிரத்தை இன்னும் திருப்பிக் கொடுத்தாகவில்லை. என் தம்பி கப்பு 'பணம் தருகிறேன்,' 'தருகிறேன்' என்று சொல்லிக் கடைசியில் மோசம் செய்வான் என்று நினைக்கவில்லை!" என்றார் ராமசேஷன்.

"நிர்மலாவுக்குச் செய்து ஓட்டாண்டி ஆக வேண்டுமென்று கடவுள் உங்களைப் படைத்திருக்கிறபோது உங்கள் தம்பி ஏன் காலணா கொடுக்கப் போகிறார்?"—மன்னியின் குரலில் அளவற்ற ஆத்திரம் தொனித்தது.

"அவ்வளவு தேங்காய்களையும் விற்றால் கூட ஐந்நூறு ரூபாய்க்கு மேல் தேறாது. பாக்கிப் பணத்துக்கு என்ன செய்வது? இந்த அழகில் நிர்மலாவுக்குத் தலை தீபாவளி வேறு வந்துவிட்டது...... ஐந்நூறு ரூபாய் எந்த மூலை?" என்றார் ராமசேஷன்.

"ஏன்? ஏதாவது ஆஸ்தியை விற்றுவிட்டு அருமைத் தங்கைக்குச் செய்கிறதுதானே?"

மேற்படி சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டே வந்தாள் நிர்மலா. மன்னியின் வார்த்தை ராமபாணத்தைப்போல் அவள் உள்ளத்தில் பாய்ந்தது. நட்சத்திர மாலையைப் பற்றி அவள் கட்டியிருந்த மனக் கோட்டை தவிடு பொடியாகி விட்டது. அண்ணாவின் சங்கட நிலையில் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க முடியுமா? மனம் ஒடிந்து உள்ளே திரும்பினாள் நிர்மலா.

ஆனால் பளிச்சென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. ராமசேஷனுக்கு அடுத்த சகோதரன் கப்புஸ்வாமி ஜாம்ஷெட்பூரில் வேலையாக இருந்தான். அவன் மூந்நூறு ரூபாய் சம்பளத்தில் சௌகரியமான நிலைமையில் இருந்தான். கப்பு தங்கை நிர்மலாவிடம் மிகவும் வாத்ஸல்யம் உள்ளவன். "நான் அண்ணா கப்புவுக்கு ஏன் ஒரு கடிதம் எழுதக்கூடாது? தீபாவளிப் பரிசாக நட்சத்திரமாலை ஒன்று செய்து அனுப்பும்படி கேட்டாலென்ன? கேட்க உரிமை இல்லையா? செய்து போடத்தான் சொந்தம் இல்லையா? எப்படியாவது நட்சத்திர மாலையுடன் அவர் முகத்தில் விழிப்பேன்!" என்று சபதம் செய்தாள் நிர்மலா. அன்றே கப்புவுக்கு ஒரு கடிதமும் எழுதிப் போட்டாள்.

பல தினங்கள் ஆயின. தீபாவளிக்கு இன்னும் ஒருவாரமே இருந்தது. நிர்மலாவின் உள்ளம் 'திக்' 'திக்'கென்று அடித்துக் கொண்டது. இன்னும் ஜாம்ஷெட்பூரிலிருந்து கடிதமே வரவில்லையே'என்று. அன்று காலை, "நிர்மலா! உன் கணவனிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. நாளைக்குக் காலை ரயிலில் அவன் வரப்போகிறானும். அவனையும் கேட்டுக்கொண்டு வாங்கவேண்டிய துணிமணிகள் வாங்கிவந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனார் ராமசேஷன்.

நிர்மலாவின் உள்ளம் பரபரத்தது. பல நாட்கள் கழித்துக் கணவனைச் சந்திக்கப் போகும் ஆனந்தத்தையும் மறைத்துக் கொண்டு தன் சபதம் நிறைவேறவில்லையே என்ற வேதனை கிளம்பியது.

நட்சத்திரமாலை கிடைக்காதா? அது வெறும் பகற் கனவுதானா? அண்ணன்மார்கள் இருந்து என்ன பிரயோஜனம்? கணவனால்தான் என்ன பிரயோஜனம்?

மெய்மறந்து ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த நிர்மலாவின் செவியில், "அம்மா பார்ஸல்!" என்ற குரல் விழுந்தது. தூக்கிவாரிப்

## நடன அரங்கேற்றம்

★

நாட்டிய கலா கேசரி வழுவூர் ஸ்ரீ ராமய்யா பிள்ளையின் சிஷ்யையான செல்வி ச. வி. சரோஜாவின் நடன அரங்கேற்றம் மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையில் விஜயதசமித் திருநாளின் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

மேற்படி அரங்கேற்ற வைபவத்துக்குத் தலைமை வகித்த நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அவர்கள் சரோஜாவின் நாட்டியக் கலை திறத்தைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினார்.



போட்டவளாய் எழுந்து வாசற்பக்கம் ஓடினாள். தபால்காரனின் கையிலிருந்த பார்சலை வாங்கிக் கொண்டாள் முகம் மலர. ரசீதில் கையெழுத்துப் போட்டுவிட்டு. "அண்ணா! சுப்பு அண்ணாவிடமிருந்து பார்ஸல் வந்து விட்டது!" என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடினாள். அவள் நெஞ்சு அடித்துக் கொண்டது. ராமசேஷன் ஒரு நொடியில் பார்ஸலைப் பிரித்துவிட்டார். உள்ளே நட்சத்திரமாலை ஜாஜ்ஜோதியாகப் பிரகாசித்தது.

"அண்ணா! சுப்பு அண்ணா அனுப்பியிருக்கிறார் பார்த்தாயா? இது எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று மாலையைக் கையில் எடுத்து ஆனந்தத்துடன் கூவினாள் நிர்மலா.

"இது சுப்பு அனுப்பியதா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ராமசேஷன்.

"ஆமாம். நான் கடிதம் எழுதினேன். என்னை அண்ணா மறந்துவிட்டார் என்று நினைத்தது எவ்வளவு தவறு? இனிமேல் அவர் முகத்தில் தைரியமாக விழிப்பேன். என் சபதம் நிறைவேறி விட்டது!" என்று பெருமையுடன் அவள் அறிவித்தாள்.

"நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லையே!" என்று ராமசேஷன் சொல்வதற்குள் நிர்மலா பார்ஸலுக்குள் இருந்த கடிதத்தைப் படித்தாள்.

"அருமை நிர்மலாவுக்கு,

உனக்கு என் தீபாவளிப் பரிசாக நீ பெரிதும் விரும்பிய நட்சத்திர மாலையை அனுப்பியிருக்கிறேன். எனக்கு எதிர்பாராத விதம் போனஸ் கிடைத்ததால் இதைச் செய்வது சாத்தியமாயிற்று. நான் தீபாவளிப் பண்டிகைக்கு அங்கே வரும்போது நீல ஆகாயத்தில் பூரண சந்திரனுடன் நட்சத்திரங்களும் ஒளி விடுவதைப் பார்க்க விரும்புகிறேன்......."

சட்டென்று கையெழுத்தைப் பார்த்தாள் நிர்மலா. கடிதத்தில் "நடராஜன்" என்ற கையெழுத்தைப் பார்த்துத் திகைத்து விட்டாள் அவள்.

கடையில் நட்சத்திர மாலை அனுப்பியது அவள் அருமைக் கணவனே தானா?

"அதுதானே என்னவென்று பார்த்தேன்! தனக்கு ரொம்பப் பணமுடையென்றும் இப்போது உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாதென்றும் சுப்பு அப்பொழுதே எனக்கு எழுதி விட்டானே!" என்றார் ராமசேஷன்.

கண்களில் உணர்ச்சியால் நீர்பொங்க, முகத்தில் புன்னகை மலர, கணவன் கடிதத்தைப் பார்த்தவாறு கற்சிலையாய், மெய் மறந்து உட்கார்ந்து விட்டாள் நிர்மலா.

மறுநாள் காலை நடராஜன் ஊரிலிருந்து வந்து விட்டான். உணர்ச்சியால் வாய்பேச முடியாமல் மெய் மறந்து நின்ற நிர்மலாவின் அழகைக் கண்டு அவனும் மெய் மறந்து நின்று விட்டான். அவளது அழகுக்கு அழகு செய்த நட்சத்திரமாலை தம்பதிகளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியது.


தீபாவளியை முன்னிட்டு கவர்ச்சிகரமான அசல் கொள்ளே காலம் பட்டு புடவைகள், உறுதியான நெசவு, நவநாகரீகமான டிசைன்கள், மற்றும் வேஷ்டிகள், அங்க வஸ்திரங்கள் ஏராளமாக குவிந்துள்ளன. அதி நூதனமான டான்சிங் பார்டர் முதலிய நூதன டிசைன் உடன் கூடிய மைசூர் கிரேப் சில்க் சேலைகளும், ஜார்ஜெட் சேலைகளும் தீபாவளிக்கென்றே வந்துள்ளன.

நாணயம், நம்பிக்கை, நயம் ஒருங்கே அமைந்த சிறந்த இடம்.

ஆரணி ஸில்க் ஹவுஸ்

சன்னதி தெரு :: மைலாப்பூர் :: மதராஸ்

★

எங்கள் கொள்ளேகாலம் சேலைகள் கீழ்க்கண்ட இடங்களில் மதராஸ் விலைக்குக் கிடைக்கும்

நியூ டெல்லி

தி சௌத் இந்தியன் கிளப் கோ-ஆபரேடிவ் சப்ளை சோஸைடி லிமிடெட்
9, ஜந்தர் மந்தர் ரோடு

கல்கத்தா

மெஸர்ஸ். சுதர்சன் & பிரதர்ஸ், 1/4. பிர்ன்ஸ்குளாம் முகமத் ரோட், காளிகாட் போஸ்ட்




## பாலஸ்தீனம்—2

பாலஸ்தீனத்தை அராபியர் பகுதி என்றும், யூதர்கள் பகுதி என்றும் பிரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை திட்டம் வகுத்ததிலிருந்து, அந்த நாட்டில் கலகமும், கொலையும் தினசரி நிகழ்ச்சிகள் ஆயின. ஜெருசலம் நகர் மாத்திரம் ஐ. நா. சபையின் நிர்வாகத்தில் இருக்கவேண்டும் என்று மேற்படி சபை முடிவு செய்ததை ஒத்துக்கொள்ள யூதர்கள் மறுத்து விட்டார்கள்.

எனவே, பத்தாயிரம் சதுர மைல்கள் விஸ்தீர்ணமும் இருபது லட்சம் ஜனத்தொகையும் உள்ள சிறிய நாடான பாலஸ்தீனத்தில் மறுபடியும் மதப் போர் நடக்கலாயிற்று.

அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் நடந்த யுத்தத்தில் முஸ்லிம் நாடுகள் ஏகோபித்து நின்றும்கூட இறுதியில் யூதர்களே வெற்றி பெற்றனர். அதன் விளைவாக யூதர்களின் ஆதிக்கத்தில் உள்ள பிரதேசங்களிலிருந்து லட்சக் கணக்கான அராபியர்கள் வெளியேறி, பாலஸ்தீனத்தின் அராபியர் பகுதியிலும், லெபனன், சிரியா, டிரான்ஸ் ஜார்டன், எகிப்து முதலிய நாடுகளிலும் அடைக்கலம் புகும்படி நேரிட்டது.

பாலஸ்தீனத்தில் இப்போது ஏற்பட்டுள்ள யூதர்களின் ராஜ்யமான இஸ்ரேல் சுமார் ஐயாயிரத்து ஐந்நூறு சதுர மைல்கள் விஸ்தீர்ணம் உள்ளது.

பண்டைய காலத்தில் யூதர்களின் தாயகமாக இருந்த பாலஸ்தீனம் பிற்காலத்தில் அராபியர்கள் அடங்கிய கிராமங்கள் நிறைந்த தேசமாக இருந்தது. அந்தக் கிராமவாசிகள் தலைமுறை தலைமுறையாகக் கொடிய வறுமையில் ஆழ்ந்து கிடந்தனர்.

முதலாவது மகா யுத்தத்துக்குப் பிறகு அந்த நாட்டில் யூதர்கள் குடியேற ஆரம்பித்ததிலிருந்துதான், அங்கு விவசாயம் வளர்ந்தோங்கியது. யூதர்கள் பற்பல நாடுகளில் பல நூற்றாண்டுகளாகக் கஷ்டப்பட்டவர்கள்; அந்த நாடுகளிலிருந்து விரட்டியடிக்கப் பட்டவர்கள். எனவே அவர்கள் பாலஸ்தீனத்தை மீண்டும் தங்கள் தாயகமாகச் செய்து கொள்ள ஆசைப் பட்டது அக்கிரமமான காரியம் அல்ல.

யூதர் சமூகத்தைப் போல் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாகத் துன்பத்துக்கு உள்ளான சமூகம் உலகில் வேறு எதுவுமில்லை. பாலஸ்தீனத்தில் தோன்றிய அவர்கள் உலகம் முழுதும் சிதறியோடும்படி நேர்ந்தது. எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கு அவர்கள் வெறுக்கப்பட்டனர்; சகிக்க முடியாத அவமதிப்புக்கும் சித்திரவதைக்கும் உள்ளாயினர். ஆயிரக் கணக்கான யூதர்கள் மதவெறிக்கும் அரசியல் வெறிக்கும் பலியாக நேர்ந்தது. நாஜியர்களின் கொடுமையினால்

யூதர்கள் புனிதப் பிரதேசமாகக் கருதும் ஜெருசலம் பிரார்த்தனைச் சுவர்.



மாத்திரம் ஜெர்மனியில் ஐம்பது லட்சம் யூதர்கள் மாண்டதாக மதிப்பிடப் படுகிறது!

அதனால்தான் தங்களுக்குத் தாயகம் கிடைத்து விட்டது என்ற செய்தியைக் கேட்டதும் யூதர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். பல கண்டங்களிலிருந்தும் ஐந்து லட்சம் யூதர்கள் இஸ்ரேல் மண்ணை மிதிக்க வேண்டும் என்ற தாபத்துடன் அந்த நாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

சகிக்க முடியாத துன்பங்களுக்கு உள்ளாகியும்கூட யூதர் சமூகத்தில் உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞான மேதாவிகளும், அரசியல் பண்டிதர்களும், இலக்கிய நிபுணர்களும் பெரிய வியாபாரிகளும் தோன்றியிருப்பது தான் ஆச்சரியமாகும்.

யூதர்கள் புதிய நவீன விவசாய முறைகளையும் கைத்தொழில் நுணுக்கங்களையும் பாலஸ்தீனத்தில் புகுத்த முற்பட்டதிலிருந்து தான் அந்த நாட்டில் வறுமை நீங்கலாயிற்று.

1924-ம் வருஷத்திலிருந்து யூதர்கள் பாலஸ்தீனத்தில் வியாபாரக் கப்பல்களையும் நிர்மாணித்து வருகின்றனர். அதன் பயனாக ஹைப்பா, டெல் அவிவ், ஜாபா முதலிய இடங்கள் யூதர்களின் முக்கிய துறைமுகங்களாக இருந்து வருகின்றன.

பாலஸ்தீனத்தில் யூதர்கள் மறுபடியும் குடியேறியதிலிருந்துதான், அந்த நாடு எல்லாவிதத்திலும் முன்னேற்றம் அடைந்து, உலகத்தின் கவனத்தை ஆகர்ஷித்தது.

பாலஸ்தீனத்தின் தலைநகரமான ஜெருசலம் சரித்திரப் பெருமை வாய்ந்தது. முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், யூதர்கள் இந்த மூன்று சமூகத்தினரும் அந்நகரைத் தங்களுடைய புனித ஸ்தலமாகக் கருதுவது அதன் தனிச் சிறப்பாகும்.


பண்டைய காலத்தில் யூதர்கள் அந்நகரில் தான் தங்களுடைய கோவிலைக் கட்டினார்கள். அந்தக் கோவிலைச் சூழ்ந்திருந்த சுவரின் ஒரு பகுதி இன்றும் இருந்து வருகிறது. அதை இன்றும் யூதர்கள் தங்கள் ஆலயமாகக் கருதுகிறார்கள். அந்த இடத்துக்குச் சென்று அவர்கள் பிரலாபிப்பதும் பிரார்த்தனை செய்வதும் இன்றுவரை வழக்கமாக இருந்து வருகிறது.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் பல சம்பவங்கள் அங்கு நிகழ்ந்ததால், அந்நகரைக் கிறிஸ்துவர்களும் தங்களுடைய புனித ஸ்தலமாகக் கொண்டாடுகிறார்கள்.

மெக்காவுக்கும் மெடினாவுக்கும் அடுத்தபடியாக முஸ்லிம்களும் ஜெருசலத்தையே புனித நகரமாகக் கருதுகின்றனர்.

அதற்கு அடுத்தபடியாகப் பாலஸ்தீனத்தில் பெத்லீஹம் கிராமம் பிரபலமாக இருக்கிறது. அக்கிராமம் ஜெருசலம் நகருக்குத் தெற்கே ஐந்து மைல் தூரத்தில் இருக்கிறது. பெத்லீஹம் ஒரு கிராமமாயினும், அங்கு இயேசு கிறிஸ்து பிறந்ததால் அது உலகப் பிரசித்தி பெற்று விளங்குகிறது.



சென்னை அடையாற்றிலுள்ள மத்திய கர்நாடக சங்கீதக் கல்லூரியில் சென்ற ஆறாந் தேதி நிதி மந்திரி கோபால ரெட்டியார் தலைமையில் குமாரி ராதாவின் நடனக் கச்சேரி நடைபெற்றது. கச்சேரிக்கு மூசிரி சுப்பிரமணிய ஐயர், துவாரம் வேங்கடசாமி நாயுடு, மதுரை மணி ஐயர், செம்பை வைத்திய நாத பாகவதர், சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை போன்ற சங்கீத வித்வான்களும், மேல் சபைத் தலைவர் ஸ்ரீ ராமகிருஷ்ண ராஜு முதலிய ஏராளமான சங்கீத ரஸிகர்களும், பத்திரிகையாளர்களும், சங்கீத சபை நிர்வாகிகளும் வந்திருந்தனர். இந்த மாபெரும் சபையில் சங்கீத சபைகளுக்குத் தமாஷா வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர் என்பதை கனம் கோபால் ரெட்டியார் பலத்த கரகோஷத்துக் கிடையில் தெரிவித்தார்.



# உயிர் கொடுத்த தெய்வம்

கே. ஏ. எஸ்.

சென்ற மாதம் ஒரு காரியமாகத் திருமங்கைபுரம் போக வேண்டி யிருந்தது.

பெயருக்கேற்றபடி இருந்தது அக்கிராமம். சுற்றுப்புறம் எங்கும் பசுமை நிறைந்த காட்சிகள். 'அரியும் அரனும்' ஒன்று என்ற எண்ணம் அந்தக் கிராம வாசிகளின் மனதில் பலமாக வேரூன்றியிருக்க வேண்டும். சிவன், விஷ்ணு இரண்டு கோயில்களுக்கும் பொதுவாக ஒரே குளம்தான்.

என்னுடைய சென்னை நண்பர் ஒருவரின் யோசனைப்படி கோவில் ஸ்வாமி நடேசய்யரைப் போய்ப் பார்த்தேன்.

நடேசய்யர் தங்கமான மனிதர். எனக்குத் தங்க இடம் கொடுத்தார் என்பதற்காக நான் சொல்லவில்லை. அவர் பேசும் பொழுதே அவர் சுபாவம் தெரிய வந்தது.

என்னிடம் "ஏன், நம் வீட்டிலேயே ஜாகை வைத்துக் கொள்ளலாமே? வேண்டுமானால் நம்ம சுப்பிரமணிய அய்யர் கிளப்பிலேயே சாப்பாட்டிற்கு ஏற்பாடு பண்ணி விடுகிறேனே?" என்றார். ஊரிலுள்ள மனிதர்களெல்லாம் அவருக்கு அவருடைய மனிதர்கள்தான்.

அங்கு இருந்தவரையில் வாழ்க்கை மிகவும் அமைதியாகத்தான் கழிந்து வந்தது.

நானும் என் ஆயுளில் எத்தனையோ மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் நடேசய்யரைப் போல் பக்திமானைப் பார்த்ததில்லை. நடராஜன் சன்னதியில் அவர் போய்ப் பிற்பகல் மூன்று மணிக்கு உட்கார்ந்தால் இரவு ஏழு மணிக்குத்தான் அவர் இகலோகத்திற்கு வருவார். பிறகு பெருமாள் கோயில், அதன் பின்புதான் வீட்டு நினைவு.

சரியாக ஒன்பது மணிக்குச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு நான் நடேசய்யர் வீட்டுக்குச் சென்று விடுவேன். வாசலில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்போம்.

ஒரு நாள் பேச்சுவாக்கில் "கண்டிப்பாக ஒரு முறையாவது நீங்கள் சென்னைக்கு வரத்தான் வேண்டும். சென்னப் பட்டணத்தைப் பார்க்க வேண்டாமா?" என்றேன்.

நடேசய்யர் சிரித்து விட்டு "பார்வை என்ன? பத்து வருஷத்திற்கு முன்னால் நான் பி. ஏ. படித்துக் கொண்டிருந்த பொழுது இருந்தது போலத்தானே இப்பொழுதும் இருக்கும்?" என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. கட்டுக் குடுமியுடனும் விபூதியுடனும் விளங்கும் நடேசய்யர் ஒரு பி. ஏ. பட்டதாரியா?

"நீங்கள் பி. ஏ. படித்த பின்பும் ஏன் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? வேலைக்கு அப்பொழுதே போயிருந்தால் நன்றாக முன்னுக்கு வந்திருக்கலாமே" என்றேன்.

சில சமயங்களில் நாம் எதைக் கேட்க வேண்டாம் என்று எண்ணுகிறோமோ அது நம்மை யறியாமலே வெளி வந்து விடுகிறது.

நடேசய்யர் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. பத்து நிமிஷம் மௌனமாகவே இருந்தார். ஏதாவது பேசலாமா வேண்டாமா என்று நான் யோசித்துக் கொண்டிருந்த பொழுது அவர் கூறினார்:

"நீங்கள் கேட்ட கேள்வி சாதாரணமான கேள்விதான். எவரும் கேட்கக்கூடியது தான்!" என்று ஆரம்பித்தார்.

இந்த இடத்தில் கொஞ்சம் அவர் நிறுத்தினார். சில விநாடிகளுக்குப் பின் மறுபடியும் கூறலானார்.

"ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் நான் இந்த ஊரை விட்டு நிரந்தரமாக வெளியே போக முடியாது. சேர்ந்தாற் போல் பத்து நாட்கள் என் ஐயனைப் பார்க்காவிட்டால் என்னை என்னவோ செய்கிறது. அந்த உயிர் கொடுத்த தெய்வம் என் கண்ணைப் போன்றது. ராமநாதய்யருக்கு மாத்திரம் உயிரை அளிக்கவில்லை. அவன் எனக்கும் உயிரைக் கொடுத்தவன்!"

நடேச அய்யர் அப்படிப் பேசி நான் பார்த்ததில்லை. அய்யர் மறுபடியும் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்.

பிறகு அவராகவே "நான் பாட்டுக்கு ஏதோ சொல்லிக் கொண்டு போகிறேன். உங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படித்தானே?" என்று கேட்டார்.

எனக்கும் போன உயிர் திரும்பி வந்தது. "ஆமாம். 'ராமநாதய்யருக்கு மாத்திரம் உயிரை அளிக்கவில்லை. எனக்கும் உயிரைக் கொடுத்தவன்' என்றீர்களே. அது என்ன?" என்று பேச்சை வேறு திக்கில் திருப்பினேன்.

"அதுவா? சொல்கிறேன் கேளுங்கள்" என்று அய்யர் ஆரம்பித்தார்.

★

இந்தச் சம்பவம் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. இதற்கு முன்பு ராமநாதய்யர் சிவன்கோயில் ஸ்வாமியாக இருந்தார். அவருடைய தகப்பனும் பாட்டனும் கோயிலுக்கு உழைப்பதற்கென்றே ஜன்மம் எடுத்தவர்கள்.

இன்று இந்தக் கோயில் நல்ல நிலையில் இருப்பதற்குக் காரணம் ராமநாதய்யரும்

அவருடைய மூதாதையர்களும்தான். ராம நாதய்யருடைய பாட்டனார் ஜகதீசய்யர் கோயிலுக்கென்று பத்து ஏக்கராநிலம் எழுதி வைத்தார். அவருடைய பிள்ளை, அதாவது ராமநாதய்யருடைய தகப்பனார் அதைப் பறிமுதல் செய்தார்—ராமநாதய்யர் அதை இருபங்காக்குவதற்குப் பாடுபட்டுக் கடைசி யில் வெற்றியும் பெற்றார்.

'பக்திமான்' என்பது ராமநாதய்யருக்குத் தான் பொருந்தும். நல்ல ஆசாரம் மிகுந்த வர். குணத்திலும் தங்கக் கம்பிதான். எந்த மழையிலும், இடியிலும் கோயிலுக்குப் போகத் தவற மாட்டார் உடல் நலமில்லை யானாலும் பொருட் படுத்தாமல் கோயிலுக் குச் சென்று அம்பலவாணனுக்குப் பணி செய்வதே வாழ்க்கையின் லட்சியம்' என்று அங்கேயே இருப்பார். அப்படிப்பட்ட பக்தி மான். வாழ்க்கையில் இருமுறை அவரை அம்பலவாணன் சோதித்து விட்டான். முதல் இரண்டு பிள்ளைக் குழந்தைகளைப் பறி கொடுத்துவிட்டார். அதனாலேயே கடைசிக் குழந்தையாகிய அம்பியிடம் உயிரையே வைத்திருந்தார். அதுவும் கடவுளுக்குப் பொறுக்கவில்லை போலிருக்கிறது. மீண்டும் தன் பக்தனைச் சோதனை செய்ய வேண்டு மென்கிற எண்ணம் கொண்டு அம்பியையும் படுக்கையில் போட்டு விட்டான். ராமநாதய் யரின் மனைவி மீனாட்சிக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவே யில்லை.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. அன்று தான் அம்பியின் உடம்பும் மிகவும் மோச மான நிலையிலிருந்தது.

அய்யர் கோயிலிலிருந்து சீக்கிரமே வீட் டுக்கு வந்து விட்டார். அவர் மனைவி மீனாட்சிக்கு ஏற்பட்ட வருத்தத்தில் கோயி லாவது குளமாவது என்ற நிலையிலிருந்தாள். அவளுக்குத் தேறுதல் கூறுவதற்காக அய் யர், "கவலைப்படாதே மீனாட்சி. அவன் இருக்கிறான். குழந்தைக்கு ஒன்றும் செய்யாது" என்றவுடன் மீனாட்சி சீறி எழுந்தாள்.

"போதும்; உங்கள் பிரசங்கம். அவனும் அவன்! இரவு பகல், பசி தாகம் என்று பாராமல் கோயிலுக்கு உழைத்தீர்கள். இரண்டு குழந்தை கள் போயாச்சு. மூன்றாவதும்......"

மீனாட்சி அழுது விட்டாள்.

மௌனமாக அய்யர் வாசல் திண் ணைக்கு வந்து படுத்தார். வானத்தில் சந்திரன் பவனி வந்து கொண்டிருந் தான். ஊரே இன்பத்தில் லயித்துக் கொண்டிருந்தது. கண்களை மூடிய வாறே சிந்தனையிலாழ்ந்தார் அய்யர்.

காலடி ஓசையைக் கேட்டுக் கண் களை விழித்த ராமநாதய்யர் முன்பு அவர் மனைவி கண்களில் நீர் மல்க நின்று கொண்டிருந்தாள். அய்ய ருக்கு விஷயம் விளங்கி விட்டது.



யார் யாரோ துக்கம் விசாரிக்க வந்து விட்டுப் போனார்கள். அய்யரின் மனம் மிகவும் சோர்ந்து விட்டது. எவனைப் 'பரம் பொருள்' என்று எண்ணினாரோ அவன் அவரைக் கைவிட்டு விட்டான்.

பன்னிரண்டு தினங்களுக்குப் பிறகு மீண்டும் கோயிலுக்குச் சென்றார் ராம நாதய்யர். கண்களை மூடிக் கொண்டே தியா னத்தில் ஆழ்ந்திருந்த அவருக்கு நேரம் போவதே தெரியவில்லை. எல்லோரும் போன பின்பும் அவர் அங்கிருந்தார்.

வீட்டிற்குச் சென்றால் பழைய நினைவுகள் குமுறிக் கொண்டு வர நேரிடும் என்றே கோயில் குருக்களையும் அனுப்பிவிட்டு சந் சன்னதியிலமர்ந்தார்.


அந்த • ஆனந்தத் தாண்டவம் புரியும் மூர்த்தி எப்பொழுதும் போல் புன்கை செய்து கொண்டிருந்தான்.

'பிரபோ! கருணையின் வடிவு என்று உன்னை வர்ணிக்கிறார்களே! அது பொய் தானே' என்று மனதிற்குள் கூறிக் கொண் டார் ராமநாதய்யர். அவர் மனக் கண் முன்பு மீனாக்ஷியும் அம்பியும் தோன்றினார்கள்.

அய்யரின் மனம் வெடித்துப் போகும் நிலைமையை அடைந்தது.

அவரால் பொங்கி எழுந்த துக்கத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. இரண்டடி முன்னேறிப் பாய்ந்தார்.

"கருணையின் வடிவா நீ! கல்லால் செய்யப் பட்ட ஒரு பதுமை! இரக்கம், அன்பு, கடமை முதலியவைகளற்ற சிலை! உலகில் உன்னைத் துதிப்பவர் என்ன கதியை அடைகிறார்கள்! உன்மேல் இருக்கும் ஆபரணங்கள், உனக்கு இருக்கும் பெருமை எல்லாம் என்னால் கிடைத்தவை. வாழ்நாளை உனக்கே அர்ப் பணம் செய்த எனக்கு நீ செய்த உபகாரம்



"டேய், கோபு! மாமாவின் முகத்தைப் பார்த்தால் என்னுடைய நாயின் முகத்தைப் போலிருக்கிறது என்று சொன்னாயாமே!"

"ஆமாம் சொன்னேன். அதற்கு என்ன இப்பொழுது?"

"வா சண்டைக்கு! என் நாயைப் பற்றிக் கேவலமாகப் பேசுகிறவர்களை நான் சும்மாவிடமாட்டேன்!"

என்ன? நீ இனி இருந்தென்ன, ஒழிந்தென்ன! என்வரை எல்லாம் ஒன்றுதான்!"

ஆவேசத்துடன் இந்த வாக்கியங்களைக் கூறினார் ராமநாதய்யர்.

அடுத்த விநாடி மூலவருக்கு அருகில் இருந்த சிறு வெண்கலச் சிலை அய்யரின் கையில் இருந்தது. அவர் கையை ஓங்கினார், ஆத்திரத்துடன்.

"வேண்டாம்! குழந்தாய் நிறுத்து!"

அய்யர் குரல் வந்த திசையை நோக்கினார். காவி வஸ்திரமணிந்த சந்நியாசி ஒருவர் நின்று கொண்டிருந்தார். சாக்ஷாத் சிவபெருமானே அவ்வுருவம் கொண்டாற் போலிருந்தது அவர் தோற்றம்.

ராமநாதய்யர் மௌனமாக நின்றார். சந்நியாசி அவர் அருகில் வந்தார்.

"குழந்தாய்...!"

அவர் குரல்தான் எவ்வளவு கம்பீரமாகவும் இனிமையாவும் இருந்தது!

"பதறாதே! எதற்காக இவ்வளவு ஆத்திரம்? உன் மூதாதையர்கள் கனவிலும் நினையாத ஒரு செய்கையை நீ எப்படிச் செய்யத் துணிந்து விட்டாய்?"

"ஸ்வாமி! என்னைத் தடுக்காதீர்கள். நான் பதறவில்லை. எங்கும் காணாத அமைதியை அடைய நான் பூஜித்த தெய்வம் என்னைக் கடும் சோதனைகளுக் குள்ளாக்கியது. எதற்காகத் தெரியுமா? நான் ஒரு ஆஸ்திகன், அதற்காக! நான் கோயிலுக்கு உழைத்தேன், அதற்காக! நான் அதற்குப் பயந்தேன், அதற்கு அவன் அளிக்கும் பரிசு இது......"

ராமநாதய்யர் மீண்டும் கையை ஓங்கினார். சன்னியாசியின் இரும்புக் கரங்கள் அவரது கையைப் பிடித்துக் கொண்டன.

"வேண்டாம்! இது அசுரத்தனமான செய்கை. உனது மனம் புண்பட்டிருக்கிறது. உன் வார்த்தைகளே அதைத் தெரிவிக்கின்றன. வா இப்படி!" என்றார்.

சன்னியாசி விக்கிரகத்தை அவர் கையிலிருந்து வாங்கிக் கீழே வைத்துவிட்டு, அவரை இழுத்துக் கொண்டு வெளியே வந்தார். வெளிப் பிரகாரத்தில் அவர் அமர்ந்தார். ராமநாதய்யரும் அவர் அருகில் அமர்ந்தார்.

"ஸ்வாமி! உலகில் என்னைப் போன்ற அதிருஷ்ட ஹீனன் இருக்கவே முடியாது. என் முதல் குழந்தை இறந்தவுடன் சில காலத்திற்கு எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. இரண்டாவதாகப் பிறந்த குழந்தையும் காவேரியில் மூழ்கி மரணமடைந்தது. மூன்றாவதும் போய் விட்டது........"

அவரால் பொறுக்க முடியவில்லை. சிறு குழந்தையைப் போல் விக்கி விக்கி அழுதார்.

சந்நியாசி அவரைத் தேற்றினார்.

"அழாதே குழந்தாய்! இன்பமும் துன்பமும் மாறி வருவது இயற்கை. உன்னை விடத் துயருற்றவர்கள் ஆண்டவனைப் பிரார்த்திப்பதால் மனச்சாந்தி பெறுவதில்லையா? போ! நீயும் தூய்மை நிறைந்த உள்ளத்துடன் பிரார்த்தனை செய்!"

தள்ளாடிக் கொண்டே ராமநாய்யர் ஆலயத்தை விட்டு வெளியே வந்தார்.

கதவைப் பூட்டிக் கொண்டு அய்யர் வீடு திரும்பினார். சந்நியாசி வேறு திக்கில் சென்றார்.

அதற்குப் பின் நான்கு தினங்கள் சந்நியாசியை அவர் சந்திக்கவேயில்லை.

திருக்கார்த்திகை வந்தது. அய்யரின் வீடு மட்டும் பொலிவிழந்து காணப் பட்டது.

இரவு சுமார் ஏழு மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பிய அய்யர், நேராகக் கோயிலுக்குச் சென்று பெருமானின் சன்னதியிலமர்ந்தார். அங்கு ஒருவரும் இல்லை. சுவாமி தான் தீபஅலங்காரத்தைப் பார்க்க வெளியே கிளம்பி விட்டாரே!

"குழந்தாய்......"

அய்யரின் தியானம் கலைந்தது. சந்நியாசி எதிரே நின்று கொண்டிருந்தார், அவர் வதனத்தில் ஒரு புன்னகை.

"இப்பொழுது உன் மனம் சற்று நிம்மதியை அடைந்திருக்குமென்று நினைக்கிறேன்" என்றார் சந்நியாசி.

ராமநாதய்யர் சிரித்தார். சோகத்தின் சாயை அதில் நன்கு பிரதிபலித்தது.

"மன்னிக்க வேண்டும், ஸ்வாமி! மண் தரையில் சிந்திய பால் எப்பொழுதாவது சுயரூபத்தை யடைய முடியுமா? பாழும் தெய்வம் என் உயிரை எடுத்த பின்பு மன நிம்மதி எங்கிருந்து வரும்? இன்று இந்தக்

கோயில் இங்கிலையிலிருப்பதற்குக் காரணம் நான்தான். அதற்கு எனக்குக் கிடைத்த பரிசு என்ன? ஏன் ஸ்வாமி நிற்கிறீர்கள்?''

சந்நியாசி மௌனமாக அய்யரை நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

''சுவாமி! கூறுங்கள்! தன் பக்தனுக்கு பகவான் செய்யும் உபகாரமா இது? பாபிகளுக்கா தெய்வம்? ஏன் இந்தக் கடும் சோதனை? பொன்னாலும் பூவாலும் பொருபொருளாலும் ஒருவன் அவனுக்கு அர்ப்பணம் செய்தபொழுதிலும் அவனைத் துன்புறுத்துவதா நீதி! ஏன் மௌனமாக நிற்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

சந்நியாசி பலமாகச் சிரித்தார். சிரித்துக் கொண்டே இருந்தார். கோயில் மண்டபம் முழுவதும் அந்தச் சிரிப்பின் எதிரொலி கேட்டது.

''நல்ல கேள்வி கேட்டாய், குழந்தாய்! கொடுப்பதும் அவனே! கொள்வதும் அவனே! அழிப்பதும் ஆக்குவதும் அவனே. அகங்காரம் உன் அறிவுக் கண்களை மறைக்கிறது. நீ ஒரு பேதை. உலகத்துக்கே நாயகனாகிய அவனை நீ தானம் வாங்குபவனாக எண்ணுகிறாய். உன் பொன்னும் பூவும் அவனுக்குப் பெரிதல்ல. உன்னைப் போன்ற கோடிக்கணக்கான குழந்தைகளை உடைய அவனை நீ தந்தையாகக் கருதவில்லை. சகல ஜீவராசிகளிடத்தும் நிறைந்த பரம்பொருளை நீ சிலையாகக் கருதி அழிக்க நினைக்கிறாய். அருள் செல்வத்தைத் திரஸ்கரித்து விட்டுப் பொருட்செல்வத்தை நாடுகிறாய்.

''தன்னலத்துடன் அவனைப் பூஜை செய்த நீ உன்னை பக்தனென்று கூறிக்கொள்கிறாய்! உன் பொன்னையும் பூவையும் கண்டு அவன் மயங்க மாட்டான். அவன் இல்லை யென்று நீ நினைத்தால் அவன் மறைந்து விடுவானா? உன் மனைவியின் வாதம் உன்னைக் கலக்கி விட்டது. அவள் ஒரு பெண். கோபத்தையும் பாசத்தையும் வெல்லும் சக்தியற்றவள்.


''குழந்தாய்! போ! மறுபடியும் உன்னை அனுப்புகிறேன் வீட்டிற்கு; சென்று பார்! அந்தப் பரம்பொருளுடைய அருளை நீ பரிபூரணமாகக் காண்பாய்! ஆழ்ந்த பக்தியின் அருமையை உணர்வதுடன் அகங்காரம் அகலுமானால் ஆண்டவன் அருள்புரிவான் என்பதைக் காண்பாய். உயிரைப் பறிக்கும் தெய்வம் உயிரைக் கொடுக்கவும் சக்தி வாய்ந்தது என்பதை நீ அறிந்து கொள்வாய்'' என்று சந்நியாசி ஆவேசத்துடன் கூறி விட்டு வெளியே சென்று விட்டார்.

வெறி பிடித்தவர் போல் வீட்டுக்கு ஓடின ராமநாத அய்யரை வாசலில் நின்று கொண்டு வரவேற்றான் அம்பி.

* * *

''நடேசய்யர்வாள்! கதை என்னவோ மாதிரி முடிகிறதே?'' என்றேன் நான்.


தாய்மார்கள் விரும்பி வாங்கும் அழகிய ஸ்டீல் தொட்டில். கொசு வலை ஸ்டாண்டுடன் கூடியது மலிவான விலை நீடித்த உழைப்பு!



ஸ்டீல் மாஸ்டர் மடக்கும் நாற்காலி. வீடு, ஆபீஸ், ஹோட்டல், சினிமாக் கொட்டகை ஆஸ்பத்திரி, கான்டீன் முதலியவைகளுக்கு இன்றியமையாதவை. மிகக் குறைந்த விலை. உறுதியான ஸ்டீல் நாற்காலி. ஒன்றின் விலை ரூ. 16—0—0




விவரங்களுக்கு:

ஸாம்ஸன் & கம்பெனி, லிட்.

151, பிராட்வே :: மதராஸ் - 1

போன்: 4521 தந்தி: BARAPASH



திருநெல்வேலி ஜில்லா தந்தி தபால் 4-வது வகுப்பு ஊழியர்கள் மகாநாடு சென்ற 12-ட திருச்செந்தூர் போர்டு உயர் நிலைப் பள்ளியில் ஸ்ரீ எம். ஆர். மேகநாதன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடந்தது. டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் மேற்படி மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

---

"இது கதை இல்லை ஸ்வாமி! இன்னும் முழுவதும் முடியவும் இல்லை" என்று கூறிய நடேசய்யர் தொடர்ந்தார்:

"மகனைக் கண்டவுடன் ராமநாதய்யர் கீழே விழுந்து விட்டார்.

"மீண்டும் அவர் எழுந்திருந்த பொழுது எதிரில் ஒருவரும் இல்லை. பொழுது நன்றாகப் புலர்ந்திருந்தது. வாசலுக்கு வந்த மீனாக்ஷி அய்யரிடம், "இனி மேல் பயமில்லை என்று நினைக்கிறேன்! அம்பிக்குக் கொஞ்சம் ஜுரம் இறங்கி யிருக்கிறது!' என்றாள். தொடர்ந்து "ஏதோ அந்த நடராஜன்தான் உயிர்ப் பிச்சையளித்தான்" என்றாள்.

"அய்யரின் உடல் நடுங்கியது. தான் கண்ட கனவை அவளுக்கு எடுத்துரைத்தார்.

"அதற்குப் பிறகு விசேஷமாக ஒன்றும் நடக்கவில்லை. நாளடைவில் அம்பியின் உடம்பு முன்போலாகி விட்டது. இன்று வரை அவனது உடல் நலம் குன்றவில்லை.

"ராமநாதய்யர் ஒரு சங்கல்பம் செய்து கொண்டார். 'அம்பிக்கு உயிர்ப்பிச்சை யளித்த நடராஜனை விட்டு அவன் பிரியக் கூடாது' என்பதுதான் அவர் சங்கல்பம். அடிக்கடி தாம் கண்ட கனவைப் பற்றியும் அவனுக்குக் கூறினார்.

"எனவே, அவன் படிப்பு முடிவடைந்ததும், அம்பி திருமங்கை புரத்திற்கு வந்துவிட்டான். கோயிலையும் நிர்வகித்துக் கொண்டு வருகிறான்.

"இப்பொழுது தெரிகிறதா? நடேச அய்யர் ஏன் திருமங்கைபுரத்தை விட்டுப் போக மறுக்கிறார் என்பது?" என்று கேட்டார் நடேசய்யர்.

என்னால் பதில் ஒன்றும் பேசமுடியவில்லை.

✶


நான் இந்த வரலாற்றைக் கேட்ட பிறகு என்ன பேச முடியும்? உணர்ச்சி வசப்பட்டு மெய் மறந்து நின்றேன். அந்த 'அம்பி'தான் இந்த நடேசய்யர் என்று தெரிந்து கொண்டதும் எனக்கு உண்டான வியப்புக்கு அளவேயில்லை. அவரிடம் என்னையும் அறியாமல் ஒரு மரியாதை ஏற்பட்டது.

அப்புறம் இரண்டு நாட்களுக் கெல்லாம் நான் திருமங்கை புரத்தை விட்டுப் புறப்பட நேர்ந்தது. நான் வந்த காரியம் முடிந்தவுடன் புறப்பட வேண்டியது தானே?

உத்தியோக நிமித்தம் நான் எத்தனையோ ஊர்களுக்குப் போக நேர்ந்தது. அங்கெல்லாம் உணர்ச்சியின்றி மரக் கட்டையைப் போல் போய் வந்தேன். திருமங்கைபுரத்தில் எனக்கு ஏற்பட்ட உற்சாகம் அதற்குப் பிறகு எங்கும் ஏற்படவில்லை.

இப்பொழுது, நான் திருமங்கை புரத்துக்குப் போய் வந்து எத்தனையோ நாட்கள் ஆகி விட்டன ஆனால் நடேசய்யர் சொன்ன இந்த உண்மைச் சம்பவம் என் மனத்திரையில் எப்பொழுதும் பசுமை மாறாமல் இருக்கிறது. இந்த விஷயத்தை நான் இதுவரையில் எத்தனையோ பேரிடம் சொல்லிவிட்டேன்,

# Jayems



## நேரடியாக இணைக்கப்பட்ட பம்பிங் செட்

"ஜெயம்ஸ்" ஹைட்ராலிக் மூலம் பரிசோதிக்கப்பட்ட பம்புகள் 1½"x1½", 2"x2", 2½"x2", 2½"x2½", 3"x3", 4"x3", 4"x4" சைஸ்களில் கிடைக்கும். G. E. C. அல்லது B. T. H. மோட்டார்களுடன் 2, 3, 5, 7, 5 மற்றும் 10 எச். பி. மோட்டார்களுடன் இணைக்கப்பட்டது.

"ஜெயம்ஸ்" பம்புகள் விவசாயத்திற்கென்றே தயாரிக்கப்படுகின்றன. நூற்றுக்கணக்கான பம்புகள் இந்தியா முழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் பூரா விவரங்களுக்கும் விலைக்கும் தயவு செய்து விசாரிக்கவும்.

## ஜெயம்ஸ் இன்ஜினீரிங் கம்பெனி

மதராஸ், பெங்களூர், கோயமுத்தூர், விஜயவாடா
செகந்தராபாத்

Sunbeam

## ஓர் நற்செய்தி

நாளது 1951-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதி
திண்டுக்கல்லில், எனமல் பாத்திரங்கள், போர்டுகள்
உற்பத்தி செய்யும் எங்களுடைய

# தொழிற்சாலை

ஆரம்பமாவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

○●○

# மதுரை எனமல் கம்பெனி லிமிடெட்

| | |
|---|---|
| தபால் பெட்டி, 1643 | தபால் பெட்டி, 41 |
| 308/309, லிங்கி செட்டித் தெரு | 18, வடக்கு வெளி வீதி |
| மதராஸ் | மதுரை |

# தூர்க்கையின் சாபம்

துரோணன்

அந்தக் கிராமத்திலேயே வாயாடிப் பெண் ஒருத்தி உண்டென்றால் அவள் தூர்க்கை தான்! எந்தச் சந்தர்ப்பத்தில் எதைப்பற்றிப் பேசுவது; யாரிடம் பேசுவது—என்ற முறையெல்லாம் அவளுக்குத் தெரியாது. யாரிடமாவது ஏதாவது பேசிக்கொண்டேயிருக்க வேண்டும்; அல்லது தானாகவாவது ஏதாவது பேசிக்கொண்டேயிருக்க வேண்டும்! எது வேண்டுமானாலும் அவளால் செய்யாமலிருக்க முடியும்; ஆனால் ஒரு நிமிஷமாவது அவளால் பேசாமல் மாத்திரம் இருக்க முடியாது. இது அவள் சுபாவம்.

கிராமத்தாரின் பாஷைப்படி, தூர்க்கை இன்று 'குதிர்'போல் வளர்ந்து விட்டாள். அவளது இடது கால்தான் சற்றுப் பிறவி ஊனமே தவிர, மற்றபடி அவள் ஒரு காட்டு ரோஜா! குப்பல் குப்பலான சப்பாத்திப் புதர்களின் நுனியில் அழகான மஞ்சள் பூக்கள் பூத்திருக்கவில்லையா? அப்படித்தான் தூர்க்கை. அவளது கொடி போன்ற உடலையும், வட்டமான முகத்தையும், சாட்டைபோல் முழங்கால்வரை தொங்கும் பின்னலையும் 'குறு குறு' வென்று வம்புக்கிழுக்கும் விழிகளையும் காண்போர், அவளது அழகில் மயங்காமலிருக்க முடியாது! ஏன்—அவளது ஊன நடையிலும் ஒரு தனி அழகு தான். இவ்வளவுமுள்ள இந்தப் பெண் இப்படி வாயாடியாக இருப்பது பற்றி அவளது தகப்பன் கரும்பாயிரம் நயந்தும் பயந்தும் எவ்வளவோ மன்றாடி விட்டான். அவளது வாய்தான் அடங்கும் வழியாயில்லை!

அந்தக் கடுமையான வெய்யில் வேளையில் இடுப்பில் மொச்சைக் காய்க் கூடையுடன் தோப்பைக் கடந்து வந்து கொண்டிருந்த தூர்க்கை ஒரு வன தேவதை போல் காட்சியளித்துக் கொண்டிருந்தாள். அந்த வெய்யில் கஷ்டத்திலும் கூட அவளது வாய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டுதானிருந்தது! புளியந்தோப்பைக் கடந்து வந்து கொண்டிருந்த அவள் காலில் 'கற கற' வென்ற ஓசையை கேட்டுக் குனிந்தாள். வழியெல்லாம் இறைபட்டிருந்த புளியம் பழங்கள் அவளது கவனத்தைக் கவர்ந்தன. தலைநிமிர்ந்து மரத்தைப் பார்க்கும்போது அரிச்சந்திரன் மரத்தின் மீதிருந்தான்.

"அட பாவி மகனே! வேளை நேரம் பார்த்தா இந்தக் கோயில் மரத்தை மொட்டையடிக்க வந்திருக்கிறாய்? வேண்டாம், மரியாதையாய்ப் போய்விடு! இல்லேன்னு அப்புறம்......" என்றாள் விரலையாட்டிக் கொண்டே தூர்க்கை.

"ஏய், வாயாடி! உன் அலுவலைப் பார்த்துக்கிட்டு நீ நட! நான் எது செஞ்சால் உனக்கு என்னா? உன் வீட்டு மரமோ?"

"அட திருட்டு மரமே! உன் மண்டையிலே களிமண்ணா இருக்குது? நீ செய்யிற காரியம் ரொம்ப சரியானதானா? இந்த லெச்சணத்துக்குத் தான் உங்கப்பாரு உனக்கு 'அரிச்சந்திர'ன்னு பேரு வெச்சிருக்கிறாரோ?"

"வாடியம்மா சந்திரமதி! நீ ரொம்ப நாணயமில்லே? சீ, சீ, போ! ஒரு வயசுப் பொண்ணு லெச்சணமா இல்லாமெ, வந்துட்டாளாம் வம்புக்கு. உனக்கு வெட்கமில்லே?"

"தூ! நீ ஒரு ஆம்பிளையா? நாணயமாப் பிழைக்கிறத்துக்கு வழி தெரியாமல் திருடிப் பிழைக்கணும்னு நினைக்கிறியே! உனக்கு வெட்கமாயில்லியா?" என்றாள் தூர்க்கை.

"ஏ கழுதை! நீ யாரு அதைக் கேட்க?"

"அப்புறம் தெரியுமா சேதி? நீ மரியாதையா மரத்தை விட்டு இறங்கப் போறியா? இல்லாட்டி..."

"ஏ பிள்ளே! என்னை என்ன செஞ்சிடுவே? நொண்டியாப் பிறந்து அல்லாடுறியே! இன்னம் உனக்கு வாய் வேறயா? நொண்டிப் பிணமே!" என்று கத்திக் கொண்டிருந்தான் அந்த விடாக்கண்டன். அடுத்த கணம் இரத்தம் போன்ற கண்களுடன் தூர்க்கை, தூர்க்கையாகவே மாறி விட்டாள்!

"என்னா சொன்னே? உன் ஆணவம் குலைஞ்சு, இன்னும் ஒரு வாரத்துக்குள்ளியே உன் காலும் ஒடிஞ்சு போகாட்டிப் போனால் என் பேரு தூர்க்கையில்லே!" என்று



கூறிக் கொண்டே அவன் வேகமாக நடந்தான். அவனது கண்களிலிருந்து நீர் தாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது!

"ஐயோ போவட்டும்! அம்மா மாரியாத்தா சாபம் கொடுத்திருக்கிறா, பலிச்சுடப் போவுது!" என்று கூறிக்கொண்டே கொக்கரித்தான் அரிச்சந்திரன். பிறகு அதைத் தொடர்ந்து, "இந்தா! நான் கொண்டியாப் போறத்துனாலே உன்னைக் கண்ணாலம் பண்ணிக்குவேன்னு நினைத்து விடாதே!" என்று இரைந்து கூவிக் கொண்டிருந்தான்.

திரும்பிப் பார்த்த துர்க்கை ஆவேசம் கொண்டவன்போல் ஓடிக் கொண்டிருந்தாள்.

துர்க்கை வீட்டுக்குள் நுழையும்போது, அவளது தகப்பன் யாரோ ஒரு அன்னியனுடன் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

"நாயினா! கொல்லையிலே யிருந்த மொச்சைக்காய் சடாளையும் பறிச்சுக்கிட்டு வந்துட்டேன். இனிமே காயே இல்லை!"

துர்க்கையின் இந்தப் புதுக் குரலைக் கேட்டதும் அவ்விருவருமே திடுக்கிட்டனர்.

"அடேடே! அது நல்லா மூத்தட்டும் என்றல்லே நான் விட்டிருந்தேன்?" என்று கரும்பாயிரம் பரபரப்புடன் கூறினான்.

"ஏன்? இந்தமாதிரி விட்டு விட்டுத்தானே ஊரிலே இருக்கிற சோம்பேறிங்களெல்லாம் திருடிக் கொண்டு போறாங்க?" என்றாள் துர்க்கை. மற்றொரு அன்னியன் அங்கிருப்பதைக் கூட அவளது சுபாவம் மறைத்து விட்டது!

இத்தனை நேரமாகப் பேசாமலிருந்த அந்த அன்னியன் மெதுவாகக் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தான்: "அதென்னாங்க மாமா? உங்க ஊருலே இப்படியெல்லாம் திருட்டுப் பயங்க அதிகமோ?"

"அதையேன் கேட்கிறீங்க! அந்த அக்கிரமத்தைச் சொல்லி முடியாது! இன்னிக்குப் புளியந்தோப்பு; நாளைக்கு மாந்தோப்பு; நாளன்னிக்கு மொச்சைத் தோப்பு—மானங் கெட்ட வயிறு நிரம்ப வேண்டாங்களா?" என்றாள் துர்க்கை பரபரப்புடன். இந்த வார்த்தைகளை அவளது தகப்பன் ரசிக்கவில்லை ஆனால், இரகசியமாகப் பற்களைக் கடித்துக் கொண்டிருந்தான். "சரி...... அப்புறம்?" என்றான் தொடர்ந்து அந்தப் புதியவனை நோக்கிக் கொண்டே.

"அதுதான் சொன்னேனே மாமா! எனக்கும் இப்போ கும்பகோணம் போலீஸ் ஸ்டேஷனுக்கு மாத்திடப் போறாங்க. இங்கிருந்து நாலு மைல்தானே? இங்கே நான் சம்பந்தம் பண்ணிக்கிட்டாப்பிலேயும் ஆயிடுச்சி; எனக்கு மாசம் ரெண்டு கேக 'டைரி' எழுதறத்துக்கும் ஆச்சு!" என்று குறும்புடன் அவன் முடித்தபோது எதிரிலிருந்த கரும்பாயிரம் நீண்ட பெருமூச்செறிந்து கொண்டிருந்தான். துர்க்கையோ அரைகுறையாகப் புரிந்து கொண்ட புது சமாசாரங்களினால் ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தாள்.

"சரி தம்பி, நீ போய் வா—நான் ஏற்பாடெல்லாம் செய்துக்கிட்டு, முகூர்த்தத் தேதி வச்சுட்டே உனக்குக் காகிதம் போடறேன். உன் பேரு கண்ணப்பனில்லே?" என்று கேட்டான் கரும்பாயிரம்.

அவன் வாய்விட்டுச் சிரித்தான்! "என் பேரு 'கண்ணப்பன்'னு பத்திரிகையிலே போட்டுடாதீங்க! என் பேரு கன்னியப்பன்" என்று கூறிக்கொண்டே போலீஸ் உடுப்பு மூட்டையுடன் எழுந்தான் வந்தவன். கரும்பாயிரம் அவனைத் தொடர்ந்து எழுந்தபோது துர்க்கை 'திரு திரு' வென்று விழித்தாள். அவன் சென்ற சில நிமிஷங்களிலேயே துர்க்கையின் வாயாடித்தனத்தைக் குறித்துக் கரும்பாயிரம் ஓலமிட்டுக் கொண்டிருந்தான்!

* * *

மேற் சொன்ன சம்பவம் நடந்து நான்கு தினங்களிருக்கும். அதே வேளையில் ஒரு அதிசயச் செய்தியைக் கேட்ட கரும்பாயிரமும், துர்க்கையும் சாப்பாட்டை முடிக்காமலே பரபரப்புடன் எழுந்தனர். வாசலில் நின்ற ஒரு தெருவாசியின் செய்திகளால் துர்க்கை ஆச்சரியமும், குழப்பமும் சூழ ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்!

எப்படியோ — துர்க்கையின் சாபம் அந்த வேளையில் பலித்துவிட்டது!

சொன்ன சொல் மாறாத அரிச் சந்திரன் மீண்டும் புளிய மரத்திலேறிக் கீழே விழுந்து





**அரங்கேற்றம்**

பிரபல காங்கிரஸ்காரரான ஸ்ரீ கே. சடகோபன் அவர்களின் பேத்தி பேபி விஜயாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் விஜய தசமி யன்று மாலை, சென்னை தக்கர் பாபா வித்தியாலயத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ நாடார் தலைமை வகித்துக் குழந்தையைப் பாராட்டிப் பேசினார்.

இடது முழங்காலை ஒடித்துக் கொண்டதுடனில்லாமல், ஒரு தாணுக்காரனிடமும் அகப்பட்டுக் கொண்டான்! இந்தச் செய்தி காட்டுத் தீயாகப் பரவி, கரும்பாயிரத்தின் வீட்டிலும் பிடித்துக் கொண்டது ஆச்சரியமில்லை யல்லவா?

வெகு நாட்களாகச் சந்தேகம் கொண்டிருந்த கோவில் அதிகாரி அன்று அரிச்சந்திரனைக் கையுமெய்யுமாக மரத்தின் மேல் பார்த்ததையும், அதே வழியில் எதேச்சையாக வந்து கொண்டிருந்த தாணுக்காரனிடம் அவர் முறையிட்டதையும், தாணுக்காரனைக் கண்டவுடனேயே பயந்து விழுந்து காலை முறித்துக் கொண்ட அரிச்சந்திரனைப் பற்றியும் ஊரார் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்களா? இதே அளவுச் செய்திகள் கரும்பாயிரத்தின் காதிற்கும் எட்டி யிருந்தன.

கரும்பாயிரமும் துர்க்கையும் அரிச்சந்திரனைக் கொண்டு போன கிராம ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். காலில் கட்டுடன் படுத்திருந்த அவன் அப்பொழுதுதான் தன் நினைவை யடைந்திருந்தான். அவன் கட்டிலின் சமீபமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த தாணுக்காரன் அவனது வாக்குமூலத்தைப் பதிய வைத்துக் கொண்டிருந்தான்.

"போலீசய்யா! அவரு மேலே குற்றமே இல்லீங்க—நான்தான் அவரைக் கோயில் மரத்திலே யிருந்து புளியம்பழம் உலுக்கச் சொன்னேன். என் பேரையே குறிச்சுக்குங்க!" என்று 'கணீ'ரென்ற பெண் குரலினால் அந்தக் கட்டிடமே எதிரொலித்தது!

அடுத்த கணம் — கிராமமே திகைப்படைந்ததை விட, அந்தத் தாணுக்காரனின் திகைப்பு அதிகமா யிருந்தது. அந்தத் தாணுக்காரன் கன்னியப்பனாகவா இருக்க வேண்டும்? பழகின தோஷத்திற்காகத் தன் காகிதத்தைக் கிழித்தெறிந்ததுடனில்லாமல், ஒரு பரம வெகுளியான பெண்ணின் இதய ஆழத்தையும் கூட அளந்து விட்டானல்லா கன்னியப்பன்? பூடகமான இந்த விகடிச சம்பவம் கிராமத்தையே நிறைச் செய்து கொண்டிருந்தது! கொஞ்ச நாட்களில் அரிச்சந்திரன் பரிபூரண குணமடைந்தான். ஒரு நாள் மாலை அரிச்சந்திரனிடம் அளவளாவ துர்க்கை வந்தாள்.

"என்னுங்க, இப்படியே பேசாமலிருந்தால் எப்படித்தான் பிழைக்கிறதாம்?" என்றாள் துர்க்கை அரிச்சந்திரனை நோக்கி.

"இது ஏதடா எளவா இருக்குது! அதைப் பத்தித்தான் ரோசனை பண்ணிக்கிட்டு இருக்கேன். அதற்குள்ளாரே, அறுவது நாழியும் 'தொண தொண'க்கிறயே!"

"இதிலே ரோசனை என்னா? எங்கப்பாரு கிட்டே சொல்லி ஒரு நல்ல சைக்கிள் வாங்கித் தரச் சொல்றேன். நீங்கள் சைக்கிளிலே போயி வியாபாரம் பண்ணிட்டு வர்றத்தை நான் பார்க்க வேணுமா?" என்று கூறிக் கொண்டே 'கலகல' வென்று நகைத்தாள் அந்த விஷமி!

அவன் அசட்டுக்களையுடன் நகைத்து விட்டு, "இந்தா, என்னை நொண்டிப் பயலுங்கிறதுக்காகவா பரியாசம் பண்றே—ஹூம்?" என்றான். அவன் முகம் மகிழ்ச்சியுடன் பரிதாபமாக இருந்தது. அந்த வாயாடிப் பெண்ணோ தொடர்ந்து நகைத்துக் கொண்டிருந்தாள்!

"துர்க்கை, அதிருக்கட்டும்; ஆசுபத்திரியிலே அன்னிக்குப் போய் நாடகமெல்லாம் சோடிச்சு அந்தப் போலீசுக்காரன் கிட்டேச் சொன்னியே. ஏதுக்கு அப்படி?—" என்று உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கக் கேட்டான்.

"ஏதுக்காகவா? அவசியம் உங்களுக்குச் சொல்லணுமோ? சொல்லாவிட்டால் என்னவாம்?" என்று கேட்டாள் துர்க்கை.

"பார்த்தியா, பார்த்தியா! என்னமோ கேட்டா ரொம்பப் பிகு பண்ணிக்கிறயே!"

"நான் சொல்லாமப் போனா உங்களுக்குத் தெரியாதுங்களா? எனக்கு எதிலே ரொம்பச் சந்தோசம் தெரியுமா?" என்று கேட்டு விட்டு ஒங்க சபதத்தைத் தோக்கடிச்சதுலே தான்" என்றாள் வாயாடித் துர்க்கை!

செந்தாமரையின் இதழை நோக்கிச் செல்லும் கருவண்டு போலிருந்தது, துர்க்கையின் முகத்தை நோக்கிச் சென்ற அவனது கரம்!

# ஆரோக்கிய ரகசியம்

## வி. என். குமாரசாமி

## 55. சாந்தி ஆசனம்

மற்ற ஆசனங்களில், உடலை நீட்டி, மடக்கி, உயர்த்திச் செய்ய வேண்டுமானால், இதில் உடலைத் தளர்த்திச் செய்ய வேண்டும். ஒவ்வொரு அவயவமும், ஒவ்வொரு பாகமும் தளர்த்த வேண்டும். இளக்க வேண்டும். அதை மனத்தினால்தான் செய்ய முடியும். மனம் அவ்வளவு சுலபத்தில் அங்கங்களைத் தளர்த்தி வைக்க முடியாது. பல நாள், பல தரம், நயமாய்க் கெஞ்சிக் கூவி, வேண்டிக் கொள்ள வேண்டும். உடன் சாந்தி ஜெபம் அளிக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது உண்டாகும் சுகம் அபரிமிதமானது, பலன் கணக்கற்றது. மனிதன் தன் சக்தியை உணருவான்.

இதைச் செய்யப் புகுவதற்கு முன் சாதகர்கள் சற்று, நமது உடல் அமைப்பை, உறுப்புகளைப் பற்றித் தெரிந்து கொண்டால் நல்லது. இல்லையானால் இதைச் செய்வது அசாத்தியம்.

நமது சரீர அமைப்பைப் படித்துத் தெரிந்து கொள்வது அப்படி ஒன்றும் பிரமாத காரியமல்ல. சிறிது முயற்சி செய்தால் ஒரு சில மணி நேரத்தில் படித்து விடலாம். சாதாரணமாய் நமது குழந்தைகள் படிக்கும் பள்ளிப் புத்தகங்களில் கூட இவைகளைக் காணலாம்.

பொதுவாய் உடல் என்றால் எந்தெந்த உறுப்புகள் எங்கெங்கு இருக்கின்றன என்று மட்டுமாவது தெரிந்தால் நல்லது. மேற்கொண்டு அதன் வேலைகளைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.


நமது உடலை மூன்று பாகமாகப் பிரிக்கலாம். (1) தலை (2) மார்பு, வயிறு. (3) கை, கால்கள். (1) தலையில் மூளை, கண்கள், காதுகள், மூக்கு, வாய், பற்கள், பிட்யூடரி, பீனியல்பாடி, தைராய்ட், பாரா தைராய்ட் முதலியன இருக்கின்றன. (2) மார்பில் சுவாசகோசம் அல்லது நுரை ஈரல், இருதயம், வயிற்றில் இரைப்பை, சிறு குடல், பெருங்குடல், பித்தப்பை, கல்லீரல், மண்ணீரல், பாங்கிரியாஸ், குண்டிக்காய், அட்ரேனல் கோளம் முதலியன. (3) கைகளில் தோள் பட்டைகள், முழங்கைக்கு மேல்பாகம், முழங்கைக்குக் கீழ்பாகம், விரல்கள் கால்களில் துடை, முட்டி, கெண்டைக்கால், பாதம் முதலியன. இதை மட்டும் தெரிந்து கொண்டால் போதும். இனி சவாசனம் செய்யும் விதத்தைப் பார்ப்போம்.

விரிப்பில் மல்லாந்து படுக்கவும். இரண்டு கால்களும் சேர்ந்தாற் போல் நீட்டி வைக்கவும். கைகள் பக்கத்தில் உடலைச் சேர்ந்தாற்போல் வைத்துக் கொள்ளவும். உள்ளங் கைகளையும், விரல்களையும் தன் இச்சையாகப் பாதி மூடியும், மூடாமலும் இருக்கலாம். கழுத்து நேராய் வளையாமல் இருக்க வேண்டும். பக்கங்களில் திருப்பாமல் நேராய் முகம் மேல் கூரையை நோக்கி இருக்கவேண்டும். கண்களைப் பூராவாகவும் மூடிக் கொள்ளலாம். அல்லது லேசாகப் பாதி மூடியும் இருக்கலாம். இவைகளில் எல்லாம் விறைப்பே கூடாது. தன் சுபாவப்படி விட்டுவிட வேண்டும். உடலைத் தளர்த்தி நெகிழ விடவும். படத்தைக் கவனியுங்கள். சற்றுகூட விறைப்பாய் உடலை வைத்துக் கொள்ளக்கூடாது. உடலில் எந்த பாகமும் பிகுவாய் இழுத்து வைத்துக் கொள்ளக் கூடாது. எல்லாம் நெகிழவிட்டுத் தளர்த்தியாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். இது முதல் படி.

மனசை வேறெதிலும் செல்லவிடாமல், எதையும் நினையாமல் எந்த எண்ணத்தையும் மனதில் நுழையவிடாமல் தடுக்கவும். உடல் அவயவங்களை கால் நுனி முதல், தலை முடிவரை ஒவ்வொன்றாய் மனதினால் கீழ் வருமாறு பாவித்து அனுபவிக்கவும். நல்ல வெய்யில் காலத்தில் உடலின் மேல் தென்றல் காற்று பட்டால் எவ்வளவு சுகமாய் இருக்கும்! அதை நினைவூட்டிக் கொள்ளவும். அக்காற்று சரீரத்தில் மேல் படுவதாகவும், அது ஊர்ந்து சரீரம் முழுவதும் பட்டு புளகாங்கிதமடைந்து இன்பம் அனுபவிப்பதாகவும் நினைத்துக் கொள்ள வேண்டும். வாய்க்கால்களின் ஓரங்களில் வண்டல் மண் காய்ந்து, பில்லைகளாய் பக்கு பக்காய் வாய்க்கால் தண்ணீரில் விழுந்து விடுவதைப் பார்த்திருப்பீர்கள். அதைப் போல், நமது சரீரத்திலுள்ள உபாதைகள், கஷ்டங்கள், நோய்கள், சோர்வுகள் எல்லாம் கழன்று கழன்று அந்த வசந்தகால நீரோடையில் காய்ந்துபோன மண் பத்தைகள் விழுவது போலவும் சோர்வு, நலிவு, களைப்பு எல்லாம் நீர்த்து பூரண சுகமாய் இன்பமாய் இருப்பதாகவும் மனதினால் நினைத்துக் கொள்ள வேண்டும். இது இரண்டாவது படி.

அதே இன்ப நினைவுடன், அதே நிலைமை கலையாமல் அவயவங்கள் ஒவ்வொன்றையும் நினைக்க வேண்டும். ஒவ்வொரு அங்கமாக நினைத்து, அந்தந்த அங்கத்திற்குத் தக்க சாந்தி ஜெபம் செய்து, உற்சாகம், ஊக்கம் அளித்துக் கடமைகளை நினைவுறுத்தி, தளர்ச்சியை அளித்து. 'நீ இளைப்பாறுவாயாக. உனக்குப் பூரண சுகம் கிடைப்பதாக' என்று மனதினால் நினைக்க வேண்டும். மனம் உடலின் உள் பாகத்தையே ஊர்ந்து செல்ல வேண்டும். மேல் பக்கமாக நினைக்கக் கூடாது.

சாந்தி ஜெபம்:—''கால் விரல்களே! உங்களுக்குத் தளர்ச்சி அளிக்கிறேன்; ஓம் சாந்தி. பாதங்களே! தளர்வீர்களாக; ஓம் சாந்தி. கெண்டைக்கால்களே! பலம் அடைவீர்களாக; தளர்ச்சி உண்டாகட்டும் ஓம் சாந்தி. முழங்கால்களே! விழிப்பாய் இருங்கள்; எந்த நோயும் சேர விடாதீர்கள்; ஓம் சாந்தி. துடைகளே தளர்வீர்களாக இதோ உங்களுக்குச் சுகமளிக்கிறேன்; ஓம் சாந்தி! மலக்குடலே! உன்னிடம் சேரும் மலங்களை ஒழுங்காய்த் தள்ளுவாயாக; மலச்சிக்கலே ஒழி; ஓம் சாந்தி. சிறு குடலே! நீ உத்தமன்; உன் கடமையைச் சரிவரச் செய்வாயாக; ஆகாரத்திலுள்ள சத்தை நன்றாகக் கிரகித்து ரத்தத்துடன் சேர்ப்பாயாக; ஓம் சாந்தி. ஏ! ஆகாரப்பையே! உன்னை இனி வருத்தமாட்டேன்; உகந்த ஆகாரத்தை, நேரப்படி அளிப்பேன்; நீயே என் வாழ்வின் ஆதாரம்; கடமைகளைச் செவ்வனே செய்வாயாக; ஓம் சாந்தி!



சாந்தி ஆசனம்

பித்தப் பையே! ஜாக்கிரதை! அளவான பித்தத்தை அளி; சோம்பேறித் தனத்தை விரட்டு; ஓம் சாந்தி. மண்ணீரலே! உன் சக்தி அபரிமிதம்; நீ சமய சஞ்சீவி; சுகமடைவாயாக; ஓம் சாந்தி. கல்லீரலே உன் கடமையைச் சரிவரச் செய்; ஓம் சாந்தி. பாங்கிரியாஸே! வரும் சர்க்கரையை நன்றாய் மாற்றுவாய்; உன் துணை மிக அவசியம்; ஓம் சாந்தி. அட்ரேனல் கோளமே! நீயே இருதயத்தை ஆட்டி வைக்கிறாய்; அமைதியுடன் நிதானமாய் உன் பணியை ஆற்று: ஓம் சாந்தி. ஏ! குண்டிக்காய்களே! உங்கள் துணை மிக இன்றியமையாதது; நீங்கள் விஷத்தை அகற்றுகிறீர்கள்; உறுதியுடன் வேலை செய்வீர்களாக; ஓம் சாந்தி. டயாப்ரமே! உன் அடியில் கிடக்கும் அவயவங்களை விட்டுவிடாதே; நல்ல பயிற்சி வாங்கு; ஓம் சாந்தி.

மனதை உள் முகமாய் நுரை ஈரல்களை நினைத்து அதன் ஒவ்வொரு சிறிய துவாரங்களிலும் ஆரோக்யம் நிறைந்து தளும்புவதாக பாவனை செய்து கொண்டு, "உன்னால்தான் உடல் வாழ்கிறது; நீயே பிராணனை அளிக்கிறாய்; கரியமில வாயுவைத் துரத்தி அடிக்கவும்: பிராண வாயுவினால் ரத்தத்தைச் சுத்தம் செய்யவும்; க்ஷயம், காசக்கிருமிகளுக்கு இடம் கொடாதே; என்றும் ஆரோக்யமாய் இரு; ஓம் சாந்தி. ஏ! இருதயமே! என் அப்பனே! உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்" என்று மனசால் அதை நினைத்து விட்டுப் பிறகு, "நீ மிகவும் பலவான்; சத்தியவான்; இவ்வுடலைக் காப்பது உன் கடன்; சரீர சதைகளுக் கெல்லாம் ரத்தத்தைப் பாய்ச்சி அனுப்புவாயாக; புத்துயிர் உனக்கு அளிக்கிறேன். ஓரே நிதானமாய் அமைதியாய் உன் பணியாற்று: ஓம் சாந்தி. தோள்களே! நீங்கள் பலவான்கள் அழகை அளிப்பவர்கள்; ஓம் சாந்தி. கைகளே; நீங்கள் ஆரோக்கியமாய், சுகமாய் இருப்பீராக; ஓம் சாந்தி. விரல்களே! நீங்கள் சிருஷ்டியின் துணை; நீண்ட நாள் ஆரோக்யமாய் இருப்பீர்களாக. உங்களைத் தளர்த்துகிறேன்; ஓம் சாந்தி.

"தைராய்டே! உன்னத உயிர்த் துணைவா! நீயே எல்லாவற்றிற்கும் கர்த்தா; உன் கிருபையில்லாது இவ்வுடற் உய்யாது; நீ சிரஞ்சீவியாக வாழ்வாயாக; இதோ உனக்குப் பூரண சக்தி அளிக்கிறேன்; ஓம் சாந்தி. பாராதைராய்டே! நீ தைராய்டுக்குத் துணை புரிந்து, சரியாய் கவனித்துக் கொள்; ஓம் சாந்தி. வாயே! நீ உத்தமன்; நல்ல வஸ்துக்களை உனக்களிப்பேன்: அடக்கமாய் இரு; ஓம் சாந்தி. பற்களே! நீங்கள் உறுதியுடையவர்கள்; சுத்தமாய் ஆரோக்கியமாய் இருப்பீர்களாக; ஓம் சாந்தி. நாசித் துவாரங்களே பிராணனை அளிக்கும் வாசல்களே! சுத்தமாய் ஆரோக்கியமாய் இருங்கள்; ஓம் சாந்தி. ஏ! கண்களே! கண் மணிகளே! நீங்கள் உடலின் ஜன்னல்கள்; உங்கள் மூலம் உலகைப் பார்க்கிறேன்; உங்கள் பார்வை நீடிப்பதாக; ஓம் சாந்தி. காதுகளே! உங்கள் அமைப்பு விசித்திரமானது; நுட்பமானது; வாழ்க உங்கள் சேவை; ஓம் சாந்தி. ஏ பிட்யூடரியே; நீயே கர்த்தா; அரசன் உன் துணையில்லாமல் வாழ முடியாது; உன் கடமைகள் அனந்தம்; என்னை வாழ்விப்பாயாக; மனிதனுக்குவாயாக; மகத்தான சக்தி உனக்கு அளிக்கிறேன், ஓம் சாந்தி. பினியல் பாடியே! பிட்யூடரிக்கு நன்கு துணை புரிவாயாக; ஓம் சாந்தி. மூளையே! வாழ்க! நீ விசித்திரப் பொறி; உன் ஆணையால் சகலமும் நடக்கிறது. இதோ அமைதி அளிக்கிறேன். சக்தி அளிக்கிறேன் என்று மூன்று தடவை மனதால் நினைக்கவும். இது மூன்றாவது படி.

பிறகு மனதைப் புருவ மத்தியில் நிறுத்தித் தியானத்தில் இருக்கவும். இது நான்காவது படி. தியானத்தில் இருக்கும் போது, குத்துவிளக்கின் திரி தீபம் போல் எரிவது போல் பாவித்து ஜோதியை நினைத்துக் கொள்ளலாம். ஸஹஸ்ராரமாகிய தாமரை மலர்வதாகவும், ஜோதி மயமாய்த் திகழ்வதாகவும் பாவனை பண்ணித் தியானத்தில் இருக்கலாம். ஓம் எனும் பிராணவம் பிரகாசத்துடன் சுடர்விட்டு ஜொலிப்பதாகவும் நினைத்துத் தியானம் பண்ணலாம். எல்லாம் புருவ மத்தியில் இருப்பதாகவே மானசிகமாக நினைத்துத் தியானம் பண்ண வேண்டும்.

மூன்று படிகளும் செய்யக் குறைந்தது ஆறு, ஏழு நிமிஷங்களாகும். நான்காவது படியாகிய தியானத்தில் குறைந்தது ஐந்து நிமிஷமாவது இருக்க வேண்டும். மேற்கொண்டு அவரவர்கள் இஷ்டப்படி பத்து பதினைந்து நிமிஷங்கள் கூட இருக்கலாம். ஆனால் தூங்கி விடக்கூடாது.

மேற்படி சாந்தி ஜெபத்தை மனப்பாடம் செய்து கொள்ளலாம். அல்லது சாந்தி ஜெபத்தின் போது வரிசைப்படி அவரவர்கள் இஷ்டமாய் கற்பனை செய்தும் சொல்லலாம்.

சாந்தி ஜெபம் சொல்லி வரும் போது சில அவயவங்களின் பெயர்களைத் தமிழில் சொல்லாமல் ஆங்கிலத்தில் சொல்ல வேண்டி யிருப்பதற்கு வருந்துகிறோம். அந்த அவயவங்களுக் கெல்லாம் இன்றும் சரியான தமிழ்ப் பதங்களைக் கண்டு வழக்கத்தில் தாராளமாய் வரவில்லை. எப்படிச் சொன்னால் என்ன! கடவுளை யார் யார் எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும், அது கடவுளை நினைத்துச் சொல்லுவதால் அது கடவுளையே சேரும். அது போலத்தான் இதுவும். (தொடரும்)

# கோடிக்கணக்கான மக்களுக்கு ஓர் நிவாரணி

## தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசைவலி, கீல்வாதம், நரம்புவலி, இவைகளிலிருந்து



இரண்டே அணாவுக்கு உங்களுக்கு அனாசின் மாத்திரைகளைக் கொண்ட முதல் சிகிச்சை பாக்கெட் கிடைக்கும். எந்த அவசரகாலத்திலும் திருப்திகரமாயும், விலை குறைவாகவும், அபாயமின்றியும் எல்லோருக்கும் எப்பொழுதும் உதவக் கூடியது அனாசினே! நோயை எதிர்க்கும் அனாசின் ரசாயன முறைப்படி பினாசிடின், கொயினா, காப்பின், அஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட், ஆகிய பொருள்களைச் சேர்த்துச் செய்யப்பட்டது நோயாளிகளுக்கு அதி சீக்கிரமாயும், அபாயமில்லாமலும், உத்தரவாதத்துடனும் குணத்தைக் கொடுக்கக் கூடியது. இன்றே அனாசினை உபயோகித்து உங்கள் நோயை போக்கிக் கொள்ளுங்கள்.




# அனாசின்

TRADE MARK REGISTERED




**விலைகள்**

இந்தியாவில தயாரிப்பவர்கள: ஜியாப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட், பம்பாய் 1. டிரேட் மார்க்கின் உரிமையாளர்: ஒயிட்ஹால் பார்மக்கல் கம்பெனி, நியூ யார்க், யூ. எஸ். ஏ.

2 கொண்ட பாக்கட்டுகள்
14 கொண்ட ட்யூபுகள்
50 கொண்ட ஜாடிகள்

LAS. (B)

“வாங்க மிகச் சிறந்தவை”

**Platignum**


REGD MADE IN ENGLAND

பிளாட்டினம்

பேனுக்கள் பாஸ்பாயிண்டுகள்

LAS (8)

---




டாக்டர்கள் இந்த அற்புதமான
பெப்ஸை சிபார்சு செய்கிறார்கள்

# PEPS

**இருமல், ஜலதோஷம், குளிர், தொண்டைப்புண், இன்புளுயன்ஸா, சளி ஜுரம், மார்வலி, சுவாச கோச நோய்கள் முதலியவற்றிற்கு உகந்தது.**



தொண்டைப் புண் ஆபத்தைத் தரும் விஷக் கிருமிகளை உற்பத்தி செய்கிறது. அவை இதயத்தையும் சுவாச கோசத்தையும் தாக்குகின்றன. உடனே பெப்ஸ் மாத்திரைகளை மெல்லுங்கள். பெப்ஸ் விரைவில் உங்கள் தொண்டைக்கு இதம் தந்து கிருமிகளைக் கொன்றுவிடுகிறது. பெப்ஸ உங்கள் தொண்டையிலும் மார்பிலும் உள்ள எரிச்சலையும் ரணத்தையும் குணமாக்குகிறது. பெப்ஸ் மூச்சு விடுவதைச் சுலபமாக்குகிறது. பெப்ஸிலிருக்கும் மருந்துச் சத்து உங்கள் தொண்டைக்குள் சென்று சுவாசக் குழாய்கள் வழியாக சுவாச கோசத்தை அடைகிறது. அதனால்தான் பெப்ஸ் அற்புத மருந்தாக விளங்குகின்றது.

பெப்ஸ் தொண்டைப் புண், மார்வலி நோய் நிவாரண மாத்திரைகள் FPY 1

ஏஜண்டுகள்: வோல்க்ஸ், தாதா & கோ., லி., மதராஸ்

# டோஸ்

இம்மருந்து




உட்கொண்டால்

# அஜீர்ணத்தை குணப்படுத்துகிறது

ஆம்! ஒரே டோஸ் மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் அஜீர்ணத்தையும், வலியையும், அசௌகரியத்தையும் போக்குகிறது. மார்வலி, உப்புசம் குமட்டல், புளியேப்பம், வயிற்றுவலி முதலிய கோளாறுகளை அதிதுரிதமாகவும் ஆச்சரியகரமாகவும் குணமாக்கும் சக்தி இம்மருந்துக்கு எப்படிக் கிடைத்தது தெரியுமா? மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் சிறந்த சாஸ்திரிய முறையில் தயாரிக்கப்பட்டிருப்பதனால்தான்.

**சாப்பாட்டு நேரங்களில் சந்தோஷம் அளிக்கிறது**

ஏன் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்? இன்றே ஒரு டோஸ் பரீக்ஷித்துப் பாருங்கள்; ஆனால் அசல் மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடரே வாங்குகிறீர்களா பாருங்கள். "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்று கையெழுத்து புட்டியிலும், டப்பியிலும் இருக்கவேண்டும்.




**மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர்**

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன்,ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

# பைல் பீன்ஸ்

## அவர்கள் இழந்த ஆனந்தத்தை திரும்பத் தந்தது









அவளது வசீகரத் தோற்றமும், ஒடிசல் சரீரமும் போய் விட்டது. அவன் ஆயாசமடைந்தான்; சோர்ந்து போனான்; பிணியுற்றான்.

அவர்கள் இருவரும் மருந்து போர்ட் அங்கீகரித்த பைல் பீன்ஸை ஒழுங்காக உட்கொள்ளத் துவங்கினார்கள். பைல் பீன்ஸ் அவளுக்கு மீண்டும் யௌவனமும் மெல்லிய தோற்றமும் கவர்ச்சியும் அளித்தது. பைல் பீன்ஸ் அவனுக்குப் பூரண வலிமையையும், புதிய சக்தியையும், மகத்தான வெற்றியையும் தந்தது. பைல் பீன்ஸ் மலச்சிக்கல், வயிற்று வலி, அசதி முதலியவற்றை குணப்படுத்துகிறது. பைல் பீன்ஸ் உங்களுக்கு வாலிபத் தோற்றத்தைத் தந்து மெல்லிய அழகான தோற்றத்தை அளிக்கிறது.

**மருந்து போர்ட் அங்கீகாரம் பெற்ற இந்த அசல் பைல் பீன்ஸையே பார்த்து வாங்குங்கள்**

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

FBY: 2



## வளரும் குழந்தைகளின் போஷிப்பிற்கு இன்றியமையாதது

குழந்தைகளின் உடலைப் பராமரித்து வளர்ப்பதில் ஒரு இணையற்ற ஏஜண்டாக விளங்குகிறது விடோபேரின். உடலில் ரத்தமின்மை, வைடமின்கள் குறைவு, மற்றும் உடலுக்குப் பலவீனத்தை அளிக்கும் கோளாறுகள் பலவற்றையும் போக்க இது சிறந்த டானிக்காக விளங்குகிறது.

# விடோபெரின்

தயாரிப்பாளர்:

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர்

விற்பனை ஏஜண்டுகள்:

பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், தபால் பெட்டி நெ. 63 சென்னை

BZ. 36 TM.

# உங்கள் புன்னகை பிரகாசிக்க —





## —விஸ்டம் உபயோகியுங்கள்

### சரியான உருவில் அமைந்துள்ள நைலான் டூத் பிரஷ்

வெண்மையான, பிரகாசமான பற்கள், நடுத்தர வயதினருக்கு மோனமனத் தோற்றத்தையும், திட ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. விஸ்டம் டூத் பிரஷ் உங்களுக்கு உதவியளிக்கட்டும். இதன் பிரஷ் அமைப்புடைய நைலான் குஞ்சங்களும், சௌகரியமான கைப்பிடியும் பற்களை சுலபமாகவும் துப்புரவாகவும் சுத்தம் செய்ய உதவுகின்றன. பற்களுக்குக் கேடு உண்டாகும் இக்கட்டான பல் இடுக்குகளிலும் விஸ்டம் பிரஷ் புகுந்து சுத்தம் செய்கிறது. விஸ்டம் பிரஷ்கள், சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற சைஸ்களில் தூசி துப்பும் புகமுடியாத உறைகளில் எல்லாக் கடைகளிலும் விற்கப்படுகின்றன.

டிஸ்ட்ரிபியூடர்கள்: ஜே. எல். மாரிசன், ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி 6527, பம்பாய் 26 & கிளைகள்.

WT.27




மதராஸ் ஆபீஸ்:

5/149, பிராட்வே

ஜி. டி., மதராஸ்



'கோலினாஸ்'

புன்னகையில்

குணமேன்மை

ஒளிர்கிறது!

நுரை தான் இந்த



இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:

ஜியோப்ரே மானர்ஸ் & கோ. லிட்.,

பம்பாய் 1

கிளைகள்: கல்கத்தா-மதராஸ்-டில்லி.

உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

# ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...




ஒரு தனவந்தர் ப்ளூ ஜில்லெட்டை விட உயர்ந்த ரக பிளேடை வாங்க முடியாது. ஆயினும் இதன் விலை மிகவும் சரசமாயிருக்கிறது. இந்த புகழ்பெற்ற பிளேடுகள் நீடித்தகாலம் உழைப்பதால் ஒவ்வொரு மனிதனும் சமமான சுகபோகத்தை அனுபவிக்க முடியும். ப்ளூ ஜில்லெட் பிளேடுகளையே வாங்குங்கள். (மின்சாரத்தால் கெட்டியாக்கப்பட்டதும் பிரத்தியேகமாக பதப்படுத்தப்பட்டதுமான எஃக்கு தயாரித்தது). உங்கள் நாகரீகமான தோற்றத்தினால் வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர்களிடையே நீங்களும் இடம் பெறுங்கள்.




# ப்ளூ ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணு


டிரக்குகள்
மற்றும்
பஸ்ஸுகளுக்கு
சிவப்பு வளையத்தைக் கவனித்து வாங்கவும்
சூப்பர் இந்தியா



## எப்படித்தான் மலேரியா என் குழந்தையை பயமுறுத்தியது!

## 'பாலுட்ரின்' தான் அவளைக் காப்பாற்றிக் கொடுத்தது



என் குழந்தையை அவளது மாமன் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகாமலிருந்திருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். அவள் மீண்டும் பள்ளிக்குச் செல்லவேண்டிய தினத்தன்று மலேரியாவில் படுத்துக்கொண்டாள். விரைவில் பலவீனமடைந்து நோஞ்சலாய்ப் போனாள். பயங்கரமான ஜுரத்துடன் அவளுக்கு எப்படித்தான் நடுக்கல் வந்தது தெரியுமா? அதை நிறுத்தவே முடியவில்லை. பிறகு ஒரு நண்பரின் யோசனைப்படி தினமும் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை கொடுத்துவரத் தொடங்கினோம். மூன்று அல்லது நாலு நாட்களில் ஜுரம் விட்டுவிட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நாங்கள் எல்லோருமே பிரதி ஞாயிற்றுக்கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை உட்கொண்டு வருகிறோம். குடும்பத்திலே யாருக்கும் மலேரியா இல்லை.


ICI

**பாலுட்ரின்***

டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்




Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

# நீரிழிவு

## ஏழு நாட்களில் குணமாகும்!

எவ்வளவு நாட்பட்டதாயினும், மிகக் கடுமையாக இருப்பினும் நவீன ரஸாயன முறைத் தயாரிப்பான வீனஸ் சார்ம் வியாதியை முற்றிலும் குணமாக்கி விடும். அடங்காத பசி, மரண தாகம், அடிக்கடி சிறுநீர் பிரிதல், சொரி சிறங்கு ஆகிய இவைகளே இவ் வியாதியின் முக்கிய அறிகுறிகள். இதை கவனிப்பின்றி விட்டு விட்டால் கட்டி, பிளவை, கண் கோளாறு முதலிய உபத்திர வங்களில் முடியும். வீனஸ் சார்ம் ஆயிரக்கணக்கானவர்கள் மரிப்பினின்றும் பிழைக்க உதவியுள்ளது. உபயோகித்த மறு தினமே நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து இதமளிக்கும். இரண்டு மூன்று தினங்களில் பாதி குண மடைந்ததாக நீங்களே உணர்வீர்கள். ஆகார நிபந்தனை கிடையாது. இலவசமான விபரங்கள் அடங்கிய காட்லாகிற்கு எழுதவும்

50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 6-12-0

(தபால் செலவு இலவசம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரடரி (K.M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா



மீண்டும் பாதி விலைக்கு குறைவான சலுகை!

15 நாட்களுக்கு மட்டும்


புகழ் வாய்ந்த ஸ்விஸ் பாக்டரியில் தயாரித்த கைக் கெடிகாரங்கள்.

ஒவ்வொன்றும் ஐந்து வருட உத்திரவாதம் கொண்டவை.



| | ஒரிஜனல் விலை | தற்போது விலை |
|---|---|---|
| ஜெர்மன் பாக்கெட் வாட்ச் | 24/- | 11/- |
| ,, உயர் ரகம் | 28/- | 13/- |
| இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ் | 40/- | 19/- |


No. 525



Size 6½'''

| | | |
|---|---|---|
| 15 ஜுவல் ரோல்டு கோல்டு | 98/- | 45/- |
| 15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ் | 100/- | 48/- |


No. 526



Size 10½'''

| | | |
|---|---|---|
| 15 ஜுவல் ரோல்டு கோல்டு | 98/- | 48/- |
| 15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ் | 110/- | 52/- |

No. 527



Size 5¼'''

பிராந் ஷேப்

| | | |
|---|---|---|
| 5 ஜுவல் க்ரோம் கேஸ் | 45/- | 22/- |
| 5 ஜுவல் ரோல்டு கோல்டு | 52/- | 25/- |

இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபால் செலவு இலவசம்.

PIONEER WATCH Co

POST BOX NO 11428 CALCUTTA

Regd. No. M. 4392

*Registered as a newspaper in Ceylon*




# முள்ளங்கி ஒரு சத்துள்ள உணவு

எலும்புகள், பற்கள், சுத்தமான இரத்தம் இவைகளுக்கும் பொதுவாக உடல் நலத்திற்கும் அவசியமான தாதுப்பொருள்களும் விடமின்களும் முள்ளங்கியின் கிழங்கிலும் இலைகளிலும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் எளிதில் கிடைக்கும் முள்ளங்கியை நமது சமதிட்ட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உடல் நலத்திற்கும், வலிமைக்கும் தேவையான சமதிட்ட உணவில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகையிலிருந்தும் ஒன்றோ அல்லது மேற்பட்டோ உணவுகளை ஒவ்வொரு சாப்பாட்டிலும் சேர்த்துக்கொள்வது அவசியம். (1) விடமின்கள்: பழங்கள், சமைக்காத காய்கறிகள், கோதுமை, சால்; (2) தாதுப்பொருள்கள்: பால், முட்டைகள், பாலாடை, மீன், பசலைக்கீரை; (3) புரதசத்துக்கள்: பால், முட்டைகள், கொட்டைகள், இறைச்சி, பருப்புகள், மீன்; (4) மாவுசத்துக்கள்: பலவகை தானியங்கள், உருளைக்கிழங்கு, வாழைப்பழம்; (5) கொழுப்புகள்: கொட்டைகள், தாவர எண்ணெய்கள், கொழுப்புள்ள மாமிசம். சமையலுக்கு, மிகவும் சிறந்த கொழுப்புகளில் ஒன்றான டால்டா உபயோகிக்கவும். இது எல்லாவித சமையல்களுக்கும் உகந்தது. அன்றியும் ஊட்டமளிப்பது. சீல் செய்த டின்களில் புதிதாகவும், துப்புரவாகவும் உங்களுக்கு கிடைக்கிறது.




உங்கள் குழந்தைகள் சரியான உணவுகளை சாப்பிடுகிறார்களா?

இவை பற்றியோ சமையலுக்கு இன்றியமையாத எந்த விஷயம் பற்றியோ எழுதுங்கள்!

## தி டால்டா அட்வைசரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1


HVM 156-X30 TM